# களத்தில்


அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தை விட, பொது மக்களின் ஆன்மீக உறுதியை உடைக்க வேண்டும் என்பதில்தான் அதிக அக்கறை காட்டுகின்றனர்.

- தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2027 விடை 15 (29.05. 1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு: 60 p


# துப்பாக்கி முனையில் தமிழரின் அரசியல் பணிவை பெறமுயலும் சந்திரிகாவின் சர்வாதிகார ஆட்சி !

## ❖ ஆக்கிரமித்த பகுதிகளில் இராணுவ அட்டூழியங்கள்
## ❖ நிலைமை வழமைக்குத் திரும்புவதாகப் பொய்ப் பிரச்சாரம்



**யாழ். குடாநாடு உட்பட சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமிழீழப் பகுதிகளில் துப்பாக்கி முனையில் தமிழ் மக்களின் அரசியல் பணிவைப் பெறலாம் எனும் பகற்கனவில் சந்திரிகாவின் சர்வாதிகார சிறிலங்கா அரசு இறங்கியுள்ளது.**

மக்கள் இராணுவ ஆயுதக்கட்டுப்பாட்டுக்குள் சிக்குண்ட நிலையில் உணவுக்காகவும் அத்தியாவசியப் பொருட்களுக்காகவும் இராணுவ முகாம்களுக்கு அருகில் பல மணிநேரம் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய அவல நிலையில் இதனைப் புகைப்படங்களாக்கி, தாம் உணவு விநியோகம் செய்வதாகச் சிறிலங்கா அரசு பொய்ப் பிரச்சாரங்களை முடுக்கிவிட்டுள்ளது. அவ்வாறே இராணுவக் கண்காணிப்பில் உள்ள தொடர்புச் சாதனங்கள் ஊடாக மக்களை வலுக்காட்டாயமாகத் தொடர்புகளை மேற்கொள்ளவைத்து தொலைபேசி, போக்குவரத்து, மருத்துவ வசதிகள் அளிக்கப்படுவது போல் உலகுக்குப் பொய்யான தகவல்களை சிறிலங்கா வழங்கிவருகிறது. இதேவேளையில் இளைஞர்களை வகை தொகையற்ற முறையில் கைது செய்தும், பலரை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனப் படுகொலை செய்தும் சிறிலங்காவின் பாதுகாப்புப் படைகளும் அதன் அங்கங்களான தமிழ்க் கூலிப்படைகளும் இராணுவ அட்டூழியங்களை அதிகரித்துள்ளன.

இப் படுகொலைகள் தொடர்பாக மெதுவாக வெளிவரும் தகவல்களிலிருந்து ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பலர் கூட்டாக இனக்கொலைக்கு உள்ளான துயரச் செய்திகள் தெரியவருகின்றன.

### 3 பெண்கள் குத்திக் கொலை

சரசாலையில் உள்ள சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் 3 பெண்கள் சிறிலங்கா இராணுவத்தால் பாலியல் வன்முறை நோக்குடன் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறிரஜனி (வயது 18), புவனேஸ்வரி (வயது 36), இராஜேஸ்வரி (வயது 38) ஆகிய இம் மூன்று பெண்களும் இராணுவத்தினரின் பாலியல் நோக்குகளுக்கு இணங்க மறுத்தமைக்காகக் குத்தப்பட்டுள்ளனர். இருபெண்கள் மந்திகை வைத்தியசாலையிலும் மற்றப் பெண் தேவராளி வைத்தியசாலையிலும் உயிர் துறந்துள்ளனர்.

இப்படுகொலைகள் தொடர்பாக வழமைபோல் சிறிலங்காவின் ரூபவாகினி தொலைக்காட்சி நிறுவனம், விடுதலைப் புலிகள் இவர்களிடம் நகைகளைக் கேட்டதாகவும் கொடுக்க மறுத்ததினால் குத்தியதாகவும் உண்மைக்கு மாறான தகவலை வெளியிட்டது. இந்தப் பொய்ப் பிரச்சாரத்தில் கூட முன்னுக்குப் பின் முரண்பாடான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. பலாலியில் இருந்து தகவல் ஒலிபரப்பும் இராணுவ வானொலியோ, இக் காயப்பட்ட பெண்களைக் காப்பாற்ற விரைந்த இரண்டு இராணுவத்தினரையும் விடுதலைப் புலிகள் குத்திக் கொன்றதாகக் கூறியிருக்கிறது. கொழும்பிலிருந்து வெளிவரும் சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டிலுள்ள செய்தித்தாள்கள், இப்பெண்களிடம் விடுதலைப் புலிகள் நகைகளைக் கேட்கவில்லை – அவர்களுடைய அடையாள அட்டைகளைப் பறிப்பதற்காகவே இவ்விதம் செய்தனர் எனக் கயிறு திரித்துள்ளன.

குமரபுரத்தில் இடம்பெற்ற அப்பாவி மக்கள் 24 பேரதும் கோரத்தனமான படுகொலைகளுக்கு இராணுவத்தினரே பொறுப்பு என ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னரும் அது குறித்து எவ்வித நீதியான நடவடிக்கைகளையும் செய்யாதுவிட்ட

தொடர்ச்சி 2 ம் பக்கம்...


❖ தாயகம் நோக்கிய பயணம்...
❖ எம் மண் உயிர்க்கும் (சிறுகதை)
❖ கவிதைக்களம்
❖ எத்தனை எத்தனை ...
❖ 900 நாட்கள் முற்றுகை
❖ திருப்பு முனை
❖ தென்தமிழீழத்தில் இரத்த ஆறு ...
❖ உலகப் பெண்ணினத்திடம் ஒரு வேண்டுகோள்.

உள்ளே... ☞


# "புலிகளுடன் நிமிர்ந்து வாழ்ந்த நாம் படைகளுடன் குனிந்து வாழ்கிறோம்"

## வலிகாமத்திலிருந்து வந்த யுவதி தெரிவிப்பு

"வலிகாமம் களங்கப்பட்டுக் கிடக்கின்றது. அங்கு நாங்கள் காலங்காலமாக வாழ்ந்த இடங்களுக்குத் திரும்பினோம்தான். ஆயினும் அங்கு எவராலும் உள்ளார்ந்த மகிழ்வுடன் திரிய முடியவில்லை. வீதிகளில் நடமாடுகின்றோம், ஆனால் நிமிர்ந்து நடக்க முடியவில்லை. தலை குனிந்துதான் எங்களால் செல்ல முடிகின்றது.ஏனெனில் இராணுவத்தின் பிடியில் இருக்கின்றோம். எந்த நேரமும், என்னமும் நடக்கலாம் என்ற பயம் உள்ளது. மாறாக விடுதலைப் புலிகள் அங்கிருந்த போது நாங்கள் நிமிர்ந்து நடந்தோம். அவசரவேலை காரணமாகவே நாம் தற்போது வீதியில் நடமாடுகின்றோம்.

ஈருருளிகளிலும், மோட்டார் வண்டிகளிலும், கால்நடையாகவும் இராணுவத்தினர் உலா வருகின்றனர். கச்சேரி, நல்லூர் வீதி, யாழ். செயலக சுற்றாடல், கண்டி வீதி, கொழும்புத்துறை, அரியாலை, யாழ். நகரம் போன்ற பகுதிகளில் சேதமடையாது இருக்கும் வீடுகளை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள ஆசீர்வாதத்தார் தேவாலயத்தின் பின்புறம் இடிந்து விழுந்த நிலையில் இருக்கின்றது.

கேணல் கிட்டு சிறுவர்பூங்கா காடுபோல் காட்சியளிக்கிறது. யாழ். செயலகத்திற்கு முன்னால் உள்ள

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# துப்பாக்கி முனையில் தமிழரின் அரசியல் ...

சிறிலங்கா அரசு தற்பொழுது வடக்கிலும் தனது இராணுவத்தினரின் அட்டூழியங்களுக்கு நியாயங்களும் சமாதானமும் கூறி அவற்றை வேகப்படுத்தி வருகிறது. இதனால் தமிழ்ப் பெண்களது உயிரும் உடலும் எந்நேரமும் ஆபத்தை எதிர்நோக்கும் அவலநிலை தோன்றியுள்ளது.

## மட்டுவிலில் குழந்தை உட்பட அறுவர் வெட்டிக்கொலை!

தென்மராட்சி–மட்டுவிலில், வீடொன்றினுள் திடீரெனப் புகுந்த சிங்கள் இராணுவக் குண்டர்கள், வீட்டில் இருந்த இரண்டு வயதுக் குழந்தை உட்பட ஆறு பொது மக்களை கோரமாக வெட்டிக்கொலை செய்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் நான்கு ஆண்களும், ஒரு பெண்ணும் அடங்குவர். கொல்லப்பட்ட பெண், காமவெறி கொண்ட இராணுவக் குண்டர்களால் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளான நிலையிலேயே கொல்லப்பட்டுள்ளார். வீட்டில் இருந்து மேலும் மூன்று பெண்கள், பாலியல் வன்முறைக்கு உள்ளானதுடன், கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். மேற்படி மூன்று பெண்களும் மயக்கமுற்ற நிலையில் மீட்கப்பட்டு, மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந்துள்ளனர்.

## கணவன் வெட்டிக்கொலை மனைவி மீது பாலியல் பலாத்காரம்!

கொடிகாமத்தில் நகைக்கடை உரிமையாளர் ஒருவர் கோரமான முறையில் சிறிலங்கா இன வெறிப்படையால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். ஆறுமுகம் சுகுமாரன் என்பவரே அவரது வீட்டில் வைத்துக் கொல்லப்பட்டுள்ளார். அவரது மனைவி, இராணுவக் காடையர்களால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதுடன், வெட்டிக் காயப்படுத்தப்பட்டுமுள்ளார்.

கடந்த 19ம் திகதி கொழும்புத்துறையில், தேவாலயத்தில் வழிபட்டுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த இளம்பெண் ஒருவர், இராணுவ வெறியர்களால் வழிமறிக்கப்பட்டு, பாழடைந்த வீடொன்றுக்கு இழுத்துச் செல்லப்பட்டு, பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

நுணாவிலில் கடந்த 5ஆம் திகதி பத்தொன்பது வயது இளம்பெண் ஒருவரை கடத்திச் சென்ற மூன்று இராணுவத்தினர் கூட்டு பலாத்காரத்துக்கு அவரை ஆளாக்கி அப் பெண் நினைவிழந்த நிலையில் அவருடைய வீட்டுக்கு அருகில் போட்டுவிட்டுச் சென்ற மற்றொரு சம்பவமும் முன்னர் வெளியாகியிருந்தது மக்கள் அறிந்ததே.

## வன்னிக்கு தப்ப மக்கள் முயற்சி

சிறிலங்கா இராணுவக் குண்டர்களின் கொலை, பாலியல் வன்முறையில் இருந்து தப்பி வெளியேறும் முயற்சியில் மக்கள் ஈடுபட்டுள்ளதாக சாவகச்சேரியில் இருந்து வன்னிக்குத் தப்பிச் சென்றுள்ள பொதுமகன் ஒருவர் தெரிவித்துள்ளார். அங்குள்ள மக்கள் உயிராபத்தை ஒவ்வொரு கணமும் எதிர்நோக்கியபடியே வாழ்கின்றனர். அநேகர் வன்னிக்கு வரும் வழிகுறித்தே யோசித்துக் கொண்டிருக்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேபோல் கொலை மிரட்டலுக்கு உள்ளான கிராமசேவகர் அலுவலக ஊழியர் ஒருவர் பெரும் பிரயத்தனத்தின் பின் குடும்பத்துடன் வன்னி சென்றடைந்துள்ளார். இவரிடம் இராணுவம் மாவீரர் குடும்ப உறவினர்கள், போராட்ட ஆதரவாளர்களின் விபரப் பட்டியலை தருமாறு மிரட்டியதுடன் தவறினால், அவர் கொலைசெய்யப்படுவார் எனவும் எச்சரித்திருக்கிறது.

## பலவந்தமாக அனுப்பப்படும் மக்கள்

இது ஒருபுறமிருக்க யாழ். குடாநாட்டுக்குள் மக்களை பலவந்தமாக ஆயுதமுனையில் இறக்குமதி செய்யும் வேலைகளில் சிறிலங்காப் படையினர் இறங்கியுள்ளனர். வவுனியாவில் இருந்து 5,000 பேரை ஒருமுறைக்கு 50 பேரை ஏற்றிச் செல்லும் விமானத்தில் 100 முறை பறந்து யாழ். குடாநாட்டுக்குள் இறக்கத் திட்டமிட்டு, செயற்பட்டும் வருகின்றனர். இதற்கான பொருண்மியச் செலவுகளையும், வலுக்கட்டாயத் தன்மையையும் இனங்கண்ட பிரித்தானியா ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தியாளர் இம்முயற்சி நிலைமை வழமைக்குத் திரும்புவதாக வெளிநாடுகளுக்கு காட்டுவதற்கான சிறிலங்காவின் தந்திரச் செயற்பாடே என வர்ணித்துள்ளார்.

மேலும் சிறிலங்கா அரசு, யாழ். குடாநாட்டை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திரு ப்பதாக கூறியபோதிலும் அவர்கள் ஆயுதப் பிரயோகம் இன்றி நடமாட முடியாத சூழ்நிலையிலேயே உள்ளனர். அதேவேளை வெளியிடங்களிலிருந்து வரும் தபால்களை தமது முகாம் முகவரிக்கு அனும்பும்படியும் தாம் அவற்றை விநியோகிப்பதாகவும் விடுத்த அறிக்கையானது, அப்பகுதிகளில் சிறிலங்கா அரசு இராணுவ ஆட்சியை நடாத்துகிறது என்பதை தெளிவுபடுத்தியுள்ளது.

இவ்வாறாக இராணுவ ஆட்சியை பயங்கரவாத நடவடிக்கைகளுடாகவும், பல்லாயிரக்கணக்கான ஆளணிகளுடனும் யாழ். குடாநாட்டில் தொடங்கியுள்ள சிறிலங்கா அரசு, வெளிநாடுகளிடம் தமிழர் பிரதேச புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்துக்கென நிதி உதவிகளைக் கோரியுள்ளது. இவை வழங்கப்பட்டால் தமிழ் மக்களை மேலும் இராணுவ ஆட்சிக்குள் வைத்திருப்பதற்கான ஏற்பாடுகளுக்கே பயன்படும் என்பது தெளிவான ஒன்றே.

## சந்திரிகாவின் சர்வாதிகாரத்தனம்

சந்திரிகா, தமிழ் மக்களின் மதத் தலைவர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், செய்தியாளர்கள், தொழிற்சங்க–மாணவ அமைப்பாளர்கள் அனைவரும்–இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்கள், உயிர் இழப்புக்கள் பற்றி–எடுத்துக் கூறியும் அவை எதையுமே செவிமடுக்காது, சர்வாதிகாரத்தனமாக தமிழ் மக்கள் மீதான பயங்கரத் தொடர் இராணுவத் தாக்குதல்களை தொடங்கினார்.

இதனை விடுதலைப் புலிகள் நேருக்கு நேர் பலமான ஆயுத எதிர்ப்பினால் எதிர்க்கும்போது இடையில் சிக்குண்டுபோகும் மக்கள் ஆயிரக்கணக்கில் உயிரிழப்பார்கள். அதனால் தமது இன அழிப்பு நோக்கினை இலகுவாக நிறைவேற்றலாம் எனும் நரித்தனமான நோக்குடன் தொடங்கப்பட்ட இத் தாக்கு தல்களின் உள் நோக்கை இனங்கண்ட விடுதலைப் புலிகள் தமது மக்களின் நல நோக்கிற்கு முன்னுரிமை அளித்து தமது போர்த் தந்திரத்தில் மாற்றங்களைச் செய்தனர். இதனைச் சாதகமாக பயன்படுத்தி மக்கள் குடியிருப்பு பகுதிகளில் இராணுவத்தினர் தமது இராணுவ ஆக்கிரமிப்பை விஸ்தரித்துள்ளனர். ஆயினும் விடுதலைப் புலிகள் இவ் இராணுவத்தினர் அனைவருக்கும் அவர்கள் ஆக்கிரமித்துள்ள பகுதிகளையே இறுதிக் கல்லறையாக்க சகல நடவடிக்கைகளையும் மிக அவதானமான முறையில் மேற்கொண்டு வருகின்றனர்.

## காவலரண்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்

இராணுவக் காவலரண்கள் மீது தொடர்ச்சியாக நடாத்தப்படும் தாக்குதல் வரிசையில் 25–05–96 அன்றும் கொடிகாமத்தில் நடாத்தப்பட்ட தாக்குதலில் அவ்விடத்திலேயே 2 இராணுவத்தினர் கொல்லப்பட, ஒரு அதிகாரி உட்பட 4 இராணுவத்தினர் படுகாயப்படுத்தப்பட்டனர். இந்தக் காவலரண் முற்றாக தாக்கியழிக்கப்பட்டுள்ளது. இதேபோல் சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு முன்னால் அமைந்திருந்த காவலரண் ஒன்றும் பொன்னாலையில் காவல்நிலை ஒன்றும் தாக்கப்பட்டது. இத்தாக்குதலிலும் இராணுவத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என நம்பகரமாகத் தெரியவருகின்றது. எனினும் சரியான சேத விபரம் கிடைக்கவில்லை. இத்தாக்குதல்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் குடியிருப்புக்கள் மீது விமானத்தாக்குதல்

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் ஊடுருவியுள்ள புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவம், மக்கள் செறிவாக வாழும் குடிமனைகள் மீது எறிகணை, மற்றும் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல் போன்ற வழமையான தனது பழிவாங்கல் தாக்குதல்களை செய்து வருகின்றது. இதன் ஒரு கட்டமாக ஆனையிறவு முகாமிலிருந்தும் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்கள் சுற்றுப்புற மக்கள் குடியிருப்புகளை நோக்கி வீசப்படுகிறது. வைகாசித் திங்கள் 17ம் நாள் வன்னியில், நெடுங்கேணி மற்றும் பூநகரி – தம்பிராய்ப் பகுதிகளில் சிறிலங்கா விமானங்கள் வீசிய குண்டினால் 8 பொதுமக்கள் கொல்லப்பட்டு, 16 பேர் படுகாயம் அடைந்துமுள்ளனர். அதேதினம் வடமராட்சியில் நடாத்தப்பட்ட தாக்குதலில் 6 பொதுமக்கள் உடல் சிதறிப் பரிதாபகரமாகப் பலியாகியுள்ளனர். மறுநாள் மீளவும் முல்லைத்தீவு ஏ.சி. பண்ணை அருகே வீசிய குண்டினால் உயிரிழப்புக்கள் ஏற்படாவிடினும் பண்ணைப் பிரதேசத்திற்கு பலத்த சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன.

## செய்திச் சுதந்திரம் முற்றாக தடுப்பு

இவ்விதமாக மக்களின் மூலவளங்களை அழிப்பதில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா அரசு வடக்கிற்கு தான் கூட்டிச் சென்ற செய்தியாளர்களை, அவர்கள் சுதந்திரமாக பார்வையிட அனுமதிக்காது தெரிவுசெய்யப்பட்ட பாதைகளினூடு பிரச்சாரப்பயணம் ஒன்றை செய்வித்துள்ளது. இதனால் சிங்களப் படைகளினால் நிர்மூலமாக்கப்பட்ட உட்கட்டுமானங்களை மட்டுமல்ல சிங்களப் படைகளினால் தாய் தந்தையரிடம் இருந்து பிரிக்கப்பட்டு–கைதிகளாக, சுகாதார, உணவு, நீர் வசதிகள் இன்றி வதைக்கப்பட்டு பெற்றோரைக்கூட சந்திக்க அனுமதிக்கப்படாது தனிமையில் வாடும் தமிழ் இளைஞர்கள், சிறுவர்களையும் சந்திக்கும் வாய்ப்புகளும் அச் செய்தியாளர்களுக்கு கிட்டவில்லை.

## 'வெரித்தாஸ்" செய்தி கேட்டவரின் காது படையினரால் சிதைப்பு

வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் தகவல் சாதனங்களை பொதுமக்கள் அணுகாதவாறு சிறிலங்காப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் தடுக்கப்படுகின்றனர். கிழக்கில் 'வெரித்தாஸ்' (பிலிப்பைன்ஸ் செய்தி ஒலிபரப்பு) வானொலிச் செய்தியைக் கேட்டமைக்காக, அம்பாறையில் அதிரடிப் படையினர் தமிழ்ப் பொதுமகன் ஒருவரின் காதிற்குள் பேனா முனை கொண்டு தாக்கி அவ் அப்பாவிப் பொதுமகனின் காதை செவிடாக்கியுள்ளனர். இதேநேரத்தில் கிழக்கில் பேரூந்து வண்டிகளை தமது பாவனைக்கு எடுத்துக் கொள்ளும் சிறிலங்காப் படைகள் பொது மக்களை கால்நடையாகச் செல்லும்படி பணிக்கின்றனர். மட்டக்களப்பு விநாயகபுரம் பகுதியில் அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்கள், கூரைகளின்றி, படுக்கப் பாய் தானும் இன்றி, சரியான உணவு வழங்கலும் இன்றி பெரும் துன்பியல் வாழ்வை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளதாக கிடைக்கப்பெறும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி ம் பக்கம்...

# புலிகளுடன் நிமிர்ந்து வாழ்ந்த...

வை.எம்.சி.ஏ. கட்டிடத்தில் இராணுவத்தினர் தொகையாகக் காணப்படுகின்றனர். செயலகத்திற்கும் எவரும் இலகுவில் சென்றுவிட முடியாது. யாழ். நகரப் பகுதியின் ஸ்ரான்லி வீதிப்பக்கமாக மட்டுமே இரண்டொரு கடைகள் திறக்கப்பட்டுள்ளன. ஆரியகுளம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பேரூந்து நிலையம் சேதமாக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. அந்த நிலையம் மீண்டும் நகர்ப்பகுதியில் உள்ள பழைய பேரூந்து நிலையத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது. நகர்ப்புறத்தில் ஒரு சில பாடசாலைகளுக்கு மட்டுமே மாணவர்கள் போய் வருகிறார்கள். ஆயினும் பாடசாலைக்கு முன்னால் இராணுவக் காவலரண்கள் காணப்படுகின்றன. அவற்றினூடாகவே தினமும் அச்சம்தரும் நிலையில் மாணவர்கள் பாடசாலை சென்று வருகின்றனர்.

அரச ஊழியர்கள் தத்தமது அலுவலகங்களில் கையொப்பமிட்டுவிட்டு வீடு திரும்புகின்றனர். நாள்தோறும் கையொப்பமிடும் கடிதத்தை அரச அதிபருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென இராணுவத்தினர் கட்டளையிட்டுள்ளனர். வலிகாமத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகின்றது. கிராமசேவகர் அலுவலகத்திற்கு ஊடாகவே இவை நடைபெற்று வருகின்றன.

இது இவ்வாறு இருக்க வீடுகளின் முற்றத்திலும் வளவுகளிலும் இராணுவத்தினரால் கண்டபடி புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளுக்கு மக்கள் இலக்காகி படுகாயத்துக்கு உள்ளாகும் நிலை அடிக்கடி நடைபெறுகின்றது. இன்று கொழும்புத்துறையில் மாத்திரம் மிதிவெடிகளில் சிக்கி 5 பேர் காலை இழந்தனர்" என அவர் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில், "மாலை 6 மணிக்குப் பிறகு நாங்கள் வீட்டை விட்டு வெளியே வருவதில்லை. வீட்டு முற்றத்தில் கூட கால் வைப்பதில்லை. 5 மணி என்றதும் கதவுகளை இழுத்து மூடிவிடுவோம். இயற்கை உபாதைகளுக்குக் கூட பெரும் பிரயத்தனங்களைச் செய்ய வேண்டியிருக்கும்." என்றும் அவர் சொன்னார். "இத்தகைய நிலமையில் நடந்துகொள்ள வேண்டிய நிலை அவமானத்துக்குரியதாக இருக்கின்றது. இப்படி அங்கு எப்படி வாழ்வது?" என்று அப் பெண் கேள்விக்குறி எழுப்பியுள்ளார்.

நிலமை இப்படியிருக்கையில், தமிழ் மக்கள் யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரின் ஆட்சியையே பெரிதும் விரும்புகின்றார்கள் என்று பெரும் பொய்ப்பிரச்சாரங்களில் சிறிலங்கா அரசு ஈடுபட்டுள்ளது. ✷

## ஓரணி இனித் தமிழணி

ஆக்கிரமிப்புக்களும் ஒடுக்குமுறைகளும், பாதிக்கப்படும் மக்களை மேலும் மேலும் ஓரணியாகத் திரளவைத்து விடுதலைப் போராட்டத்தை வேகப்படுத்தும் என்பது பல விடுதலைப் போராட்டங்களின் வரலாறு. தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் இந்தப் பண்பு வளர்ந்து வருவதனை சமீபகாலமாக உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் அணிதிரள்வுமூலம் உலகம் உணர்ந்து வருகிறது. கனடா முதல் சுவிஸ் ஈறாக உலகின் தலைநகரங்களில் நிகழ்ந்த பல்வேறு தமிழீழ மக்களின் ஆர்ப்பாட்டப் பேரணிகளிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டதை உலகு இனங்கண்டது.

இந்தத் தமிழீழ மக்களின் அணிதிரள்வுகளைப் பலப்படுத்தி மக்களின் பலம்பொருந்திய அமைப்புக்களாக மாற்றுவதற்கான நிறுவன அமைப்புக்களையும் இம்மக்களின் பிரதிநிதிகள் உருவாக்கிவருகின்றனர். இம்மக்கள் அமைப்புக்கள், தமது உடன்பிறப்புக்களின் உண்மை நிலைகளைக் சிறிலங்கா அரசின் பித்தலாட்டப் பிரச்சாரங்களின் பொய்மைகளை உலகுக்கு வெளிப்படுத்துவதற்கான எழுச்சிச்சாதனங்களாக எழுந்துவருகின்றன.

இந்த எழுச்சிகளைக் கண்டு திகைப்பும் கலக்கமும் உற்றுவரும் சிறிலங்கா அரசும் அதன் தமிழ்க்கூலிகளும், "விடுதலைப் புலிகள் பலவீனமடைந்ததினால் எல்லாத் தமிழ் மக்களையும் தமது போராட்டத்தில் இணைக்க முயல்கின்றனர்" என்ற பிரச்சாரத் தந்திரத்தை உரக்கக் கூறமுயல்கின்றனர். உண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயலளவு இறைமையையோ (Virtual Sovereginity) மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான உளவியல் ஒப்பந்தத்தையோ (Psychological) அல்லது விடுதலைப் புலிகளின் அரசு நோக்கிய அரசின் (Defacto) இயக்கத்தன்மையினையோ சிறிலங்கா அரசின் சமீபத்திய நடவடிக்கைகள் எதுவும் பாதிக்கவில்லை. நேற்று கிழக்கில் நடாத்திய ஆக்கிரமிப்பை இன்று வடக்கில் சிறிலங்கா நடாத்திக்கொண்டிருக்கிறது. இன்று கிழக்கு விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்படும் நன்னாள் நெருங்கிக் கொண்டிருப்பதுபோல் நாளை விடிவதற்குள் வடக்கிலும் சிங்கள இராணுவம் விரட்டியடிக்கப்படும் என்பதற்கான மக்கள் எழுச்சியை தமிழீழத்தில் மட்டுமல்ல, சர்வதேச உலகு எங்கும் வாழும் தமிழரிடை தெளிவாக இனங்காணக்கூடியதாக உள்ளது.

மேலும் சர்வதேசத் தமிழரிடையில் மக்கள் ஓரணியாகத் திரண்டெழும் பண்பு, யாழ் குடாநாடு மீதான ஆக்கிரமிப்பினை சிறிலங்கா ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே தோன்றிவிட்டதைக் கடந்த ஆண்டின் நடுப்பகுதிகளில் கனடா, இலண்டன் உட்பட பலநாடுகளிலும் அணிதிரண்ட மக்கள்வெள்ளம் சான்று பகர்ந்தன. அதுமட்டுமல்ல, சர்வதேச அரங்கில் தமிழ் மக்கள் பலத்த அழுத்தங்களைத் தமது ஓரணியில் திரள்தல் மூலம் ஏற்படுத்தத் தொடங்கியதனால் ஏற்பட்ட அச்சத்தினாலேயே தமிழ் மக்களின் அரசு நோக்கிய அரசு (Defacto) சட்டபூர்வமான அரசாக (Dejure) உலக நாடுகளால் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னதாக அதன் எல்லைகளை ஆக்கிரமித்து அதன் உட்கட்டுமானங்களை (infrastructure) சிதைத்து தனக்குக் காலனித்துவ அரசு வழங்கிய சட்டபூர்வ அரசு எனும் போர்வைக்குள் தமிழீழ மக்களை இனப்படுகொலை, இனத்துன்புறுத்தல்கள் செய்தாவது தனது இறைமையைக் காப்பாற்றவேண்டுமெனும் மிருகத்தனமான இராணுவ நடவடிக்கைகளில் சிறிலங்கா கடந்த புரட்டாதி மாதம் முதல் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகிறது.

சிறிலங்கா அரசு இறைமையின் பிரயோகம் எனக்கூறியதை தமிழ் மக்கள் ஏற்கமறுத்து, வெளியேறியமையினால் ஆக்கிரமிப்பு அரசாக மாறிவிட்ட சிறிலங்கா–ஆக்கிரமிப்பாளன், தமிழ் மக்கள் மீது முற்றுகை நடாத்தி மக்களை மனிதக் கேடயங்களாக்கித் தனது நோக்கை அடைவதற்காக மக்கள்மீது சொல்லொணாக் கொடுமைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளான். இதனை வெளியுலகின் கண்களிலிருந்து மறைப்பதற்கு உணவை ஆயுதமாகப் பயன்படுத்தி இராணுவ ஆட்சியில் உணவு பெறுவதற்காக மக்கள் கால் கடுக்க காலை முதல் மாலை வரை வாடும் காட்சிகளை புகைப்படங்களாக்கி மக்களுக்கு தாம் நிவாரணப் பிச்சையிடுவதாகவும், புனர்வாழ்வு புனர்நிர்மாணம் செய்யப்போவதாகவும் பொய் வதந்திகளைப் பரப்பிவருகின்றனர். ஆனால் நடைமுறையில் சிறிலங்கா இராணுவம் வகைதொகையற்ற கைதுகளையும் இனப்படுகொலைகளையும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளையும் இன அச்சுறுத்தல்களையும், நீதி விசாரணையற்ற முறையில் செய்து வருவதனை அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுதந்திரமான தகவல் பரிவர்த்தனை–வெளியுலகத் தொடர்புகள் திட்டமிட்டு சிறிலங்காவால் தடைசெய்யப்பட்டுவரும் இந்நேரத்தில் உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் தமது சகோதரர்களின் பிரதிநிதிகளாக மாறித் தம்மக்களின் துன்பங்களின் துயரங்களின் உண்மைநிலைகளை மட்டுமல்ல தாம் தமிழீழத் தேசிய இனம், நடைபெறும் போராட்டம் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் என்பதை வரைவிலக்கணப்படுத்த வேண்டிய கடமையைச் செய்யப்புறப்பட்டுள்ளனர். ஆம், மிருகங்களுடைய அரசில் சாப்பிடு அல்லது சாப்பிடப்படுவாய் என்பதே சட்டம். அதேபோல் மனிதர்களுடைய அரசில் வரைவிலக்கணப்படுத்து அல்லது வரைவிலக்கணப்படுத்தப்படுவாய் என்பதே சட்டமாக உள்ளது. இந்த உண்மையை மறந்து தமிழ் மக்கள் தம்மைத் தனியான தேசிய இனம்–தமது விடுதலைப் போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டம் என்பதை வரைவிலக்கணப்படுத்த தாமதமானதினால்தான் சிறுபான்மை–பெரும்பான்மை இனப் போராட்டம், உள் நாட்டுப் பிரச்சனை என்ற "கோசங்கள்" தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குச் சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசால் வழங்கப்பட்டது. இனித் **தமிழ் மக்கள் எல்லாம் ஓரணி** என்ற நிலை தெளிவாவதினால் **சிறிலங்காவின் அரசு தமிழீழ மக்களின் சட்டபூர்வ அரசு அல்ல** என்பது பிரகடனம் செய்யப்படும் நாள் சர்வதேச அரங்கில் குறிக்கப்பட்டுவிட்டது. ◆

### ஒரு கல்வியாளரின் நோக்கில்

# உலக விடுதலைப் போராட்டங்களில் மாணவர் பங்கும் பணியும்

விடுதலைப் போராட்டம் மனிதகுல முன்னேற்ற சாதனமாகும். முன்னேற்றமடைந்த நாடுகளின் வரலாற்றை ஆராய்ந்தால் அம்முன்னேற்றத்தின் உந்துசக்தியாக உடல் வலுவும் உளவலுவுமிக்க இளைஞர்களே இடம் பெற்றிருப்பதனைக் காணலாம். அஞ்சாமை, துணிவு, சோர்வின்மை, சிந்தனைத் தெளிவு, சுதந்திர வேட்கை, கொள்கைப் பற்றுறுதி என்னும் சீரிய பண்புகள் மாணவர்களாகிய இளைஞர்களிடையே மிகுந்து காணப்படுவதே, அவர்கள் விடுதலைப் போராட்டங்களில் தம்மை இலகுவாக இணைத்துக்கொண்டு சாதனை நிகழ்த்தச் சாத்தியமாகின்றது.

அறிவுடை மக்கட் சமூகம் அடக்கப்படவும் அடிமைப்படவும் மறுக்கும். தமது அறிவாற்றலின் விருத்திக்கேற்ற வாழ்க்கை இலட்சியத்தை வகுத்துக் கொண்டு அவ்விலட்சிய இலக்கினை அடையத் தடையாயிருப்பவற்றுக்கு எதிராகப் போராடி முன்னேற முயல்வது இயல்பாகும். முன்னேற்றத்துக்கு முதற்படி தம்மை வாட்டி வதைக்கும் அடக்கல், ஒடுக்கல், சுரண்டல் என்பவற்றை அகற்றுதலாகும். நெடுங்காலமாக ஊறிப்போன அரசியல், பொருளாதார, சமூக சமயச் சீர்கேடுகளை அகற்றுதல் இலகுவானதன்று. அவற்றை நீக்கி, உகந்த முன்னேற்றச் சூழலை உருவாக்கப் போராட வேண்டியது அவசியமாகின்றது. உலக விடுதலைப் போராட்டங்களெல்லாம் பல்வேறு வடிவங்களில் சக்திமிக்க இளைஞர் சமூகத்தினாலேயே முன்னெடுக்கப்படுவதைக் காணலாம்.

பேரறிஞர் சோக்கிறரீஸ் (469–399கி.மு) முன்னெடுத்த விடுதலைப் போராட்டமே வரலாற்றில் மிகத்தொன்மையானது. இப்போராட்டத்தின் முகவர்கள் மாணவர்களே. நாகரிகத்தின் நாற்று மேடையாயிருந்த கிரேக்கத்தில் எதென்ஸ் மக்கள் தமது அறிவின் அடிப்படையில் அமைந்த முன்னேற்ற இலக்குடைய வாழ்க்கை விழுமியங்களைக் கைவிட்டு அந்நிய ஆடம்பர போகத்தில் கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று சிற்றின்பச் செயல்களில் அக்கறை காட்டியதைக் கண்டு வெறுப்புற்ற சோக்கிறரீஸ் அறிவு, நீதி, அழகு, நன்மை என்பவற்றை மீண்டும் மக்கள் மதித்துப் போற்றப் போராடினார். அவரின் இலட்சியம் நிறைவேற தனது மாணவர்களைச் சிந்தித்துச் செயற்படத் தூண்டினார். அவரது வாக்காலும் வாழ்வாலும் தூண்டப்பட்ட அவரது தலைமை மாணவன் பிளேற்றோ (420–348 கி.மு)வும் பிறரும் தமது குருவின் கொலையின் பின்பு அவரது இலட்சியப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர்.

பிளேற்றோ தனது 'குடியரசு சட்டங்கள்' என்னும் இரு நூல்கள் மூலமும் எதென்சின் மறுமலர்ச்சிக்கு வழிகாட்டலானார். எல்லோரும் கற்க வேண்டும். கல்வி, உள விருத்தியையும் உடல் விருத்தியையும் நாட்டுப் பற்றையும் சமூகப் பணியையும் பெற்றுக்கொள்ள, கற்றுக்கொள்ள வேண்டும். அரசே கல்வி வழங்க வேண்டும். அறிஞரே ஆட்சியாளராக வேண்டும்.

மாணவர், அவரவர் நாட்டத்துக்கேற்ற கல்வியைப் பெற்று தமது உச்சப்பணியை நாட்டுக்கு வழங்க வேண்டும் என்றும் கருத்துக்களை முன் வைத்த பிளேற்றோ 'அக்கடமியா' என்னும் உலகின் முதலாவது பல்கலைக் கழகம் எனப்பாராட்டத்தக்க உயர் கல்வி நிலையத்தை உருவாக்கி விடுதலைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினார்.

**தமிழீழமாணவர் எழுச்சி நாளையொட்டி (யூன் 5) இக் கட்டுரை வெளியாகின்றது.**

பிரான்சிய அரசியற் புரட்சிக்கு வித்திட்ட சிந்தனையாளருள் முக்கியமானவரான ஜே.ஜே. ரூசோ (1712–1782) எல்லா விடுதலைப் போராட்டங்களுக்கும் தாயான கல்வி விடுதலைப் போராட்டத்தை முன்வைத்தார். அவரது இலட்சிய மாணவன் எவ்வாறு கல்வித்துறை விடுதலைப் போராட்டத்தை மேற்கொண்டான் என்பதை அவர் எழுதிய 'எமிலி' என்னும் நவீனம் விளக்குவதாகும்.

மனித வாழ்வின் பற்பல துறைகளிலும் காணப்பட்ட காலத்துக்கு ஒவ்வாத பிற்போக்குத் தன்மையினைக் கண்டித்த ரூசோ எமிலி என்னும் அவரது இலட்சிய மாணவனைக் கல்விப் புரட்சி மேற்கொள்ளச் செய்தார். சுதந்திரமான மாணவனை மையமாகக் கொண்ட மாணவன், தனது வாழ்வுக்கு வேண்டிய கல்வியைத் தானே தெரிவு செய்து நேரடி அனுபவத்தினூடாகக் கற்கச் செய்ய விடுதலைப் போராட்டத்தைத் தனது புரட்சி நூலாகிய எமிலி மூலம் மேற்கொண்டார்.

மேற்கூறிய சிந்தனையாளர்களின் வரலாற்று முக்கியத்துவமிக்க விடுதலைப் போராட்ட முயற்சிகள், புதிய வாழ்க்கைச் சூழலை உருவாக்குவதில் மாணவரின் பங்கும் பணியும் காத்திரமானவை என வலியுறுத்தின. இவை பின்வந்த விடுதலைப் போராட்டங்க்ளுக்கு முன்னோடியாய், உந்துசக்தியாய் அமைந்தன.

இன்று விடுதலைப் போராட்டங்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் அடிப்படை மனித உரிமைக் கோரிக்கையாய் உலக நாடுகளில் எல்லாம் உரக்க ஒலிக்கக் காணலாம். முன்னேற்ற முனைப்புள்ள இப்போராட்டங்களில் மாணவர் சமூகம் முக்கிய பங்கு வகிக்கக் காணலாம்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பாடசாலைகளிலும், பல்கலைக் கழகங்களிலும் கல்வி கற்று வந்த பல்லாயிரம் மாணவர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். 1920களில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணம் கல்லூரியின் உயர்வகுப்பு மாணவர் "மாணவர் காங்கிரஸ்" என்னும் அமைப்பை உருவாக்கி விடுதலைப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தினர். இலங்கையில் 1971ஆம் ஆண்டு மாணவர் பேரவை இயக்கம் மாபெரும் சக்தியாய் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டது. இம்மாணவர் போராட்டம் இன்னமும் தொடர்வதைச் சூரியகந்த எலும்புச் கூடுகளும் இலங்கையின் தென்பகுதிகளில் "பூசா" போன்ற தடுப்பு முகாம்களும் உறுதி செய்கின்றன.

ஐரிஸ் விடுதலை இயக்கமும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் மாணவர் விடுதலைப் போராட்டப் பங்கும் பணியும் எவ்வாறனவை எனத் தெளிவுறுத்துகின்றன. அசாமிலும், பஞ்சாப்பிலும் வேறு பல இந்திய மாநிலங்களிலும் இன்று மாணவரின் விடுதலைப் போராட்ட அர்ப்பணிப்புகளை அறிகின்றோம். பர்மா, கம்போடியா, பிலிப்பைன்ஸ், தென்கொரிய நாட்டு விடுதலைப் போராட்டங்களில் மாணவர் பங்கு தாக்கமானது. சீனாவில் 1989ஆம் ஆண்டு ரெனமென் சதுக்க மாணவர் விடுதலைப் போராட்ட முயற்சி மாணவ எழுச்சியின் தாற்பரியத்துக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

நாம் உலக விடுதலைப் போராட்டங்களின் வரலாற்றினை ஒட்டுமொத்தமாக நோக்கும்பொழுது எந்த நாட்டிலும் விடுதலைப் போராட்டங்கள் வெற்றி தர மாணவர் பங்கும் பணியும் அவசியம் என்னும் உண்மையினை உணரலாம். அறியாமை, வறுமை, பழைமைப் பற்று, ஆதிக்கவெறி, இனவாதம், மதவாதம் என்பனவற்றால் மனிதவாழ்வு சீரழியும் பொழுது அறிவாற்றல் மிக்க மாணவ சமூகம் எழுச்சியுற்றுப் புரட்சியில் ஈடுபடும் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும். இன்று மனிதகுலம் அணுவைப் பிளந்தாயிற்று–அண்டத்தை அளந்தாயிற்று. ஆனால் மனிதத்துவத்தை இழந்தாயிற்று என்னும் நிலையில் மனித வாழ்வு அவலம் நிறைந்த சோக நாடகமாவது தொடர்ந்தும் உதாசீனம் செய்யப்பட்டால் விளைவு விபரீதமாயிருக்கும்.

**இருளைப் பழிப்பதைவிட ஒளியை ஏற்றுவது முன்னேற உதவும்**

மனிதனின் சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் முழுமையாகப் பேணி மகிழும் நிலை இல்லாவிட்டாலும் அடிப்படை மனித உரிமைகளையாவது அனுபவிக்கக்கூடியதாய் மனித வாழ்க்கைச் சூழல் உருவாக்கப்பட வேண்டும். இந்நிலையை மாணவ எழுச்சி பெற்றுத்தர, அவர்களின் அறிவுத்திறன் மனப்பாங்கு திட்டமிட்டு உருவாக்கப்படுவது இன்றியமையாத தேவை என்பதனை மறுக்க முடியாது. இருளைப் பழிப்பதைவிட ஒளியை ஏற்றுவது முன்னேற உதவும். ✳

# கொலை - மன்னிப்பு - கொலைக்கு அனுமதி

**ஜே.**விபியினரின் கிளர்ச்சியின்போது (1978–1990) காணமற்போன அல்லது பலியான சிங்களமக்களது படுகொலையிற் சம்பந்தப்பட்ட சூத்திரதாரிகளைக் கண்டறியும் முயற்சியில் சந்திரிகா அரசு இறங்கியிருந்தது. சந்திரிகா அம்மையாரின் தேர்தல் வாக்குறுதிகளில் அதுவும் ஒன்று. அதன் அடிப்படையில், சில படுகொலைச்சம்பவங்கள் தொடர்பாகச் சில படை அதிகாரிகளை, விசாரணைக் குழுமுன் சிங்கள மக்கள் அம்பலப்படுத்தி உள்ளனர்.

இந்தப் படை அதிகாரிகளையும் மற்றும் சிப்பாய்களையும் விசாரணைக் கூண்டில் நிறுத்துவதற்கு வசதியாக, கட்டாய விடுமுறையில் உடனடியாகவே அனுப்பிவைக்கும்படி ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டார். ஆனால் இந்த உத்தரவைச் சில நாட்களிலேயே அவர் மீளப்பெற்றுவிட்டார் என, கொழும்புச் செய்தித்தாள்கள் செய்தி வெளியிட்டன.

கொலைச் சூத்திரதாரிகளாக இனங்காணப்பட்டுள்ள அதிகாரிகளுள் நான்குபேர் பிரிகேடியர்களாவர். இவர்களில் ஒருவருக்கு – 'ரிவிறச' இராணுவ நடவடிக்கைக்காக– **றணவிக்கிரம** பதக்கத்தைச் சந்திரிகா அம்மையார் வழங்கியிருந்தார். இவரது பெயரைச் செய்தித்தாள்கள் வெளியிடவில்லை. ஆனால் அவர் பிரிகேடியர் **ஜானக பெரேராவே** ஆவார் (சிறிலங்கா இராணுவத்தில் மொத்தம் 47 பிரிகேடியர்கள் இருக்கின்றனர்).

எம்பிலிப்பிட்டியா என்ற இடத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் பலரின் படுகொலைக்கு இவர்தான் பொறுப்பு என்று, விசாரணைக் குழுவின், அப்பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர். ஜே. வி. பி. கிளர்ச்சி நசுக்கப்பட்ட பின்னர், இவர் மணலாற்றுப்பகுதிக்கு மாற்றப்பட்டிருந்தார். அங்கே சிங்களக் குடியேற்றங்களைத் துரிதகதியில் ஏற்படுத்தித் தமிழரின் நிலங்களை அபகரிப்பதில் முன்னின்றார். அதற்குப் பரிசாக, **ஜானகபுர** என்று ஒரு குடியேற்றத்துக்கு அவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அங்கு ஒரு பாரிய இராணுவ முகாமை அமைத்து, அப்பகுதியின் இராணுவ நிருவாகியாக இவர் பல வருடங்கள் செயற்பட்டு வந்துள்ளார்.

இவ்விதம் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளில் பலர், யுத்த களத்தில் 'திறமை'யாகப் பணியாற்றி வருகின்ற காரணத்தாலும், உயர் அதிகாரிகளாக இருக்கின்ற காரணத்தாலும், அவர்கள் மீதான விசாரணைகள் போர் நடவடிக்கைகளைப் பாதிக்கும் என்று காரணம் கூறப்பட்டுள்ளது. அதனாலேதான், நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்ட சந்திரிகா அம்மையார் பின்னர் தனது கட்டளையை மீளப்பெற்றுக்கொண்டாராம்.

அதாவது, ஒரு சமாதானச் சூழல் ஏற்பட்டால் வடக்கு–கிழக்கில் நடந்த தமிழர் படுகொலைகளுக்கும் விசாரணைக்குழுக்கள் அமைக்கப்படலாம்–

அப்படி அமைக்கப்பட்டால் தாமும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு தண்டனை அபாயத்தை எதிர்நோக்கலாம் என்று, இராணுவ அதிகாரிகள் அஞ்சுவார்களாம்–

அத்தகைய அச்சங்கள் படையினரின் போரிடும் உறுதியை (அதாவது படுகொலை வெறியை) சிதைக்குமாம்–

இதனால் போர்க்களத்தில் அரசபடைகள் தோல்வியடையக் கூடிய அபாயம் தோன்றலாமாம்–

இது எப்படி இருக்கிறது!

சிங்கள மக்களைப் படுகொலை செய்த கொலையாளிகளை அந்த மக்களே ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்திய பின்பும், கொலையாளிகளுக்கு அரசின் மன்னிப்புக் கிடைத்துள்ளது. **இந்த மன்னிப்பு, தமிழர் படுகொலைக்கு வழங்கப்பட்டுள்ள 'லைசென்ஸ்' ஆகும்!** சந்திரிகா அரசின் மனிதாபிமான முகம் இதற்கூடாகத் தெரிகின்றதா!

பிரேமதாசா காலத்துப் படுகொலைகளுக்கு விசாரணைக் குழுக்களை அமைக்கச் சந்திரிகா அம்மையார் முடிவெடுத்ததற்கு, வெறும் அரசியற் போட்டியும் ஆட்சியைப் பிடிப்பதும் தான் காரணம் என்று, அரசியல் விமர்சகர்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஏனெனில், 1971ஆம் ஆண்டுக் கிளர்ச்சியின்போது படுகொலை செய்யப்பட்ட 10,000 சிங்கள மக்களது கொலைகளை ஆராயவும் ஒரு ஆணைக்குழுவை அவர் நியமித்திருக்கலாமே என, அவர்கள் கேட்கின்றனர். அந்தப் படுகொலைகள் சந்திரிகா அம்மையாரின் தாயாரினால் நடாத்தப்பட்டன என்பதற்காகவே, அதுபற்றிப் பேசுவதைச் சந்திரிகா அரசு தவிர்க்கின்றது.

இரண்டாவது, ஜே.வி.பி கிளர்ச்சியின்போது 40,000 சிங்களவர்கள் பலியானதாக ஒரு அறிக்கை கூறுகிறது, இது அறுபதாயிரம் வரை அதிகரிக்கும் என்று இன்னொரு அறிக்கை கூறுகின்றது. ஆனால், சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையின் பிரகாரம், 1300 ஜே.வி.பி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர், 200 இராணுவத்தினரும், 310 பொலிசாரும் பலியாகியுள்ளனர். இதேவேளை ஐ.தே. கட்சியின் ஆதரவாளர்கள் 1900 பேரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 190 பேரும், ஐக்கிய சோசலிசக் கூட்டணியைச் சேர்ந்த 125 பேரும், அரச உத்தியோகத்தர்கள் 810 பேரும், பௌத்த பிக்குகளில் 60 பேரும், படையினரின் குடும்பங்களைச் சேர்ந்த 190 பேரும் கொல்லப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறுகின்றது. ✿

# துரோகத்தின் பரிசு

**கொ**ழும்பில் இருந்து வெளிவரும் மாதாந்த ஆங்கில சஞ்சிகையான லங்கா மந்திலி டைஜஸ்ட் (Lanka Monthly Digest) 'கடந்த ஆண்டின் சிறந்த மனிதனாக' சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்சுமன் கதிர்காமர் அவர்களைத் தெரிவு செய்து கௌரவித்துள்ளது. இத்தெரிவிற்குப் பின் வரும் காரணம் கூறப்பட்டுள்ளது. "தாமே தமிழர்களின் பிரதிநிதிகள் எனப் புலிகளால் உருவாக்கப்பட்ட ஐதீகத்தை (myth) (அதாவது கருத்தை) கதிர்காமர் உடைத்தெறிந்துள்ளார்" என்பதே அதுவாகும்.

புலிகள் இயக்கம் தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகள் அல்ல என்று வெளி உலகிற்குக் கதிர்காமர் எவ்விதம் நிரூபித்தார் எனத் தெரியவில்லை. சிங்கள அரசின் ஒரு அமைச்சர் – அதுவும் தமிழினத்திற்கு எதிரான போரை நியாயப்படுத்திப் பிரச்சாரம் செய்யும் அரசுசார்பு அமைச்சர் – தமிழரின் விடுதலைப் போரை முன்னின்று நடாத்தும் புலிகள் இயக்கத்தின் தேசிய பாத்திரத்தை எவ்வாறு உடைத்தெறிந்திருக்க முடியும்? கதிர்காமரைப் பாராட்டுவதற்கு அந்தச் சஞ்சிகை கொடுத்திருந்த காரணம் உண்மையில் பரிகாசத்திற்குரியது. இத்தகைய கற்பிதத்தை உருவாக்க முயன்றதற்காக, 'ஐதீகத்தை உருவாக்கும் சிறந்த சஞ்சிகை' என்ற பாராட்டை 'லங்கா மந்திலி டைஜஸ்ட்'டிற்கு வழங்கிக் கௌரவிக்கலாம் போல் உள்ளது!

சந்திரிகா அமைச்சின் வெளிவிவகார அமைச்சர் பதவியை திருவாளர் கதிர்காமர் அவர்கள் திறம்பட ஆற்றி வருகின்றார் என்பதை மறுப்பதற்கில்லை. தமிழர்கள் மீது சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் அடக்குமுறை ஆட்சியை நியாயப்படுத்தி – தமிழின அழிப்பை சர்வதேசத்தின் கண்களில் இருந்து மூடிமறைக்க, கதிர்காமரின் திறமையும் உழைப்பும் உதவி வருகின்றன என்பதே உண்மையாகும். இந்த உண்மைக் காரணத்திற்காக கதிர்காமரை அந்தச் சஞ்சிகை பாராட்டி இருக்குமானால், அது சரியானதாக இருந்திருக்கும்.

அதேவேளை, தமிழினத்தின் பார்வையில், 'தமிழ்த் தேசியத்திற்கு அரசியல் துரோகமிழைத்து வரும் சிறந்த தமிழன்' என்ற பட்டத்திற்கே, உண்மையில் கதிர்காமர் உரித்துடையவர்.

கதிர்காமர் அவர்கள் தனது பணியை மேலும் திறம்பட ஆற்றுவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடனேயே, பேரினவாதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களால் அவர், பலவாறாகப் பாராட்டப்படுகின்றார். கதிர்காமரை மட்டுமல்ல, தமிழர் போராட்டத்திற்கு எதிராக வேலை செய்யும் அனைத்து தமிழ் புத்திஜீவிகளையும் – அரசியல்வாதிகளையும் சிங்களப் பேரினவாதம் புகழ்ந்துரைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச மட்டத்தில் சிங்களப் பேரினவாதிகளால் செய்ய முடியாத போராட்ட எதிர்ப்புப் பிரச்சாரத்தை இந்தத் தமிழின விரோத தமிழ்ப் புத்திஜீவிகள் சிறப்பாகச் செய்வதற்குப் பிரதான காரணம், அவர்கள் தமிழர்கள் என்பதே ஆகும். தமிழின விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகத் தமிழர்களே கருத்துத் தெரிவிக்கும் போது அது சர்வதேச கவனத்திற்கு உட்படுவது இயல்பே. இந்த மனித இயல்பை, பேரினவாத ஆட்சியாளர்கள் நன்றாகப் பயன்படுத்தி வருகின்றனர். இத்தகைய தமிழர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கியும் – மனித உரிமை வாதிகள் – சிறந்த மனிதர்கள் என்று பட்டம் சூட்டிப் புகழ்ந்துரைத்தும் ஒரு கல்லில் இரு மாங்காய்களை விழுத்தும் தந்திரோபாயத்தை பேரினவாதிகள் செய்கின்றனர்.

தமிழர்களுக்கு அரசில் பிரதிநிதித்துவமும் – அரசால் கௌரவமும் வழங்கப்படுகின்றன என்று உலகிற்குக் காட்டுவதோடு, அதே தமிழர்களைப் பயன்படுத்தி தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பரப்புரையையும் பேரினவாதிகள் செய்கின்றனர்.

இத்தகைய ஒரு சில தமிழ்ப் புத்திஜீவிகளின் இனவிரோதச் செயற்பாடுகளால், எமது விடுதலைப் போராட்டம் சில கருத்தியல் சிக்கல்களை – சர்வதேச ரீதியாக – சந்திக்க வேண்டி வருகின்றது. இது தமிழரின் விடுதலைப் போராட்டம் எதிர்கொள்ளும் ஒரு கசப்பான யதார்த்தமாகும். ❑



## யாழ் குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தீவிரம்

### ✷ 2 நாட்களுக்குள் 12 படையினர் பலி

**சி**றிலங்கா அரசு ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ள யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்து வருகின்றன. பல திசைகளிலும், பல இடங்களிலும், நினைத்திராத பகுதிகளிலெல்லாம் மேற்கொள்ளப்படும் இவ்அதிரடித் தாக்குதல்களால் இராணுவம் பெரும் மனக்கிலேசத்திற்கும், குழப்ப நிலைக்கும் உள்ளாகியுள்ளது.

கடந்த 23ஆம், 24 ஆம் திகதிகளில் குடாநாட்டின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்ட தாக்குதல்களில் கொல்லப்பட்ட படையினரின் மொத்த எண்ணிக்கை 12 ஆகும். பலர் படுகாயமடைந்துள்ளனர். இதில் எந்தவொருதாக்குதலிலும் விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை.

23ஆம் திகதியன்று வடமராட்சியில் மக்களை துன்புறுத்தும் நோக்குடன் உழவு இயந்திரத்தில் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினரை எதிர்கொண்ட விடுதலைப் புலிகள் நடாத்திய மின்னலடித் தாக்குதலில் அவ்விடத்திலேயே 6 படையினர் கொல்லப்பட்டனர.சிலர் படுகாயத்துக்குள்ளாகினர். பின்னர் அவ்விடத்துக்கு வந்த படையினர் கண்மூடித்தனமாக வெறிகொண்டு சுட்டதில் 2 பொதுமக்கள் படுகாயத்துக்குள்ளாகியுள்ளனர். இதேதினம் மிருசுவிலில் நடைபெற்ற இன்னோர் தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர்.

24ஆம் திகதியன்று துன்னாலையில் இருந்து கலிகைச் சந்தி நோக்கிச் சென்றுகொண்டிருந்த படையினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர். இதில் ஒரு சிப்பாய் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். ஏனையோர் காயங்களுடன் ஓடித் தப்பிக்கொண்டனர். இச்சம்பவம் காலை 11.15 மணிக்கு இடம்பெற்றது. இச்சம்பவம் நடந்து சில மணி நேரத்தில் மீண்டும் மிருசுவிலில் காவலரண் ஒன்றை விடுதலைப் புலிகள் மோட்டார்கள் கொண்டு தாக்கினர். இதில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். அன்றைய நாள் பிற்பகல் வேளை கொடிகாமத்தில் காவலரண் ஒன்று தாக்கப்பட்டு இரு படையினர் கொல்லப்பட்டனர். இவ்வாறாக வலிகாமத்திலும் பல இடங்களில் தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ✷

# தென்தமிழீழத்தில் இன்னும் ஓடிக்கொண்டிருக்கும் இரத்த ஆறு

**சிங்கள பேரினவாதத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழீழத்தின் எந்தப் பகுதியிலுஞ்சரி மக்கள் சிறைப்பட்ட ஒரு வாழ்வையே வாழ்ந்துகொண்டிருப்பர்-தங்களது வாழ்வில் விடுதலை எப்போது என்ற ஏக்கத்துடனேதான் காத்திருப்பர்.**

அது இப்போது பேய்குடி கொண்ட வீடுபோலாயிற்று. அந்தக் கோரச்சம்பவம் நிகழ்ந்ததன் பின்னர் அந்த வீட்டிற் குடியிருக்க எல்லோரும் பயந்தார்கள். அது முன்னர் இருந்த அழகும் இப்போதிருக்கின்ற அலங்கோலமும் ஒரு வாழ்விழந்து போன சோகத்தை உணர்த்துவதாய் நின்றது. இருகரையும் இலை தெரியாது பூத்துக்குலுங்குகின்ற மாமரங்கள் அந்தச் சம்பவத்தின்

> தங்கள் வாழ்வு எப்போது விடியும் என்ற ஏக்கம் நிறைந்த எதிர்பார்ப்போடு காத்திருக்கும் அவர்களுக்குள்ளேயிருந்து நிறையப் புதல்வர்கள் இந்த மண்ணுக்காக வந்தவண்ணம் உள்ளனர்.

பின்னர் மெல்லமெல்ல இலையுதிர்த்துப் போயின. ஓரிரண்டு மாமரங்கள் கொப்புக்கள் கருகி மொட்டையாய் நின்றன. மனிதர்கள் இல்லாத வெறுமையோ அல்லது கோரச்சம்பவத்தின் ஆறாத காயங்களோ அந்த மரங்களிலும் ஏதோ ஓர் தாக்கத்தை ஏற்படுத்திருக்க வேண்டும்.

நிலவு நாட்களில் வீதிகளில் வெண்மையாய் ஒளிவீசிக் கொண்டிருக்க, வெறுமையாக இருக்கின்ற அந்த வீட்டில் முற்றம் பளீரெனக் கூட்டப்பட்டிருப்பதாகவும் அந்த நிலையில் குத்துவிளக்கின் சுடர் எரிய, உயிர்போகின்ற கடைசி ஓலம் மெல்லிய சத்தமாக கேட்பதாகவும் பல வதந்திகள் ஐதீகமாக கிராமத்திற் பரவியிருந்தது.

அந்த ஐதீகக் கதைகள் ஒருபுறமிருக்க, அந்தவீடும் அது தாங்கிநின்ற மனிதர்களும் அவர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்ட அவலமும் நினைக்கும்தோறும் நெஞ்சையுருகச் செய்கின்ற உண்மைச் சம்பவமாகும்.

அது 1987 இன் ஒரு மாலைப்பொழுது.

மட்டக்களப்பின் வெல்லாவெளிக் கிராமம், அந்தப் பொழுதிலும் சுறுசுறுப்புக் குலையாமல் இருந்தது. மேயச் சென்ற மாடுகள் பட்டிக்குத் திரும்பின. வேலை விட்டு வருவோர் கலகலப்பு காற்றோடு கரைய வயற்காட்டைத் தழுவிய ஆறுகளில் சின்னஞ்சிறுசுகள் குளித்துக் கொண்டிருக்க மாலைச்சூரியன் எல்லைப்புறத்துப் பனைகளுக்கடியில் மறைந்த நேரம்......

அந்தக் கிராமம் இன்னும் சிறிது நேரத்துக்குள் நடக்கப் போவதை அறியாமல் குதூகலித்தபடி இருந்தது.

அம்மாவுக்கு எப்போதுமே மகனைப் பற்றிய கவலை. சதா அவனது நினைப்பு.

"என்னமாதிரிக் கஸ்ரப்படுகிறானோ.

அந்தச் சிறைக் கூட்டுக்குள்ளை என்னென்ன சித்திரவதைகளைச் செய்யிறாங்களோ"

தலையிலடித்துக் கதறுகின்ற தாயைச் சமாதானப்படுத்தி ஆறுதற்படுத்துவது மகளுக்கும் பெரும்பாடாய் இருக்கும். ஆசையோடு கேட்டவற்றையெல்லாம் வாங்கித் தருகின்ற அண்ணன் இல்லாத வீடு அவளுக்கு வெறுமையாகத் தென்படும். ஆனாலும் தானும் உடைந்துவிடக்கூடாது என்பதில் அவள் கவனமாக இருந்தாள். அன்று அவர்களின் வயலில் புதிர் எடுத்து புதிய நெல்லுக் குற்றிச் சமைத்திருந்தனர். அது அவர்கள் வாழ்வின் விசேடமான நாளாகத்தான் இருந்தது. வருடத்தில் ஒருமுறை நடக்கின்ற இந்த நிகழ்வில் புதிர்ச்சோறு பொங்கிப் படைத்து எல்லோரும் கூட இருந்து சாப்பிட்டு வணங்குவார்கள்.

அன்றும் அம்மா பொங்கினாள். அடுத்தநாள் அந்தப் புதுநெல்லில் பலகாரம் செய்தபடி சிறையிலிருக்கும் தன் மகனுக்குக் கொடுக்கவெனத் திட்டமிட்டிருந்தாள்.

மெல்லமெல்ல சூரியவெளிச்சம் இல்லாமற்போய் முன்னிலவில் ஒளிக்கதிர்கள் முற்றத்து மணலிற் பரவியிருந்தன. அவர்கள் வீட்டின் இரட்டைப்படலை வாயிலில் வரிசையாக நின்ற குரோட்டன் செடிகள் காற்றில் அசைய அந்த இடம் அமைதியாக இருந்தது.

> தென் தமிழீழத்து மக்களின் விடிகாலைகள் அனேகமாக இராணுவச் சுற்றிவளைப்புகளுக்குள் தான் விடிகின்றன. எந்த வகையிலும் சுதந்திரமற்ற வாழ்க்கை, திருமணவீடு, சாவீடு எவற்றையும் அவர்கள் சுதந்திரமாகக் கொண்டாட முடியாதவர்களாகத்தான் இருக்கிறார்கள்.
>
> திருமலை, மட்டக்களப்பு, அம்பாறைப் பிரதேசங்களில் தமிழர்கள் வாழ்கின்ற இடங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பின் நிச்சயமாக அங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் ஒரு சிறைப்பட்ட வாழ்வையே வாழ்ந்து கொண்டிருப்பர்.

அம்மாவின் புதிர்ச்சோறு பொங்கலினைச் சுற்றி அம்மாவின் இரண்டாவது மகளும் மூத்த மகளின் பிள்ளைகள் மூவரும் அம்மாவின் இளைய மகனும் நின்றிருந்தனர்.

மெல்ல மெல்ல சாம்பிராணிப் புகையின் மணம் காற்றிற் பரவ குத்துவிளக்கின் சுடர் பெரிதாக எரிந்தது. அம்மா சிறையிலிருக்கும் தன் மூத்த மகனை நினைத்துக்கொண்டாள். அவன் விதைத்து விட்டுச் சென்ற நெல்லில் அறுவடை செய்த புதிர்ச்சோறு...... அம்மா விழிகளில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டாள்.

எதையுமே எதிர்பார்க்காத கணப்பொழுது. நாய்களின் அமளி துமளியான குரைப்புச் சத்தங்கள் ஊரிற் பயப்பீதியை உண்டாக்கின. எதுவோ நடக்கப்போகிறது என்று எண்ணி தம்மைத் தயார்ப்படுத்து முன் அது நடந்தே விட்டது.

தேசவிரோதக் கும்பலுடன் வந்த இராணுவம் வீட்டைச் சுற்றி வளைத்தது. ஒரு அணி வீட்டுக்குட் புகுந்து ஈவிரக்கம் பார்க்காது வெட்டியும், குத்தியும், சுட்டும் கொன்றது. அந்த வீடு

**உண்மைச் சம்பவம்**

மரண ஓலங்களால் நிறைந்து போனது. உயிருக்காக இறைஞ்சுகின்ற கடைசிக் குரல்கள் வீறிட்டுத் தேய்ந்தன.

ஒரு புயலுக்குப் பின் உண்டான அமைதி.

அப்பாவுக்கு ஒன்றுமே தெரியாது. பக்கத்து ஊருக்குப் போய் வந்த அப்பா வயற்கரைப் பக்கமாக வந்தார். தூரத்தே வருகின்றபோதே அசாதாரணமான சூழ்நிலையை உணர்ந்தார். வெளியே மனிதத்தலைகளையே அவர் காணவில்லை. அந்த நிகழ்வு ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்டது போன்ற உணர்வினை அவருக்குள் ஏற்படுத்தியது.

வரப்புகளில் இடறிவிழுந்து ஏறக்குறைய ஓடியே வந்தபோது காட்டரிவாள்களுடன் வந்தவர்கள் அப்பாவை எதிர்கொண்டனர். வயல் வெளியில் வைத்து இதயம் வெடித்த துயரத்துடன் அப்பா கதறினார். தூரத்தே வைத்து அப்பாவைச் சுட்டுப்போட்டுவிட்டு அவர்கள் போய்விட்டார்கள்.

இரத்தக் காட்டேரிகளின் வெறிக்கு அந்த அழகான குடும்பம் பலியாகிப் போனது. ஒரு மணித்தியாலத்தில் எல்லாம் நடந்து முடிந்தது.

உயிரைப் பாதுகாக்க ஓடியொளித்த அந்தக் கிராமத்து மக்கள் ஒன்று கூடிக் கதறி அழுதபடி அவர்களது இறுதிக் கிரியைகளைச் செய்து முடித்தனர்.

இதன்பின்பும் இவ்வாறான பல சம்பவங்கள் நிகழ்ந்தன. தென் தமிழீழத்து மக்களின் விடிகாலைகள் அனேகமாக இராணுவச் சுற்றிவளைப்புகளுக்குள் தான் விடிகின்றன. எந்த வகையிலும்

> அந்த நம்பிக்கைக்கு நாம் அனைவரும் தோள்கொடுக்க வேண்டுமென்று தென்தமிழீழம் வேண்டிநிற்கிறது. அந்தப் பலம் தாயகத்துக்கான மலர்வு என்பதை உணர்ந்து கொள்வோம்.

சுதந்திரமற்ற வாழ்க்கை, திருமணவீடு, சாவீடு எவற்றையும் அவர்கள் சுதந்திரமாகக் கொண்டாட முடியாதவர்களாகத் தான் இருக்கிறார்கள்.

திருமலை, மட்டக்களப்பு, அம்பாறைப் பிரதேசங்களில் தமிழர்கள் வாழ்கின்ற இடங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பின் நிச்சயமாக அங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் ஒரு சிறைப்பட்ட வாழ்வையே வாழ்ந்து கொண்டிருப்பர்.

போர் உலாப்போன பல மாரிகாலங்கள் வந்த பின்னர் எரியுண்டுபோன அந்தப் பிரதேசத்தின் பல கிராமங்கள் எத்தனையோ சோகங்களைத் தாங்கிநின்றன. மெல்ல மெல்ல அற்றுப்போனது அதன் அழகு. கரையோரக் கிராமங்களின் வாழ்வு இருண்டுபோனது. முன்னர் ஒரு



காலத்தில் வற்றாத மீன்வளத்தால் செழித்திருந்த அவர்களது வாழ்க்கை இப்போது காட்டுக்குள்ளே, இராணுவத்திடமும் தேசவிரோதக் கும்பலிடமும் தப்புவதற்காக மறைந்தபடி கழிகிறது.

தாமரை பூத்துக் குலுங்கிய வாவிகளும், மலையிறங்கி ஓடுகின்ற ஆறுகளும், உப்போடைகளும் தமிழரின் குருதி கலந்தவாறு ஓடுகின்றன. அந்த நீர்நிலைகளில் தமிழர்களின் பிணங்கள் உப்பியபடி மிதந்து வருகின்றன. எரிக்கப்பட்ட வயல்களும் அழிக்கப்பட்ட தமிழர் குடியிருப்புக்களுமாக அவர்கள் வாழ்வு வஞ்சிக்கப்பட்ட விதம்...... 1956இல் நூற்றைம்பது தமிழர்களைப் பலி கொண்ட அம்பாறைப் படுகொலை தொடக்கம் அண்மையில் திருமலையின் குமரபுரத்தில் ஏறத்தாழ முப்பது பேரைப் பலிகொண்ட படுகொலை வரை தென்தமிழீழம் எமது தாயகத்துக்காய் கொடுத்துக் கொண்டிருக்கின்ற விலை அதிகம்.

இரண்டாவது ஈழப்போர் தொடங்கியதன் பிற்பாடு மிகமோசமான படுகொலை நிகழ்வுகள் அங்கு நடைபெற்றன. அனேகமான நாட்கள் இராணுவச் சுற்றிவளைப்பிலும் இராணுவக் கெடுபிடிகளிலும் கழிந்தன. அங்கு அவர்களுக்கு அமைதி நிறைந்த, நிம்மதி நிறைந்த அழகான வாழ்வு என்பது இல்லாமற் போயிற்று. பாடசாலை செல்லும் மாணவர்கள் காணாமற் போதல், வேலைக்குச் செல்லும் இளைஞர் யுவதிகளை இராணுவம் கைது செய்து கொண்டு போதல் போன்ற நிகழ்வுகள் வழமையாகிப் போயின. எமது போராட்டத்தின் நீண்ட வரலாற்றோட்டத்தில் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக ஆழமான மனவடுக்களையும் ரணங்களையும் சுமந்தபடி அந்த மக்கள் வாழ்கின்றனர்.

தங்கள் வாழ்வு எப்போது விடியும் என்ற ஏக்கம் நிறைந்த எதிர்பார்ப்போடு காத்திருக்கும் அவர்களுக்குள்ளேயிருந்து நிறையப் புதல்வர்கள் இந்த மண்ணுக்காக வந்தவண்ணம் உள்ளனர். நீண்ட அவலமும் அந்தகாரமும் சூழ்ந்த தமது வாழ்வில் விரைவில் விடிவு ஏற்பட வேண்டும் என்று அவர்கள் நம்பிக்கையோடு இருக்கிறார்கள்.

அந்த நம்பிக்கைக்கு நாம் அனைவரும் தோள்கொடுக்க வேண்டும் என்று தென்தமிழீழம் வேண்டிநிற்கிறது. அந்தப் பலம் தாயகத்துக்கான மலர்வு என்பதை உணர்ந்து கொள்வோம். *

## சிறுகதை

# எம் மண் உயிர்க்கும்

- தமிழீழத்திலிருந்து சுதாமதி -

எங்கும் வெடிமருந்துகளின் மணமும் அழுகிய நாற்றமுமாகக் கிடந்தது. எந்தக் கணமும் உயிரைக் கொண்டுபோகும் எறிகணையொன்று வரலாம். தசைகளைப் பிய்த்துச் சென்று குருதி வடியச் செய்யலாம். ரவைகள் காற்றைக் கிழித்தன. புகைமண்டலம் அடிக்கடி மேலெழுந்து காற்றில் பரவிக்கொண்டிருந்தது.

"எதையோ கொழுத்துகிறான்" பக்கத்திலிருந்த தோழியின் வார்த்தை என்னை உசுப்பிவிட்டது.

அதைத்தான் நானும் பார்க்கிறேன். சுருள் சுருளாகப் புகைகிளம்பி முகிலோடு கலந்தது. இடைக்கிடை அதற்குள் ஏதோ வெடித்துச் சிதறுகின்ற ஒலிகளும்

இராணுவ டாங்கிகள் இரைகின்ற சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. எதையுமே ஜீரணிக்கமுடியாத நிலை. நடந்து முடிந்துபோன சம்பவங்களை மனம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. ஊரோடு குடிபெயர்ந்துபோன உறவுகள், ஆசையாய் அழகுபார்த்துக் கட்டிய வீடுகள், வாங்கி நட்ட பூமரங்கள், கடைகள், விளைநிலங்கள் எல்லாம் பேய் புகுந்தது மாதிரிப் போனது.

கேட்டன.

எம் இனத்தின் இன்பமான கூ[illegible]யிருப்பு எரிந்துகொண்டிருக்கும். பக்கத்திலிருந்த தோழியைப் பார்த்தேன். அவளது கண்கள் சிவந்திருந்தன. நித்திரை இன்றிய இரவுகளை வெளிக்காட்டினவோ, அல்லது அவற்றைப் பார்த்து அழுகிறாளோ? உண்மையில் மூன்று நாட்கள் தொடர்ந்து நித்திரையில்லை. சிறிது ஓய்வு கிடைக்கின்ற பத்து நிமிடங்களோ, அரை மணித்தியாலமோ மெல்லக் கண்ணயர, மீண்டும் எழுந்து ஊர்ந்துசெல்ல, அப்படியே நித்திரை போய்விடும்.

அவளது துப்பாக்கியைப் பற்றிய கைகள் அடிக்கடி இறுகுவதையும், கை நரம்புகள் முறுக்கேறுவதையும் கண்டேன். மெல்ல மெல்ல அவதானித்து ஓசைப்படாமல் நடந்தோம்.

அவளது அந்தப் பள்ளிக்கூடத்துக் கட்டிடத்தைப் பார்த்தபடி அப்படியே நின்றாள். அவளது கண்கள் கலங்கியிருக்க வேண்டும். அதை மறைக்க அடுத்த பக்கம் திரும்பி வேறுபக்கத்தில் கவனத்தைச் செலுத்துபவள் போல வெறித்தாள்.

"அக்கா இந்தப் பள்ளிக்கூடத்திலதான் நான் படிச்சனான். இஞ்சையிருந்துதான் நான் இயக்கத்துக்கு வந்தனான்."

அவளது குரல் கரகரத்தது. அந்தப் பெரிய பாடசாலைக் கட்டிடத்தின் அனேகமான இடங்களை எதிரிகள் சிதைத்திருந்தனர். பாடசாலையின் பெயரைப் பதித்த மாடிக்கட்டிடம் எழுத்துகளோடு இடிந்து போயிருந்தது.

"அக்கா அந்த மாடியிலதான் எங்கட வகுப்பு இருந்தது."

அவள் சுட்டிக்காட்டிய இடத்தில் கரும்பலகையில் எழுத்துக்கள் இன்னும் அழியாமல் கிடந்தன. அண்மையில் அவ்விடத்தில் சண்டை நடந்ததற்கு அடையாளமாக ரவைக் கோதுகளும் குன்றும் குழியுமான நிலமும், இன்னும் சன்னங்களால் ஆழமாகக் கிழிக்கப்பட்டு அரைகுறையாய் நின்ற மரங்களும் கிடந்தன.

நாம் சற்றுத் தள்ளியிருந்த அந்தக் காப்பரணுக்கு ஊர்ந்தபோது எம்மோடு அந்த நாய்களும் வந்தன. தோல்கள் ஒட்டி எலும்புகள் துருத்திக்கொண்டு நின்ற நாய்கள் இரண்டும் எம்மிடம் எதையோ யாசிப்பதாகப்பட்டது. அடிக்கடி நாக்குகளைத் தொங்கப் போட்டபடி வழமையான குரலைவிட மெல்லிய முனகலாகக் கத்தின. பசியால்தான் அப்படிக்கத்துவதாக எனது தோழி சொன்னது நினைவுக்கு வந்தது.

சிலவேளை தன்னை வளர்த்த எஜமானை நினைத்துத்தான் அப்படிக்கத்துகிறதோ என்னவோ? அதை வளர்த்த வீட்டுக்காரன் தனது வீட்டைப்போல, தான் விட்டுச் சென்ற பயிர் முற்றிய தோட்டத்தைப்போல அதனையும் நினைத்தவாறு வேதனைப்பட்டுக்கொண்டிருப்பான். நெஞ்சு வலித்தது. பாறாங்கல் கொண்டு அமுக்குவது போல வேதனையாக இருந்தது.

எதிரேயிருந்த வீட்டின் முன் விறாந்தை, எறிகணையால் சிதைந்து போயிருந்தது. சுவரிற் கொழுவியிருந்த அழகிய வண்ணக்காட்சிப் படமும் சட்டமிடப்பட்ட குடும்பப் படமும் சிதறிப்போய், கொழுவியிருந்த ஆணியோடு விழுந்திருந்தன. கதிரைகளின் மேலே வீட்டின் உடைந்த தூள்கள், 'கொங்கிறீற்' துண்டுகள் கிடந்தன.

எதையாவது சாப்பிட வேண்டும்போல இருந்தது. அவ்வளவு பசி. காலைச் சாப்பாட்டு நேரம் கடந்து மதியநேரம். தெருவெங்கும் வெம்மை கொட்டியது. அதைவிட மனம்...... இன்னும் சாப்பாடு வருவதற்கான அறிகுறியைக் காணோம். பாதைகளைச் சீராக்கும்போது எவ்விடத்தில் மாமரத்தைக் காணுகின்றோமோ, அவ்விடத்தில் நின்று மாங்காய்களைக் கடித்து வயிற்றை நிறைத்துக் கொள்வதோடு சரி. சாப்பாட்டைக் கண்டு மூன்று நாட்கள் ஆகிவிட்டன. நிலமை அப்படி. வழமையாகச் சாப்பாடு கொண்டுவரும் தம்பி கூட முந்தநாள் நடைபெற்ற எதிரியின் கண்மூடித்தனமான எறிகணை வீச்சில் வீரச்சாவடைந்து விட்டதாகச் சொன்னார்கள்.

இருட்டத் தொடங்கிவிட்டது. யாழ்ப்பாணம் அரையிருட்டில் ஊமையாய்க் கிடந்தது. வீடுகளுக்குள் இருந்த நாய்கள் அங்கு மிங்கும் ஓடித்திரிந்து அந்தரித்தபடி ஊளையிட்டன. இராணுவம் அடி க்கடி விடும் பரா வெளிச்சத்தைத் தவிர நகரம் அசைவற்றிருந்தது. ஒரு பரா வெளிச்சம் அந்தரத்தில் நின்று தொங்கிவிட்டு ஏதோ ஓர் உயரமான கட்டிடத்துக்குள் விழுந்து அணைந்துபோனது.

"வேம்படிப் பள்ளிக்கூடத்து மாடியில தான் விழுந்திருக்கவேணும்."

என்னோடு நின்ற தோழி சொன்னாள். நேற்று முன்தினம் நடைபெற்ற அகோரமான எறிகணை வீச்சுக்கள் தாராளமாக வேம்படி மகளிர் பாடசாலையின் உயரமான மாடிக் கட்டிடங்களைப் பதம்பார்த்தன. நேற்றுப் பிற்பகல் அவ்வழியால் வரும்போது 'வேம்படி' உருக்குலைந்துபோயிருந்தது.


அந்தப் பாடசாலையில் ஏறத்தாழ மூன்று மாதத்துக்கு முன்னர் 'போர்க்காலக் கருத்தரங்கு' வைத்தது எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. இன்றைய இளைய தலைமுறை போராடவேண்டிய தேவையை நன்றாக உணர்த்தி, அது ஒவ்வொருவர் தலையிலும் சுமத்தப்பட்டுள்ள வரலாற்றுக் கடமை என்பதையும் வற்புறுத்திக் கூறியபோது, எல்லோரும் உணர்வு பூர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். இறுதியாக எல்லோரும் எழாது விடினும் "இந்தப் பாடசாலை யிலும் எதிரி குடியிருக்கலாம்" என்பதைச் சொன்னபோது, நிறையச் சிந்தித்தார்கள். ஒருவரையொருவர் பார்த்து, தங்களுக்குள் பேசி சில மாணவிகள் அன்று எம்மோடு வந்தனர். இப்போது அவர்கள் பயிற்சி எடுத்துக்கொண்டிருப்பார்கள்.

எல்லோரும் உணர்வு பூர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். இறுதியாக எல்லோரும் எழாதுவிடினும் "இந்தப் பாடசாலையிலும் எதிரி குடியிருக்கலாம்"" என்பதைச் சொன்னபோது, நிறையச் சிந்தித்தார்கள். ஒருவரையொருவர் பார்த்து, தங்களுக்குள் பேசி சில மாணவிகள் அன்று எம்மோடு வந்தனர். இப்போது அவர்கள் பயிற்சி எடுத்துக்கொண்டிருப்பார்கள்.

இப்போது அங்கு படித்துக்கொண்டிருந்த மாணவிகள் தங்களது பாடசாலைகளைப் பறிகொடுத்த பின்னரும் எங்காவது இன்னொரு பாடசாலையில், அல்லது உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்திருக்கலாம். இதயத்தின் அடி ஆழத்திலிருந்து மெல்லிய பெருமூச்சு ஒன்று கிளம்பியது.

சரமாரியான எறிகணைகள் கணத்துக்குக் கணம் எம்மை நோக்கி வந்து கொண்டிருந்தன. கந்தகப் புகையும் அதிர்வால் கிளம்பிய புழுதியும் எமது உடுப்புக்களை, பற்றியிருந்த ஆயுதங்களைக் குளிப்பாட்டியது.

வழி தவறிய பசுக்கன்று ஒன்று அங்கும் இங்கும் பயப்பிராந்தியோடு பார்த்து



க்கொண்டிருந்தது. அது தனது தாய்ப்பசுவை எங்கேனும் எறிகணைக்குப் பறிகொடுத்திருக்கலாம். அல்லது இராணுவம் அதனை இறைச்சியாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

இராணுவ டாங்கிகள் இரைகின்ற சத்தம்

எம்மவரின் எண்ணிக்கை குறைவு. ஆனால் ஒவ்வொருவரும் பல கைகள் முளைத்தவர்கள்போலச் சண்டையிட்டனர். ஆனாலும் அவளது கீச்சுக்குரல் எல்லாவற்றையும் மேவிக் கேட்டவண்ணம் இருந்தது,"அக்கா எங்கட தோட்டத்துக்குள்ளால வாறான். உவனைப் புரட்ட வேணும்."

கேட்டுக்கொண்டிருந்தது. எதையுமே ஜீரணிக்கமுடியாத நிலை. நடந்து முடிந்துபோன சம்பவங்களை மனம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. ஊரோடு குடிபெயர்ந்துபோன உறவுகள், ஆசையாய் அழகுபார்த்துக் கட்டிய வீடுகள், வாங்கி நட்ட பூமரங்கள், கடைகள், விளைநிலங்கள் எல்லாம் பேய் புகுந்தது மாதிரிப் போனது.

சில நாட்களின் முன்னர் சுமையோடு ஓடிவந்து களைத்துப்போன ஒரு அம்மா எம்மிடம் தண்ணீர் கேட்டு குடித்துவிட்டு அழுதார். "இந்த முறை தோட்டத்தில நல்ல விளைச்சல். இரண்டு நாள் கழிச்சு வெங்காயம் கிண்டுவம் எண்டு ஆயத்தப்படுத்தினம் பிள்ளை, ஆமிக்காரர் வந்திட்டாங்கள். எங்கேயோ திரிஞ்சு கடன்பட்டு மாடாய் உழைச்சு அடைஞ்சபலனை எடுக்கிறதுக்கிடையில ஊருக்குள்ளை வந்திட்டாங்கள். எல்லாம் போச்சுதம்மா"

அம்மா தலைதலையாய் அடித்துக் குமுறினார்.

பிறகு எல்லாம் அடங்கி, சமாதானப்படுத்தி தேறுதல் கூற, கேட்டார், "மெய்யே பிள்ள எப்ப ஊருக்குப் போறது?"

அம்மாவுக்குச் சரியான ஏக்கம், எல்லா அம்மாமாரையும்போல.

வரவரக் கிட்டவாக இராணுவத்தின் டாங்கிகள் இரைகின்ற சத்தம் கேட்டது. இன்னும் முழுமையாக விடியவில்லை. பனிபடர்ந்த காலை. ஒரு சில நாட்களுக்குள்ளேயே வளர்ந்துவிட்ட புல் பூண்டுகள், மனிதர்கள் இல்லாத வெறுமையைப் பறைசாற்றின. எமது அணிகள் தற்பாதுகாப்பு நிலையெடுத்து எதற்கும் ஆயத்தமாகவே நின்றன. சில எண்ணிக்கையிலான போராளிகள்தான். ஒவ்வொருவருடைய மனங்களிலும் சண்டையை எதிர்கொண்டு முறியடிக்கின்ற மன உறுதி தெரிந்தது.

என்னோடிருந்த தோழி வழமையைவிட மிகுந்த உற்சாகமாகத்தான் இருந்தாள்.

அடிக்கடி தனது ரவைக்கூட்டுத் தாங்கியிலிருந்த கைக்குண்டுகளைத் தடவிப் பார்த்தாள். சிறிது நேரத்துக்கு முன்னர் அடிக்கடி "பசிக்குது" என்று சிணுங்கிய அந்தக் குரலைக் காணவில்லை. தன் அருகிலிருந்த எல்லா இடத்தையும் சுற்றிப் பார்த்தாள். காப்பகழிக்குள்ளிருந்து குதித்தபடி எழுந்தாள்.

"கவனம் வெளியில வீணா நிக்காதை. அடிக்கடி செல் அடிக்கிறான்."

அவள் காப்பகழியின் மண்மூடையின் மேல் ஏறி நின்றபடி எதிரே தொலைவில் தெரிந்த வீடுகளை உற்றுப் பார்த்தாள். ஒரு புதிய பொருளைக் கண்டுவிட்டாள் போல மகிழ்ச்சி பொங்கக் கூச்சலிட்டாள்.

"அங்க எங்கட வீடு தெரியுது." அவள் காட்டிய பகுதியிலிந்து இராணுவம் கவசவாகனங்கள் சகிதம் முன்னேறத் தொடங்கியது. மும்முரமாகச் சண்டை நடைபெற்றது. எம்மவரின் எண்ணிக்கை குறைவு. ஆனால் ஒவ்வொருவரும் பல கைகள் முளைத்தவர்கள்போலச் சண்டையிட்டனர். ஆனாலும் அவளது கீச்சுக்குரல் எல்லாவற்றையும் மேவிக் கேட்டவண்ணம் இருந்தது,

"அக்கா எங்கட தோட்டத்துக்குள்ளால வாறான். உவனைப் புரட்ட வேணும்."

அவள் கத்தியபோது ரவையொன்று அவளது தலையைத் துளைத்தது. அவளது பிஞ்சுப்பருவம் கரைந்த மண்ணிலேயே அவள் விழுந்தாள்.

"அக்கா இந்த றைபிளைக் கவனமாகக் கொண்டு போங்கோ. இந்த ஊரிலையிருந்து இதைத் தூக்கிறத்துக்கு நிறையப் பெட்டையள் வருவாளவை."

அதுதான் அவளது கடைசிக் குரலாக இருக்கவேண்டும். அதற்குப் பிறகும் அங்கு சண்டை நடந்தது. ✿




# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இரண்டு - மூன்று

தொடர்ச்சி

### லியோன் யூரிஸ்

வெளியே ஒரு நடுங்குகின்ற நியோன் விளம்பரம்கூட இருந்தது. ஆமாம் அதன் பெயர் கோர்ணி என நினைக்கிறேன். தெருவில் தெரியும் முகங்கள் மங்கலாகத் தெரியும் வரை இலக்கில்லாமல் மணிக்கணக்காக நடப்பேன். அல்லது நாட்கணக்காக யன்னலூடாகப் பார்த்தபடி அமர்ந்திருப்பேன். ரொம்... சாண்ட்ரா...., ரொம்... சாண்ட்ரா...., அது எப்போதுமே என்னை விட்டு அகலவில்லை".

கிற்றி, மார்க் தனக்குப் பின்புறமாக இருப்பதை உணர்ந்தாள். மார்க் அவளது தோள்களை இறுகப் பிடித்துக்கொண்டான். கடலில் அந்த இழுவைப் படகு கடற்சுவர்களின் கரங்களூடாக இருந்த இடைவெளியை நெருங்கிக் கொண்டிருந்தது. அவள் தன்னுடைய ஈரமான கன்னங்களை மார்க்கின் கைகளில் தேய்த்து விட்டுக் கொண்டாள்.

"ஒரு இரவு நான் அளவுக்கு மீறிக் குடித்துவிட்டேன். என்னைப் பற்றி உனக்குத் தெரியும் தானே. எனக்கு அளவுகணக்காகக் குடிக்கத் தெரியாது. அன்று நான் ஒரு பையனை ரொம்மினது போன்ற பச்சைச் சீருடையில் கண்டேன். அவன் தனிமையில் வாடுபவனாக ஒட்ட வெட்டிய தலைமயிரோடு இருந்தான். சரியாக ரொம்மைப்போல.... நாங்கள் இருவரும் ஒன்றாக மதுவருந்தினோம். நான் ஒரு மூன்றாந்தர ஹொட்டல் ஒன்றில் கண்விழித்தேன். அது எங்கிருந்தது என்பது கூட எனக்குத் தெரியாது. அப்போதும் எனக்குப் போதை தெளிந்திருக்கவில்லை. நான் தட்டுத்தடுமாறிப்போய் கண்ணாடியில் என்னைப் பார்த்தேன். நான் நிர்வாணமாகத் தெரிந்தேன். அந்தப்பையனும் அப்படியே கட்டிலின்மீது விழுந்து கிடந்தான்".

'கிற்றி... கடவுளுக்காக...'

"பரவாயில்லை மார்க்.... என்னைக் கதைத்து முடிக்கவிடு. நான் அன்று அக்கண்ணாடியின் முன் பார்த்தபடி நின்றேன். எவ்வளவு நேரம் நின்றேனோ எனக்கே தெரியாது. வாழ்க்கையின் கீழான மட்டத்தை அன்று அடைந்திருந்தேனே. அதைவிட கீழான மட்டம் எனக்கு இருக்க முடியாது. அந்த நேரத்தில்..... அந்த செக்கனில்.... எனக்குள் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அந்தப் பையன் உணர்வில்லாமல் கிடந்தான். புதுமைதான். அவனது பெயர் கூட ஞாபகம் இல்லை. அவனது சவரக் கத்திகளையும், கூரையிலிருந்து கீழிறங்கிய வாயு குழாய்களையும், குளியலறையில்..... ஒரு நிமிடமோ.... ஒரு மணித்தியாலமோ பார்த்துக்கொண்டிருந்தேன். விளிம்புச் சுவரிலிருந்து பத்துமாடியிலிருந்து கீழ்நோக்கி எவ்வளவு நேரம் பார்த்துக்கொண்டிருந்தேனோ எனக்கே தெரியாது. எனது வாழ்க்கையின் முடிவு என்னை நெருங்கி வந்தாலும் அந்த முடிவை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனோபாவம் எனக்கு இருக்கவில்லை. அப்பொழுதுதான் எனக்குள் ஒரு மாற்றம் ஏற்பட்டது. ரொம்மும் சாண்ட்ராவுமில்லாமல், நான் தொடர்ந்து வாழ வேண்டுமெனத் தெரிந்து கொண்டேன். அத்தோடு திடீரென எனது வேதனைகள் நின்று போயிற்று".

"கிற்றி... அன்பே.... உன்னைத்தேடிக் கண்டுபிடித்து உதவ எவ்வளவோ விரும்பினேன்".

"எனக்குத் தெரியும், ஆனால் இது நானே செய்து முடிக்க வேண்டிய போராட்டம். நான் திரும்பவும் பைத்தியக்காரத்தனமான வேகத்தோடு தாதித் தொழிலில் மூழ்கினேன். ஐரோப்பாவில் போர்முடிந்ததும், நான் இந்தக் கிரேக்க அனாதைகள் சரணாலயத்தைப் பொறுப்பெடுத்தேன். இது ஒரு 24 மணித்தியால வேலை. அதுதான் எனக்குத் தேவையாய் இருந்தது. மார்க் நான்... நான்... உனக்கு நூறு கடிதங்களாவது எழுதத்தொடங்கியிருப்பேன். ஆனால் உன்னைச் சந்திக்க நேரும் இந்தக் கண நேரத்தைப்பற்றி மிகவும் பயமடைந்திருந்தேன். ஆனால் இப்போ மகிழ்ச்சியாய் இருக்கிறேன். அந்தக்கணம் வந்து போய்விட்டதைப் பற்றி மகிழ்ச்சியாய் இருக்கிறேன்".

"உன்னைக் கண்டுபிடித்தது எனக்கு மகிழ்வைத் தருகிறது" என்றான் மார்க்.

அவள் மார்க்கிற்கு சுழன்று திரும்பிச் சொன்னாள் "இதுதான் கிற்றி பிறமென்ருக்கு நிகழ்ந்தது".

மார்க் அவளது கையை தன்கையில் எடுத்துக்கொண்டான். அவர்களிருவரும் கடற்சுவரருகோடு இறங்குதுறை நோக்கித் திரும்பி நடக்கத் தொடங்கினார்கள். டோம் ஹோட்டலின் இசையை அவர்களுக்குக் கேட்கக்கூடியதாக இருந்தது. ☆☆☆

### அத்தியாயம் நான்கு

கைரேனியாவிலிருந்து 49 மைல்களுக்கு அப்பால் பாமகஸ்ராவில், கிப்பேகிரட்டஸ் வீதியில், அமைந்திருந்த தனது காரியாலயத்தில் சைப்பிரசின் இராணுவத் தளபதி என்ற ரீதியில், ஒரு மேசையின் பின்னால் அமர்ந்திருந்தார் பிரிகேடியர் புரூஸ் சுதர்லான்ட். நடுவயிற்றுப் பகுதியில் ஊளைச் சதை போட்டும்,நெற்றி அருகோடு நரை ஓடியிருந்தும், அவரது 55வயதை உருவம் காட்டவேயில்லை. அவரது கம்பீரமான தோற்றம் ஒரு இராணுவக் கட்டுப்பாடான மனிதனை இனம் காட்டியது. கதவு தட்டப்பட்டதைத் தொடர்ந்து அவரது உதவியாளர் மேஜர் பிறெடி கால்ட்வெல் நுழைந்தார்.

மாலை வந்தனங்கள், கால்ட்வெல். கைரேனியாவில் இருந்து வந்து விட்டீரா, கதிரையொன்றில் அமருங்கள். சுதர்லாண்ட் தனக்கு முன்னாலிருந்த கடதாசிக் குவியலை ஒரு பக்கமாகத் தள்ளிவிட்டு சோம்பல் முறித்து, மூக்குக் கண்ணாடியையும் கழற்றி மேசைமீது வைத்தார். தனது சுங்கான்களில் ஜி. பி, டி சுங்கான் ஒன்றைத் தெரிவு செய்து ஹியுமிடோர் ஒவ் டன்கில் (Humidor of DunhiII) புகையிலைத் தூள் கலவையால் நிரப்பிக் கொண்டார். கால்ட்வெல், பிரிகேடியர் அளித்த சுருட்டுக்காக நன்றி தெரிவித்து விட்டு இருவருமாக அறையைப் புகை மண்டலமாக்கத் தொடங்கினர். அழைப்பு மணியோசைக்கு, கிரேக்க பணியாளன் ஒருவன் தலையை நீட்டினான்.

"ஜின்னும் ரொனிக்கும் இரண்டு தடவைகள் கொண்டு வா" சொல்லிவிட்டு எழுந்து வெளிச்சத்துக்கு வந்தார் சுதர்லாண்ட், அப்போதைக்கு ஒரு கடும் சிவப்பு நிற வெல்வெட், புகைப்பதற்காகவே அணியும் மேலங்கியை (Smoking Jacket) அணிந்து கொண்டிருந்தார். அவர் புத்தக அலுமாரியின் முன் இருந்த குஷன் கதிரையில் அமர்ந்தபடி கேட்டார்.

"மார்க் பார்க்கரைக் கண்டீரா?"

"ஆம் ஐயா"

"உமக்கு என்ன தோன்றுகிறது!"

தோள்களைக் குலுக்கியபடியே கால்ட்வெல் "மேலோட்டமாகப் பார்க்கும்போது நிச்சயமாக அவனை எதுபற்றியும் குற்றம் சாட்ட முடியாது. அவன் பலஸ்தீனத்துக்குப் போகும் வழியில் இங்கு அவன் அந்த அமெரிக்கத் தாதியான கத்தரீன் பிறமென்ரைச் சந்திக்க வந்துள்ளான்" என்றார்.

"பிறமென்ற் ? ஆ.. சரி... சரி... ஆளுநருடைய விருந்தில் சந்தித்த அந்த அழகான பெண்மணியல்லவா?

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன், எல்லாமே மிகவும் அப்பாவித்தனமாக இருக்கிறது. ஆனால் மார்க் பார்க்கர் ஒரு நிருபர்.. அவன் எங்களுக்கு ஒல்லாந்தில் ஏற்படுத்திய பிரச்சினையை என்னால் மறக்க முடியாது.

"இதோ பார், போரில் எல்லோரும் பிழை விட்டிருக்கிறோம். அவன் தற்செயலாக எங்களுடைய பிழையொன்றைக் கண்டு பிடித்தான். அதிர்ஷ்டவசமாக எமது பக்கம் வென்றது. ஆனால் இப்போ இதைப்பற்றி ஒரு 10 பேரும் ஞாபகம் வைத்திருக்க மாட்டார்கள்" சுதர்லாண்ட் சொன்னார்.

ஜின் வந்ததும் வாழ்த்துக் கூறிக் கொண்டு அருந்தத் தொடங்கினர். சுதர்லாண்ட் தன்னுடைய கிளாசைக் கீழே வைத்துவிட்டு தன்னுடைய வெண்மையான மீசையைத் தடவிக் கொண்டார். கால்ட்வெல்லுக்கோ திருப்தியாயிருக்கவில்லை.

"தற்செயலாக பார்க்கர் இங்குள்ள விடயங்களில் ஆவல் கொண்டு தோண்டித்துருவிப் பார்க்க முடிவு செய்தால். அவனைக் கவனிக்க இரண்டொரு புலனாய்வாளர்களைப் போடுவது நல்லதென்று நீங்கள் கருதவில்லையா?" அவர் மேலும் வலியுறுத்தினார்.

"இதோ பார், அவனை அவனுடைய பாட்டில் விட்டுவிடு. ஒரு நிருபருக்குத் தடை ஏற்படுத்தினால் அது பிறகு தேனீக்கூட்டை குழப்பியது போலாகிவிடும். அகதிகளைப் பற்றிய செய்திகளெல்லாம் இப்போ பழம் கஞ்சி போல் ஆகிவிட்டது. அவன் அவர்களுடைய முகாம்களில் கவனம் செலுத்துவான் என்று நம்பவில்லை. அவன் செயற்பாட்டைத் தடை போடுவதால் அவன் ஆவலைத் தூண்டிவிடும் அபாயமான காரியத்தில் நாங்கள் இறங்கத் தேவையில்லை. என்னைக் கேட்டால் இன்றைக்கு நீர் அவனைச் சந்திக்கப் போனதே பிழை எனச் சொர்வேன்.

"ஆனால் பிரிகேடியர் அவர்களே, அந்த ஒல்லாந்துப் பிரச்சனைக்குப் பிறகு?"

இவர்கள் குற்றவாளிகளல்ல. உலக அனுதாபமும் அவர்கள் பக்கமிருக்கிறது. குழப்பங்கள் கரைச்சல்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதும், எமக்கெதிரான பிரச்சாரத்துக்குப் பாவிக்கக்கூடிய எதுவும் நிகழாமலும் பார்த்துக் கொள்வது எனதும் உனதும் கடமையாகும்.
"அது உனக்கு விளங்குகிறதா?"

தொடர்ச்சி 10ம் பக்கம்..

சரியாக இரண்டு மாதங்களின் பின் சாண்ட்ரா போலியோவினால் இறந்து போனாள். எனக்கு அதிகம் ஞாபகமில்லை. எனது பெற்றோர் என்னைக் கொண்டு போய் வேர்மொன்ரில் நிலையத்தில் சேர்த்து விட்டார்கள்".

"பைத்தியக்கார ஆஸ்பத்திரியா"?

"இல்லை, அதுதான் ஏழைகளுக்கான இடத்துக்கு அவர்கள் சொல்லும் பெயர். நான் போன இடத்தை அவர்கள் மனோநிலை பாதிக்கப்பட்டவர்களின் ஓய்வெடுக்கும் வீடு என்பார்கள். அங்கு எவ்வளவு மாதங்கள் கழிந்தன என்று எனக்குத் தெரியாது. எனக்கு அதிகம் ஞாபகம் இல்லை. நான் இரவும் பகலும் ஒரு பூரணமான மூடுபனிக்குள் இருந்தேன். அதை சோகமாயிருத்தல் (Meloncholia) என அழைப்பார்கள்".

திடீரென கிற்றியின் குரல் உறுதிப்பட்டது. மனக்கதவு திறந்து உள்ளடைபட்டிருந்த துன்பம் வெளியே வரத் தொடங்கியது.

"ஒருநாள் என் மனதை மூடியிருந்த திரை விலக எனக்கு ரொம்மும், சாண்ட்ராவும் இறந்து போனது ஞாபகத்திற்கு வந்தது. சோகம் என்னைப் பற்றிக் கொண்டது. ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு பொருளும் எனக்கு அவர்களையே நினைவுக்குக் கொண்டு வந்தது. ஒவ்வொருதரம் ஏதாவது பாடலைக் கேட்கும்போதும், சிரிப்புச் சத்தத்தைக் கேட்கும் ஒவ்வொருதரமும், குழந்தைகளைக் காணும் ஒவ்வொருதரமும், நான் இழுக்கும் ஒவ்வொரு மூச்சும் என்னைத் துன்பப் படுத்தியது. அந்த மூடுபனி என்னைத் திரும்பவும் மூட நான் பிரார்த்தனை செய்தேன், மார்க் நான் பிரார்த்தனை செய்தேன். எனக்கு எதுவுமே ஞாபகம் வராமல் பைத்தியமாகவேண்டுமெனப் பிரார்த்தித்தேன்".

அவள் எழுந்து உயரமாக நின்றாள். கன்னங்களில் நீர் ஆறாக வழிந்தோடியது. "நான் நியூயோர்க்கிற்கு ஓடிப்போனேன். அதன் கொடி முட்களில் என்னைப் புதைத்துவிட எனக்கென நாலு சுவர்கள், ஒரு கதிரை, ஒரு மேசை, ஒரு தொங்கியாடுகின்ற மின்குமிழ் எல்லாம் இருந்தன". அவள் ஒரு வரண்ட சிரிப்பை உதிர்த்தாள். "எனது யன்னலுக்கு

ஒருநாள் என் மனதை மூடியிருந்த திரை விலக எனக்கு ரொம்மும், சாண்ட்ராவும் இறந்து போனது ஞாபகத்திற்கு வந்தது. சோகம் என்னைப் பற்றிக் கொண்டது. ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு பொருளும் எனக்கு அவர்களையே நினைவுக்குக் கொண்டு வந்தது. ஒவ்வொருதரம் ஏதாவது பாடலைக் கேட்கும்போதும், சிரிப்புச் சத்தத்தைக் கேட்கும் ஒவ்வொருதரமும், குழந்தைகளைக் காணும் ஒவ்வொருதரமும், நான் இழுக்கும் ஒவ்வொரு மூச்சும் என்னைத் துன்பப் படுத்தியது. அந்த மூடுபனி என்னைத் திரும்பவும் மூட நான் பிரார்த்தனை செய்தேன்




# வித்துக்கள்

**அத்தியாயம் 6 இன் தொடர்ச்சி**

எனவே, ஜெயதாவுக்கு ஏற்பட்ட மரணம் பற்றிய விடயத்தைக் கேட்கத் தொடங்குகின்றோம்.

ஜெயதாவுக்கு வயது இருபத்தைந்து. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உயிரியல் இறுதியாண்டு மாணவி. சொந்த இடம் கந்தரோடை. ஜெயதாவும், மூத்த சகோதரியும், தாயும், தந்தையும் மட்டும்தான் வீட்டில்.

9ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து, கந்தரோடைப் பகுதியில் இருக்கமுடியாத அளவுக்கு எறிகணை வீச்சுக்கள் அதிகரிக்கவே, அவர்கள் குடும்பமாக ஆனைக்கோட்டை, குளப்பிட்டி வீதியில் உள்ள தாய்மாமன் கணேசவேல் வீட்டுக்கு வந்தனர்.

அங்கு வந்தும்கூட இரவு முழுவதும் அமைதியாக இருக்க முடியவில்லை. அங்கும் எறிகணைகள் வந்து விழுந்தன. அவர்கள் வீட்டு மதிற்கரையோடு சென்று கொண்டிருந்த குளப்பிட்டி வீதியில் மானிப்பாய், நவாலிப் பக்கங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் சென்று கொண்டேயிருந்தனர். இவர்களுக்கும் அங்கே இருக்கப் பிடிக்கவில்லை. ஆனால், வீட்டை விட்டுப் புறப்படவும் முடியாமல் இருந்தது. ஏனெனில், வீதியிலே சென்றுகொண்டிருந்தவர்களிற் பலர் எறிகணை வீச்சுக்கு இலக்காகியதுடன், சிலர் வீதியில் விழுந்து இறந்தனர்.

விடிகின்ற வேளையில், இனியும், அங்கு இருக்கக்கூடாது என்ற தீர்மானத்துடன், அதே வீதியில் சற்றுத் தொலைவில் உள்ள தெரிந்தவர் ஒருவரது வீட்டில் சென்று தங்குவதென்று, இரண்டு குடும்பத்தவரும் முடிவு எடுத்தனர். கணேசவேல், மனைவி, மகன் தேவகணேசன், ஜெயதா, சகோதரி, தந்தை நவரட்ணம், தாயார் எல்லோரும் புறப்பட்டு தாவடிப்பக்கம் நடந்துவந்து, அந்த நண்பரின் வீட்டை அடைந்தனர். அவர்கள் அங்கு வந்தனர் என்பதைவிட, விதி அவர்களை அழைத்து வந்தது என்பதுதான் பொருந்தும்.

அன்று 10ஆம் திகதி காலை..........தாவடியில் வேலாயுதம் வீட்டின் மீது குண்டு பொழிவதற்கு முன்னர், தாவடியில் இவர்கள் இருந்த வீட்டுக்கு தள்ளி இருந்த வீட்டில் குண்டு பொழிந்தது. அந்தக் குண்டு வெடித்துச் சிதறியதில் பறந்த துண்டுகள் இவர்கள் இருந்த வீடுவரை வந்துவிழுந்தன. அப்படி விழுந்த துண்டுகளில் ஒன்று ஜெயதாவின் விலாவை ஊடறுத்துப் புகுந்தது.... அந்தக் கொடிய ஊடுருவலைத் தாங்க முடியாமல் ஜெயதாவின் பூவுடல் துவண்டு விழுந்தது— உடன் உயிர் பிரிந்துவிட்டது.

பக்கத்தில் நின்ற, மாமன் கணேசவேலின் மகன் பதினைந்து வயதுத் தேவகணேசனின் பிடரியை, இன்னுமொரு துண்டு பிளந்து சென்றது. அக்கணத்திலேயே உயிர் பிரிந்து உடல் விழுந்தது.

மற்றுமொரு துண்டு முன்வீட்டு மதிலைத் துளைத்துக் கொண்டு சென்று, அங்கு நின்ற அப்புக்குட்டி எனும் முதியவரின் உயிரைக் குடித்தது. அயல் வீடுகளுக்கும் துண்டுகள் பறந்து பலருக்குக் காயங்களை விளைவித்தன.

குண்டுவீச்சும், எறிகணை அடியும் தொடரவே, வீதியில் சென்று கொண்டிருந்தவர்களின் வேகமும், தொகையும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. அழைத்த குரலுக்கு நின்று உதவி செய்பவர்கள் எவருமில்லை. வீதியிலே விழுந்து கிடப்பவனை யாரென்று நின்றுகூடப் பார்க்காமல், பாய்ந்து கடந்து, தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடுபவர்கள் கூட்டமே அங்கு சென்றுகொண்டிருந்தது. அது அவர்களின் பிழையுமல்ல – மற்றவர்களைக் காப்பாற்ற நின்றால்..... தானே இறந்துவிடக்கூடும் என்கின்ற அச்சமான சூழ்நிலையே, அங்கு அப்பொழுது நிலவியது. அங்கு நின்றவர்கள் அனைவருக்கும் அழுதுகொண்டிருப்பதைத் தவிர, வேறு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அரைமணி நேரம் கழித்து.....போராளிகள், வாகனம் ஒன்றில் வந்து, காயப்பட்டவர்களை ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றனர். பின்னர் அவர்கள் இருவரது உடலங்களும் இரண்டு பேழைகளில் வைக்கப்பட்டு 'ஓட்டோ' மூலம் அங்கிருந்து நேரே கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது.

நேரம் நண்பகல் ஆகிவிட்டிருந்தது. அத்தோடு எமது பகற் சந்திப்புக்களை முடித்துக்கொண்டு, பிற்பகல் தொடரலாம் என்று முடிவெடுத்தோம்.

"பின்னேரம் எங்க போறது நாவண்ணன்?" என்று கேட்டார் டேவிட்.

என்னுடைய மனதில், அன்று திருநெல்வேலியில், தெல்லிப்பளைப் பிரதேசச் செயலகத்தில் நான் சந்தித்த அந்த வயது போன அம்மா நினைவுக்கு வந்தார்.

மெலிந்த தோற்றம், சிவந்த மேனி, முகத்திலே இன்னும் அதிர்ச்சியில் இருந்து விடுபடாத பயத்தின் சாயல் – பேரன் வசந்தகுமாருடன், இறந்த தனது கணவர் கணபதிப்பிள்ளையின் மரணப்பதிவைச் செய்வதற்கு வந்திருந்தார். அவரது பெயர் நாகம்மா.

அன்றைக்கு அவருடன் நான் பேச முயன்றபோது ஏதோ தயக்கத்தில் இருப்பதுபோன்று இருந்தார். பேரன் வசந்தகுமாரிடம்தான் கதைத்து வேண்டிய தகவல்களைப் பெற்றிருந்தேன். என்றாலும் இன்னுமொரு சந்தர்ப்பத்தில் வீட்டுக்குச் சென்று, அவர் வாயாலேயே முழுவிபரங்களையும் பெறவேண்டும் என்று நினைத்திருந்தேன். பிற்பகல் அங்கு போகலாம் என்ற திட்டத்தை அவருக்குக் கூறினேன். அவரும் சம்மதித்தார்.

அவர்கள் தற்பொழுது இடம்பெயர்ந்து இருக்கும் தற்காலிக முகவரியான வண்ணார்பண்ணை, கேசாவில் பிள்ளையார் கோவில் வீதியில் உள்ள அந்த வீட்டைச் சென்றடைந்தோம். வாசலில் எம்மை வரவேற்றவர் நாகம்மாவின் பேரன் வசந்தகுமார்தான். வசந்தகுமாரின் தாயார் கண்மணி மற்றும் உறவினர்களும் அங்கே இருந்தனர். அவரைப் பேசவைத்து விடயத்தைக் கிரகித்துக்கொள்வதற்கு ஏற்ற நல்ல சூழல் என்ற நம்பிக்கை மனதுக்குள். நாகம்மாள் உள்ளே இருந்தார். "அன்றைக்கு அம்மாவிடம் அதிகம் பேசமுடியவில்லை. இன்று அவருடன் பேசுவதற்காகவே வந்துள்ளோம்" என்று அவரின் மகள் கண்மணிக்கும் பேரன் வசந்தகுமாருக்கும் விடயத்தை விளக்கிக் கூறவே, உள்ளேயிருந்த அவரை அழைத்து வந்தனர்.



முதலில் வசந்தகுமாரிடமும் தாயாரிடமிருந்தும் ஆரம்ப நிகழ்வுகளைக் கேட்டறிந்துகொண்டு, பின்னர் அவர்கள் இருவரும் சீரணி நாகம்மாள் கோவிலிற் தனித்து விடப்பட்டதில் இருந்து நடந்த சம்பவங்களை அந்த அம்மாவின் வாயின்மூலம், கேள்விமேல் கேள்வி போட்டுப் பெற்றுக்கொண்டோம்.

அளவெட்டி மேற்கு, மூளிவைரவர் கோவிலடியில்தான் இவர்களது குடும்பம் இருந்தது. கணபதிப்பிள்ளை நாகம்மா தம்பதிகளுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தது ஆண். கொழும்பில். இளையது பெண், கண்மணி. கண்மணியின் கணவர் காலமாகிவிட்டார். மகளோடும் பேரப்பிள்ளைகளோடும் இந்த வயோதிபத் தம்பதியர் வாழ்ந்துவந்தனர்.

முதியவர் கணபதிப்பிள்ளைக்கு வயது 70 ஆகிவிட்டது. காது கேட்பதும் குறைந்துவிட்டது. தனது தேவைகளுக்கெல்லாம் அடுத்தவர் தயவை எதிர்பார்க்கும் இயலாமைக்கு வந்துவிட்டார்.

இந்த நிலைமையில்தான், யூலைத் திங்கள் 9ஆம் நாள், 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கைக்குள் இராணுவம் வருவதைக் கேள்விப்பட்டு, இவர்கள், வீட்டைவிட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது.

தாயையும் சகோதரிகளையும் அழைத்துக்கொண்டு வசந்தகுமார் புறப்படும் பொழுதே, பேரனையும், பேர்த்தியையும் தம்மோடு வரும்படி அவன் அழைத்தான். "நீ போய்ற்று வா, நாங்கள் நிற்கின்றோம்" என்று கூறி, அவர்களுடன் புறப்பட மறுத்தனர். எனவேதான் தாயையும் சகோதரிகளையும் அழைத்துக்கொண்டு மாசியப்பிட்டி வரை வந்து, சுன்னாகம் போகும்படி அனுப்பிவிட்டு, மீண்டும் அளவெட்டிக்குக் கணபதிப்பிள்ளை, நாகம்மா இருவரையும் சைக்கிளில் ஏற்றிவரச் சென்றான்.

அங்கு சென்று அவர்களை ஏற்றிக்கொண்டு மாசியப்பிட்டிக்கு வந்தபோது, இராணுவம் மாசியப்பிட்டிவரை வந்துவிட்டதை அவன் உணர்ந்தான். துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் அண்மையில் கேட்டன. எனவே திசையை மாற்றி, சண்டிலிப்பாய் வந்து, சீரணி நாகம்மாள் கோவிலை அடைந்தான். சீரணி நாகம்மாள் கோவிலில், ஏற்கெனவே சிலர் நின்றனர்.

பெரியவர் கணபதிப்பிள்ளையை நடத்தியோ சைக்கிளில் ஏற்றியோ நெடுந்தொலைவு கொண்டுபோக முடியாது. எனவே, இரண்டு பேரையும் நாகம்மாள் கோவிலில் இருத்திவிட்டு, தாயாரையும் சகோதரிகளையும் சுன்னாகத்திற்குப் போய்ச் சந்தித்துவிட்டு, ஏதாவது, வாகனம் ஒன்றை ஒழுங்கு செய்துகொண்டு வந்து இருவரையும் அழைத்துச் செல்வது என்று முடிவெடுத்தான். அதன்படியே இருவரையும் அங்கே விட்டுப் புறப்பட்டான்.




# வீழ்ந்தன

சுன்னாகம் சென்று அவர்களைச் சந்தித்துச் சீரணிக்கு வருவதற்குள், நிலைமை மோசமாகிவிட்டது. சண்டிலிப்பாய்ப் பகுதி எங்கும் பலத்த எறிகணை வீச்சு. சண்டிலிப்பாய் வீதியிலே வந்து கொண்டிருந்தவர்கள் எறிகணை வீச்சால் காயமுற்று இறந்தனர். கிராம உத்தியோகத்தர் வன்னியசிங்கம் குடும்பம் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்கான சம்பவமும், தொல்புரத்தில் இருந்து வந்த மாடும் வண்டிலும் 'ஐந்துகண் மதகு' வயல்வெளியில் தூக்கி எறியப்பட்டதுமான நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. இந்த நிலையில் வாகனம் ஒன்றை ஒழுங்கு செய்து கொண்டு இங்கு செல்வதோ...... சைக்கிளில் செல்வதோ முடியாத காரியமாக இருந்தது. ஆயினும் கோவிலில் கனசனம் நிற்பதால், அவ்வளவு பிரச்சினை வராது என்று அவன் நம்பினான்.

ஆயினும் சீரணி நாகம்மாள் கோவிலில் இருந்தவர்களின் நிலை வேறாக இருந்தது. "நாகம்மாள் கோவிலில் இருப்பது அத்துணைப் பாதுகாப்பல்ல என்றும், வேறு இடங்களுக்குப் போவது நல்லது" என்றும் போராளிகள் அங்குவந்து அறிவித்தனர். எனவே, அவர்களில் பதினொருபேர் தவிர ஏனையோர் வேறு இடங்களுக்குப் போய்விட்டனர். நாகம்மாள் கோவிலில் இருந்த பதினொரு பேரில் நாகம்மாவும், கணவன் கணபதியும் அடங்குவர். அவர்களும் கோவிலைவிட்டுப் புறப்பட்டுப் போகாமைக்குக் காரணங்கள் இருந்தன.

ஒன்று, நோயாளியான கணவனைத் தனித்து எங்கேயும் கொண்டு செல்ல முடியாமை, இரண்டு, நாகம்மாள் கோவிலில் இருக்கும்படியே பேரன் சொல்லிவிட்டுச் சென்றிருக்கின்றான். ஒருவேளை கூட்டிச் செல்வதற்கு ஆயத்தமாக வரக்கூடும். அந்தவேளை தாங்கள் அங்கு இல்லாமல் போனால், எல்லாம் பெரும் சிரமமாகிவிடும். இக்காரணத்தால் தானே தனித்து எந்த முடிவுக்கும் வரமுடியாதவளாக, கோவில் கிணற்றுத் தண்ணீரை மட்டும் தானும் குடித்து கணவனுக்கும் கொடுத்துக்கொண்டு, வசந்தகுமாரின் வரவை வழிபார்த்து நின்றார்.

அன்றைய இரவு வந்து மறுநாள் வந்தது—மறுநாள் மட்டுமா வந்தது – அந்த அம்மாவின் கணவனை அழைத்துச் செல்ல எமனும் கூடவே வந்தான்!

காலை 7.00 மணி இருக்கும். கோவிலுக்கு அண்மையில் எறிகணை ஒன்று வந்து வெடித்தது. எல்லாரும் படுத்துக் கிடந்தபடியால் தப்பிவிட்டனர். ஆனால் வெடித்துச் சிதறிய எறிகணைத் துண்டு ஒன்று நேரே பறந்துவந்து, சரிந்து படுத்துக்கிடந்த கணபதிப்பிள்ளையின் வலது கன்னத்தைப் பெயர்த்தது. அந்த எறிகணை விழுந்ததோடு, கோவிலுக்குள் இருந்த எல்லாரும் எங்கே போனார்கள் என்று தெரியவில்லை! எங்கும் புகையும் புழுதியுமாக இருந்தது. நாகம்மாவுக்கு உடம்பெல்லாம் பயத்தால் நடுங்கியது. எறிகணை தொடர்ந்தும் வந்துவிழுமோ......தாங்கள் இருவரும் இனிப் பிள்ளைகளை – பேரப்பிள்ளைகளை – காணும் வாய்ப்புக் கிடைக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டது.

கணவனின் கன்னத்துக் காயத்தால் இரத்தம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. சீலை ஒன்றை எடுத்துக் காயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தார். ஏற்கெனவே நோயாளியாகிவிட்ட கணவன் – இப்பொழுது இரத்தம் பெருக்கெடுத்து ஓடும் நிலையில் கிடந்து – இன்னலுறுவதைத் தாங்கிக்கொள்ள முடியாது இருந்தது. போதாமைக்கு பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அல்ல அந்நிய மனுசர்தானும் அருகில் இல்லாமல் போனார்களே என்று எண்ணப் பயங்கரமாகவுமிருந்தது!

பெரியவரின் கன்னம் 'அதைத்து' வீங்கத் தொடங்கிவிட்டது. "உங்கை ஆரும் நிற்கினமே?" என்று, ஈனஸ்வரத்தில் அவரிடம் இருந்து கேள்வி பிறந்தது. அவர் கேட்டதற்கு, "இல்லை" என்று மட்டும்தான் பதில் சொன்னார்—மேற்கொண்டு என்ன சொல்வது என்ன கேட்பது!

"கொஞ்சம் தண்ணீர் தா" என்று, மீண்டும் அவர் மனைவியைக் கேட்டார். "தண்ணியா? எங்கே எடுப்பது? யார் எடுப்பது....?" கணவனை விட்டு எழுந்து தனியே போவதற்குக்கூடப் பயமாக இருந்தது. இயற்கையாகவே அவருக்கு உள்ள பயந்த சுபாவம் இப்பொழுது அதிகமாக எழுந்து அழுத்திக் கொண்டிருந்தது. இந்த வேளையில் அவர் கேட்கும் தண்ணீரைக்கூட கொண்டுவந்து கொடுக்க முடியாத அளவுக்கு, அச்சத்துக்கு ஆட்பட்டுக் கொண்டிருந்தார்....

தனது மனைவியை இப்படி இக்கட்டான நிலையில் தவிக்கவிடப் போகிறோமே என்ற தயக்கம், அந்தவேளையில் பெரியவர் கணபதிப்பிள்ளைக்குத் தோன்றியிருக்க வேண்டும். நாற்பது வருட காலம் அவளோடு நடத்திய இல்லறத்தில் தன் மனைவியைப் பற்றி அறியாமலா இருப்பார்....? எனவேதான், கேட்டார், "நான் சாகப் போகிறேன், நீ என்ன செய்யப் போறாய்?" அவரது இந்தக் கேள்விக்கும் அந்த அம்மாளால் பதில் சொல்ல முடியவில்லை. அவர் முகத்தைப் பார்த்து அழுது கொண்டேயிருந்தார். அவராலும் ஒன்றும் செய்யமுடியாது. அவளை அப்படியே தனிமையில் விடுத்து – அந்த நாகம்மாவில் மட்டுமெ நம்பிக்கைவைத்து தன் மனைவியை ஒப்படைத்துவிட்டு – அவர் அமைதியாகிவிட்டார். ஆம், நாற்பது ஆண்டுகள் நாகம்மாவுடன் நடத்திய தாம்பத்திய வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுவிட்டது.

இப்பொழுது நாகம்மாவும் அவர் கணவர் கணபதிப்பிள்ளையின் பிணமும் மட்டுமே அந்தப் பிரதேசத்தில் அநாதைகளாக இருந்தனர். நேற்றுக் காலைமுதல் வெறுமனே கிணற்று நீரை மட்டும் குடித்துக் கொண்டிருந்த நாகம்மாவுக்கு இப்பொழுது, பசியும் தெரியவில்லை, தாகமும் தெரியவில்லை. ஆனால் ஒன்று மனதை உறுத்திக் கொண்டிருந்தது.

நாகம்மாளின் கோவில் நந்திக்கம்பத்துக்கு அருகில் பிணம் கிடக்கிறதே என்ற அச்சம். தன் கணவனின் சடலத்தை தனியே அப்புறப்படுத்தக்கூடிய பலம் அவருக்கு இல்லை.....அன்று பிற்பகலுக்குப் பின்னர் யாரோ ஒருவர் தற்செயலாக வரவே, அவரிடம் கெஞ்சி மன்றாடி, அவரோடு சேர்ந்து கணவரின் உடலைத் தூக்கிக் கொண்டு, கோவிலுக்கு முன்னே உள்ள பொங்கல் மண்டபத்தில் வளர்த்தினார். பேரன் வசந்தகுமார் முதல் நாள் அந்தமண்டபத்தில்தான் இவர்களை இறக்கிவிட்டுச் சென்றிருந்தான், ஏனென்றால், இயலாத அவர் தனது இயற்கைக் கடன்களைக் கழித்துக்கொள்ள அந்த இடம்தான் வசதியானது என்பதனால், தன்னுடன் கொண்டு வந்த சீலை முடிச்சிலே இருந்த கணவனின் வேட்டி ஒன்றை எடுத்து அவரை மூடிவிட்டார்.



அன்றையப் பொழுது இருளத் தொடங்கியது. கணவனின் பிணத்தோடு 'தட்டத் தனிமையில்' – ஆளரவமற்ற அந்நிய இடத்தில் – இருப்பதற்குப் பயமாக இருந்தது—தட்டுத்தடுமாறி எழுந்து, 'நாகம்மாளே நீதான் துணை' என்று எண்ணியவராக கோவிலுக்கே வந்து குந்திக் கொண்டார். கோவிலில் இருந்து பார்க்கும்போது, அந்த மண்டபத்தில் கிடக்கும் கணவனது மூடிய சடலம் தெரிந்தது.

10ஆம் திகதி இரவு! முழு இரவும் தூக்கமில்லை. அழுகை, பெருமூச்சு—40 ஆண்டுகால இல்லற வாழ்க்கையை எண்ணி அழுவதா....? பிள்ளைகள் பேரப்பிள்ளைகளைப் பெற்று வளர்த்தும் தனிப்பிணங்களாக இருவரும் நிற்கின்றோமே என்பதை நினைத்து அழுவதா! நாளைக்கும் யாரும் வராவிட்டால், இந்தப் பிணத்தை – பெண்ணாகப் பிறந்த நான் என்ன செய்ய என்பதை நினைத்து அழுவதா?

11ஆம் திகதி விடிந்துவிட்டது. யாரும் வரவில்லை. கணவனருகில் சென்று முகத்தைப் பார்க்க விரும்பினாலும், எறிகணை சிதைத்துக் கோரமாக்கிவிட்ட அந்தக் கன்னத்தைப் பார்ப்பதற்கும் அச்சமாக இருந்தது. அப்படியே நண்பகல் கழிந்தது. பிற்பகல் நான்கு மணியாகியும்விட்டது. யாரும் வரவில்லை. அவளுக்குப் பசிவேறு. ஆனால் எழுந்து சென்று கிணற்றில் தண்ணீர் மொண்டு குடிக்கவும் முடியாமல் இருந்தது. முதல் நாள் காலை விழுந்தபிணம். இன்று இரண்டாம் நாள், மாலையை நெருங்கிக்கொண்டிருக்கிறது. பிணத்தில் மாற்றங்களும் ஏற்படத் தொடங்கிவிட்டன. இந்த வேளையில்கூட ஒரு எதிர்பார்ப்பு – பேரப்பிள்ளை அல்லது உறவினர்கள் யாராவது தேடி வரமாட்டார்களா என்று——

4.30 மணி இருக்கும். எங்கோ ஒருவாகன இரைச்சல். "யாராக இருக்கும்? பொடியன்களாக இருக்குமோ" என்று எண்ணிக் கொண்டிருக்கும்போது, அந்த ஒழுங்கைக்குள் இருந்து துப்பாக்கியுடன் இராணுவத்தினர் வந்துகொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும், அச்சமும் அழுகையும் ஒன்றாகப் பிறந்தன. கணவனுக்கு ஏற்பட்ட நிலை தனக்கும் ஏற்படப் போகின்றது, நாமிருவருமே இங்கு அநாதைப் பிணங்களாகவே கிடந்து அழுகப் போகின்றோம் என்று கலங்கத் தொடங்கிவிட்டார்.

சிப்பாய்கள், அவர் மட்டும் கோவிலில் இருப்பதைக் கண்டு அவரை நோக்கி வந்தனர். அவர்கள் அவர் அருகில் வரவே, கும்பிட்டபடி வாய்விட்டு அழத் தொடங்கிவிட்டார். பேதைத் தாய்க்கு அதுதவிர வேறொன்றும் தோன்றவில்லை. "ஐயா என்னையும் சுட்டுக் கொண்டு போடாதீர்கள்" என்று கும்பிட்டு விண்ணப்பித்தார்.

"இங்கே ஏன் நிக்கிறது?"

**தொடரும்...**

# உலகப் பெண்ணினத்திடம் ஒரு வேண்டுகோள்

தவிர்க்க முடியாத வரலாற்று நிர்ப்பந்தமாக வலிகாம மக்கள் இன்று ஏதிலிகளாக தங்ககங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அரசின் சூரியக்கதிர்–1 இராணுவ நடவடிக்கையின் நோக்கத்தை தமது இடப்பெயர்வின் மூலம் தோற்கடித்த இந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான ஆக்கபூர்வமான வேலைகள் முயற்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வன்னிப் பகுதியில் இவர்களுக்கான வீடுகளை அமைத்து, காணிகளைக் கொடுப்பதன் மூலம் இவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதே எமது நோக்கம்.

ஆனால் இவ் இராணுவ நடவடிக்கையின் நோக்கம் வலிகாம மக்களின் இடப்பெயர்வால் சிதைந்துபோனதால் ஆத்திர முற்றிருக்கும் அரசு இடம்பெயர்ந்தோரை மீளக் குடியேற்றும் திட்டத்துக்குப் பலத்த முட்டுக்கட்டைகளைப் போட்டுவருகிறது. அரசின் இந்தத் தடைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் 'முகாம் வாழ்வு' தொடர்ந்துகொண்டு போவதால் பல புதிய நெருக்கடிகள் எழுந்துள்ளன.

ஒரே இடத்தில் ஏராளமான மக்கள் குவிந்துள்ளதால் எல்லோராலும் தமக்கு அண்டிய பகுதிகளில் வேலைவாய்ப்புக்களைத் தற்காலிகமாகவேனும் பெற்றுக்கொள்வது இயலாததாகவே உள்ளது. தமக்கென நிரந்தரமான குடியிருப்புக்கள் கிடைக்கும்வரை எங்கேயுமே எந்த வேலையிலுமே முழுமையாக ஈடுபடும் மனநிலை யாரிடமே இராது. இதனால் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உழைப்பில்லை. அவர்களது வாழ்விடமும் முகாம்தான், பொழுது போக்கிடமும் முகாம்தான். எந்த வேலையுமற்ற உழைப்பாளர் கூட்டமொன்று சும்மா இருக்கும்பொது அவர்களிலிருந்து சமூக விரோதிகள் தோன்றும் நிலை இயல்பாக உருவாகும்.

இதேபோல பெண்களின் பிரச்சினைகளும் ஏராளமாகியுள்ளன. அவர்களுக்கென்று பிரத்தியேகமான பிரச்சினைகள் உண்டு. அவர்களது தேவைகளை நிறைவு செய்வதற்கு தனிப்பட்ட வசதி, வாய்ப்புக்கள் இல்லையென்றால் அவர்களால் இயல்பான வாழ்வினை வாழமுடியாமல் போய்விடும். இடம்பெயர்ந்தோர் முகாம்களில் மக்கள் இருப்பதற்கே இடமில்லாத நெருக்கடிக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும்போது, அதற்குள் பெண்களுக்கென தனியான தேவைகளை நிறைவு செய்யும் வாய்ப்புக் கிடைப்பது சாத்தியமற்றது. பொதுவான குளிக்கும் இடங்களும் எல்லோருடைய பாவனைக்குமுரியதாக இருக்கும் மலசல கூடங்களும் பெண்களின் சுதந்திரமான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துகின்றன. உழைப்பில் ஈடுபடாத யுவதிகள், இளைஞர்கள் கூட்டம் ஒன்றாக ஒரே முகாமில் தொடர்ச்சியாக வாழ்ந்து வருவதால், சமூக சீர்கேடுகள் அதிகரிக்கும் சூழ்நிலை தோன்றியுள்ளது. இளவயதுத் திருமணங்கள் அதிகரித்துள்ளன. காதலித்தபின், காதலித்துத் தாய்மையடையச் செய்தபின் ஏமாற்றுதல் போன்ற பிரச்சினைகள், பெற்றோரை எதிர்த்துத் தான் விரும்பிய உழைப்பில்லாத இளைஞனை மணமுடித்தபின் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்குப் பொருண்மியப் பலம் இல்லாததால் பெண்களுக்குள் எழும் மன அழுத்தங்கள், நெருக்கடியான சூழ்நிலை காரணமாக குழந்தைகளை சரியாக வழிநடத்த முடியாமை என்று பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. போசாக்கின்மையால் இறக்கும் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மாரின் வீதமும் அதிகரிக்கும் நெருக்கடி எழுந்துள்ளது. இவை இன்று ஒவ்வொரு முகாம்களினதும் பிரச்சினையாக இருந்தாலும், நாளை தமிழீழத்தின் பிரச்சினையாக மாறப்போறவையும் இப் பிரச்சினைகளேதான். நாளை எதிர்காலத்தைப் பாதிக்கப்போகும் இப்பிரச்சினைகளைக் களைவதற்கு 'அகதிமுகாம் வாழ்வை' இல்லாதாக்கவேண்டும். அதற்கான தீவிர முயற்சிகளில் இறங்கியுள்ள அனைத்துப் பொதுநிறுவனங்களுமே அரசின் முட்டுக்கட்டைகளை எதிர்நோக்குகின்றன.

உலகப் பொது அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைக்கூட சிறிலங்கா அரசு கட்டுப்படுத்த முனைகிறது. வடக்கு, கிழக்கு நிவாரணப் பணிக்கென வெளிநாடுகளிலிருந்து வரும் பண உதவிகளையெல்லாம் தான் பெற்றுக்கொண்டு தனது இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகின்றது.

அண்மையில் சிறிலங்காவின் சமூக சேவைகள் அமைச்சர் பெளசி விதவைகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் தனது திட்டத்துக்கு முதற்கட்டமாக 50 இலட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் 40 இலட்ச ரூபாவுக்கு தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு விதவைகளுக்கு அன்பளிப்பு செய்யப் போவதாகவும் கூறியிருந்தார். 40 இலட்சம் பெறுமதியான தையல் இயந்திரங்களில் ஒன்றிரண்டு, சிலவேளை வடக்கு கிழக்கிலுள்ள விதவைகளுக்கு அனுப்பப்படலாம். இது போன்ற கண் துடைப்புப் பணிகளிலும் சிறிலங்கா அரசு குறைவில்லாமல் ஈடுபட்டு வருகின்றது.

"சிறிலங்கா அரசின் இந்த அலட்சியப் போக்கினால் பெருமளவு சிக்கல்களை இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் தமிழ்ப் பெண்கள் எதிர்கொள்கிறார்கள் எனவே அவர்களுக்காக, அவர்களின் நலனுக்காக, அவர்களின் எதிர்கால வாழ்வுக்காக உரத்த குரல் எழுப்புங்கள்" என்ற வேண்டுகோளை 1996 இன் அனைத்துலகப் பெண்கள் நாளிலே உலகப் பெண்ணினத்திடம் விடுக்கின்றோம்.

உலகப் பெண்ணினம் ஒன்றுபட்டு, சிறிலங்கா அரசுக்கு கொடுக்கும் அழுத்தமும் நிர்ப்பந்தமுமே இடம்பெயர்ந்த மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு ஒரு வழியைக் காட்டும். ✶

நன்றி: சுதந்திரப்பறவைகள்

## தாயகம் நோக்கிய ...

"அந்த சதுரங்க மேசையைக் கொண்டு வா பிறெடி" அறுதியான முடிவென்று, பிறெடி என அழைத்த விதத்தில் தொனித்தது. கால்ட்வெல் சதுரங்கக் காய்களை அடுக்கி கொண்டே வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டார். அவர்கள் ஆரம்பக் கட்டக் காய் நகர்த்தல்களை செய்து கொண்டனர். ஆயினும் சுதர்லாண்டுக்கு தன் உதவியாளர் அவ்வளவு மகிழ்ச்சியாயில்லை என விளங்கியது. அவர் தனது சுங்கானை கீழே வைத்து விட்டுப் பின்னால் சரிந்து கொண்டார்.

"கால்ட்வெல், நாம் இங்கு தடைமுகாம்களை நடத்தவில்லை என்று எத்தனையோ தரம் விளங்கப்படுத்த முயன்றிருக்கிறேன். கராஒலொஸ் (Caraolas) முகாமில் இருக்கும் அகதிகளை வெள்ளை மண்டபத்தில் (White Hall–ஆங்கில ஆட்சிப்பீடம்) இருக்கும் முரட்டு 'மண்டைகள் பலஸ்தீனிய ஆட்சி பற்றி (Paleetine Mandate) என்ன முடிவு செய்வார்கள் என்று தெரியும் வரை, சும்மா தடுத்து வைத்திருக்கிறோம்.

"ஆனால் அந்த யூதர்கள் மிகவும் குழப்பம் செய்கிறார்கள்," கால்ட்வெல் தொடர்ந்து சொன்னார். "எனக்கென்றால் நல்ல பழைய பாணி ஆங்கில ஒழுங்கு முறைகளை அமுல்படுத்த வேண்டுமென்று தோன்றுகிறது.

"இல்லை பிறெடி, இம்முறை அப்படிச் செய்யக்கூடாது, இவர்கள் குற்றவாளிகளல்ல. உலக அனுதாபமும் அவர்கள் பக்கமிருக்கிறது. குழப்பங்கள் கூரைச்சலகள் ஏற்படலாம் பார்த்துக் கொள்வதும், எமக்கெதிரான பிரச்சாரத்துக்குப் பாவிக்கக்கூடிய எதுவும் நிகழாமலும் பார்த்துக் கொள்வது எனதும் உனதும் கடமையாகும்.

"அது உனக்கு விளங்குகிறதா?"

சுதர்லாண்டுடைய முகம் கவலையைக் காட்டியது. "பாவம் இந்த மனிதர்" கால்ட்வெல் நினைத்துக் கொண்டார். சுதர்லாண்ட், நெடிசுதர்லாண்ட்ஜ (Neddie Sutherandt) 30 வருடங்களுக்கு முன் திருமணம் செய்திருந்தார். ஆனால் திடீரென, அவரைவிட 10 வயது இளையவனான காதலனுடன் அவரை விட்டுப் பாரிசுக்குச் சென்று விட்டாள். இந்த மானங்கெட்ட விஷயம், இராணுவ வட்டாரங்களை மாதக்கணக்காக உலுக்கியெடுத்தது. இது சுதர்லாண்டை வெகுவாகப் பாதித்திருக்க வேண்டும். பிரிகேடியருக்குப் பயங்கரமான பாதிப்பிது. அவர் எவ்வளவு மரியாதையான மனிதர். அவரது வெண்மையான முகத்தில் சுருக்கங்கள் விழுந்திருந்தது. அவரது மூக்கின் மேல் காணப்படும் அந்தச் சிறிய சிவப்பான நரம்பு வெண்மையாகத் தொடங்கியது. அவ்வேளையில் அவர் தனது ஐம்பத்தைந்து வயது, ஏன் அதற்கும் மேலாகவே வயோதிபத்தோடு காட்சியளித்தார்.

கால்ட்வெல் நினைத்தது போல் புரூஸ் சுதர்லாண்ட் நெடி சுதர்லாண்டைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கவில்லை. மாறாக அவரது மனம் கராஒலொஸ் அகதி முகாமில் லயித்திருந்தது.

"உங்களுடைய முறை ஐயா."

"இஸ்ரவேலே இப்படியாக உனது எதிரிகள் அழிந்து போவார்கள்" சுதர்லாண்ட்,(வேதாகமத்திலிருந்து) முணுமுணுத்தார். ✷

தொடரும்...

## அமெரிக்காவில் 3 நாட்கள் தொடர் உண்ணாவிரதம்.

### ❖ சனாதிபதி கிளின்டனுக்கு மகஜர் கையளிப்பு

ஐக்கிய அமெரிக்காவின் பாராளுமன்றமான வெள்ளை மாளிகையின் முன் தொடர்ந்து மூன்று நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு தமிழீழத் தமிழர்களுடன் தாய்த் தமிழக மக்களும் கலந்து கொண்டனர். மூன்று நாட்களும் உண்ணாவிரதம், கனடாவில் இருந்து வருகை தந்திருந்த வண.பிதா சேவியர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. உணர்வு பூர்வமான நடைபெற்ற இவ் உண்ணாவிரதம் முதல் இரண்டு நாட்களும் காலை 9மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணிவரை நடைபெற்றது. இவ் இரண்டு நாட்களும் உண்ணாவிரதத்தை பெரும்பாலான வெள்ளை மாளிகை உத்தியோகத்தர்களும், பொதுமக்களும் பார்வையிட்டுச் சென்றனர். அத்துடன் வெள்ளை மாளிகையில் பணிபுரியும் அதிகாரிகள் சிலர் உண்ணாவிரதிகளின் நிலை பற்றியும் அறிந்து சென்றனர். இவர்களுக்கு, தமிழர் தாயகத்தில் சிறிலங்கா அரசு, மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கும் அரச பயங்கர வாதத்தை விளக்கும் வகையிலான பிரசுரங்கள், ஒளிநாடாக்கள் வழங்கப்பட்டன. இறுதி நாளான வைகாசித் திங்கள் 17ம் நாளன்று அயல்நாடான கனடாவில் இருந்தும் பெரும்பாலான எம் மக்கள் வருகை தந்திருந்தார்கள். அத்துடன் அமெரிக்காவின் பல மாநிலங்களில் இருந்தும் ஈழத்தமிழர்களும், தமிழகத் தமிழர்களுமாக வருகை தந்திருந்தனர். இவ் உண்ணாவிரதத்தில் பெண்களும் குழந்தைகளுமாகப் பலர் கலந்து கொண்டனர். மாலை இரண்டு மணியுடன் உண்ணாவிரதம் முடிக்கப்பட்டு, வெள்ளை மாளிகையின் முன்பாக, கலந்து கொண்ட மக்கள் அனைவரும் அணிவகுத்துச் செல்ல ஊர்வலம் ஆரம்பமானது. பேரணியில் தமிழீழத்தின் தேசியக் கொடியும், அமெரிக்காவின் தேசியக் கொடியும் முன்னணியில் மக்களால் எடுத்துச் செல்லப்பட்டன. தமிழீழத் தேசியத்தலைவரின் உருவப்படங்களும் பலராலும் தாங்கிச் செல்லப்பட்டது. 1 மைல் நீளத்திற்கு நீண்டதாக ஊர்வலம் சென்று. கொண்டிருக்க மக்கள் உணர்வு பூர்வமாக தமது கோரிக்கைகளை கோசங்கள் வாயிலாக வெளிப்படுத்திச் சென்றனர். அமெரிக்க மக்கள் பலரும் பெரிதும் ஆர்வத்துடன் இவ் நிகழ்வைப் பார்த்துச் செல்கையில், பொஸ்னியா, யப்பான், வெளிநாட்டு ஒளிப்பதிவு மற்றும் செய்தி நிறுவனங்களும், அமெரிக்காவைச் சேர்ந்த "சி.என்.என்", "யு.எஸ்.ஏ. ருடே" போன்ற அமெரிக்க ஒளிபரப்பு நிறுவனங்களும் மற்றும் உள்ளூர் செய்தித்தாள்கள் சிலவும் இவ்ஊர்வலத்தைப் பதிவு செய்தன. அத்துடன் கனடாவில் இயங்கும் 24 மணிநேர தமிழ் வானொலிச் சேவைக்கு சகல நிகழ்வுகளும் நேர்முக வர்ணனையாக கொடுக்கப்பட்டது. வெள்ளை மாளிகையின் முன்பாகவே ஊர்வலம் முடிக்கப்பட்டு அண்மையில் இருந்த பூங்காவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இப்பொதுக்கூட்டத்தில் இந் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்த 13 அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன், வண. பிதா. சேவியர் அவர்களும் உரையாற்றினார்.

இப்பொதுகூட்டத்தின் போது சிறிலங்காவின் அண்மைக்கால கொடூரமான இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தலுக்கான நிதி சேகரிக்கப்பட்டது. இதற்கு பெரும்பாலான மக்கள் தம்மால் இயன்ற பங்களிப்பினைச் செய்தனர். இவ் உண்ணாவிரத, மற்றும் ஊர்வலத்தில் 1000க்கும் மேற்பட்ட தமிழீழ, தமிழக மக்கள் கலந்து கொண்டு தமிழீழப் போராட்டத்திற்கான தமது ஆதரவினை அமெரிக்க அரசுக்குத் தெரியப்படுத்தியதுடன், தமிழீழத்தில் சிறிலங்கா அரசும், அதன் இராணுவமும் தமிழ் மக்கள் மீது புரியும் காடைத்தனம் உடனடியாக நிறுத்தப்பட அமெரிக்க அரசு தன்னாலான முழு முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்ற அறிக்கை ஒன்று அமெரிக்க சனாதிபதி திரு. பில் கிளின்டன் அவர்களுக்கு கையளிக்கப்பட்டது.

தற்போதைய காலகட்டத்தில், அமெரிக்காவின் பாராளுமன்ற முன்றலில் தமிழர்களால் நடாத்தப்பட்ட இவ்உண்ணாவிரதமும், ஊர்வலமும் மிகவும் முக்கியமானதொரு நிகழ்வு என்பதற்கு, அமெரிக்காவின் பெரும்பாலான தொடர்பு சாதனங்கள் இந்நிகழ்ச்சியை பதிவு செய்தமையும் அதற்கு கொடுத்த முன்னுரிமையே தக்கசான்றாகும். ❖

# உலக அரங்கு

# திருப்பு முனை

கடந்த சனவரி மாதத்தின் முற்பகுதியில் நடந்த கதைமிது. இம் மாத முடிவில் கொழும்பில் மத்திய வங்கிக் குண்டு வெடிப்பின் பின், சிறிலங்காவின் சனாதிபதி செயலகம் எவ்வாறு பரபரத்ததோ, அவ்வாறு மொஸ்கோவில் சனாதிபதி யெலட்சினின் செயலகம் அப்போது மிக்க பரபரப்புக்கு உள்ளாகி இருந்தது. யெல்ட்சினின் தலைமையில் உயர் மட்ட மாநாடு ஒன்று அங்கு அவசரம்

> போராளிகள் சகல பணயக்கைதிகளையும் கொல்லத் தொடங்கி விட்டதாலே, தாக்குதல் எனப் பொய்யான புளுகுக் கதைகளை மேற்குலகத் தொடர்புச் சாதனங்களுக்கு அவிழ்த்த பின்னே தாக்குதல் தொடங்கப்பட்டது.

அவசரமாகக் கூட்டப்பட்டு நடந்துகொண்டிருந்தது. முக்கிய அமைச்சர் பலர் குழப்பமான முகத்துடன் காணப்பட்டனர். பாதுகாப்புத்துறை உயர் இராணு வப்புலனாய்வு அதிகாரிகள் இறுகிய முகத்துடன் அங்கிருந்தனர். யெல்ட்சினின் முகத்தில் சினம் கொப்பளிக்க உரையாற்றியதாக



நியூயோர்க் ரைம்ஸ் செய்தியாளர் குறிப்பிடுகின்றார். கவலையும் சோர்வும் யெல்ட்சினை இப்போது சூழத் தொடங்கிவிட்டன. எல்லாம் செச்சென்யாவில் பாரிய படையெடுப்பொன்றை நடத்தப்போய் வந்த வினைதான். "என்ன நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?" என்ன செய்கின்றீர்கள்? இது என்ன சிறுபிள்ளை விளையாட்டா என,

> வெற்றிகரமான இராணுவ நடவடிக்கை, செச்சென்யர் மண் கவ்வினர் என யெல்ட்சின் தொடக்கத்தில் கூறித்திரிந்தார். ஆனால் ஒரு சில தினங்களுக்குள்ளே யெல்ட்சின் உலகின் முன் தலை காட்ட முடியாத அந்த அவமானம் நடந்தது.

மாநாட்டில் இருந்தோரைப் பார்த்து யெல்ட்சின் கண்டித்துப் பேசினார். ஏன் போராளிகளின் ஊடுருவலை உங்களால் தடுக்க முடியவில்லை. அதனைத் தடுக்க என்ன தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தீர்கள்? எல்லைக் காவல்படை என்ன முழு நித்திரையா? என ஏறிப் பாய்ந்தார் யெல்ட்சின். ஏற்கனவே மிதமிஞ்சிய குடியால் உடல் நலமற்றிருந்தவர், விரைவில் நடைபெறப்போகும் சனாதிபதித் தேர்தலில் தனக்குத்

தோல்வி நிச்சயமாகின்றது என்பதை எண்ணும்போது, அவரது குருதி அமுக்கம் இன்னும் அதிகரித்தது என்கிறார் செய்தியாளர்.

இவ்வாறு யெல்ட்சின் கொதிப்பதற்கு என்ன நடந்தது என மக்கள் எண்ணக்கூடும். யெல்ட்சினைப் பொறுத்தவரையில் நடக்கக்கூடாதது, அதுவும் இரண்டாம் தடவையும் அதேபோல் நடப்பதென்றால் எவரால்தான் அவமானத்தைத் தாங்கமுடியும்?

செச்சென்யப் போராளிகளின் தாக்குதல் வேகம் யெல்ட்சினை இப்போது நிலைகுலையச் செய்கின்றது என, முழு உலகமுமே கூறிநிற்கின்றது. ஏனென்றால் கடந்த வருடம் யூன் மாதம் தான் செச்சென்யப் போராளிகள் தென் ரசிய நகரான புடனோவ்ஸ்க்குள் ஊடுருவித் தளபதி சமீல் பசயேவ் தலைமையில் அங்குள்ள மருத்துவ மனையில் ஆயிரக்கணக்கானோரைப் பணயம் வைத்ததும், அதை இராணுவம் மூலம் முறியடிக்க முயன்று தோல்வி கண்டு பின் போராளிகளோடு இணக்கமொன்றிற்கு ரசியப் பிரதமர் வந்ததும் போராளிகள் பாதுகாப்பாகச் செல்ல அனுமதிக்கப்பட்டது மட்டுமின்றிச் செச்செனியத் தலைமையோடு அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் நிலைக்கு ரசியா தள்ளப்பட்டதும் இன்றும் மறையவில்லை. இப்போது இரண்டாம் தடவையாகவும் அதே போன்றதொரு கடத்தல் நாடகம். இம்முறை சுயாட்சி மாநிலமான டகஸ்தானின் கிஸ்லியான் நகருக்குள் புகுந்த 200 செச்சென்யப் போராளிகள் இரண்டாயிரத்திற்கு மேற்பட்டோரை அங்குள்ள மருத்துவ மனையொன்றில் பணயக் கைதிகளாக்கினர். தமது இஸ்லாமிய வழமைப்படி தலையைச் சுற்றிப் பச்சையணியொன்றைக் கட்டியிருந்த இப்போராளிக் குழுவின் பொறுப்பாளரான சல்மான் றடயேவ் செச்சென்யாவிலிருந்து ரசியப் படைகள் வெளியேறாவிட்டால் பணயமாக வைக்கப்பட்டவர்கள் கொல்லப்படுவர் என எச்சரித்தார். தொடக்க மோதலில் காவல் துறையினர், போராளிகள், பொதுமக்கள் எனப் பலர் பலியாகினர். சல்மான் றடயேவ் செச்சென்யப் போராட்டத் தலைவர் சோகார் துதயேவ்வின் உறவினராவர். சனவரி 9ம் திகதியளவில் நடைபெற்ற இச் செய்தி கேட்டே யெல்ட்சின் சினமுற்றார், கொந்தளித்தார். தொடக்கத்தில் பல இழுபறிப் பேச்சுக்களின் பின் தமது கோரிக்கையைக் கைவிடச் சம்மதித்த செச்சென்யப் போராளிகள்








செச்சென்யப் போராளிகளினால் விடுவிக்கப்பட்ட பணயக் கைதிகளும் (மேலே), போராளி அணித் தலைவரும் (இடது பக்க மூலையில்)

செச்சென்யாவிற்குத் தாம் திரும்ப, பாதுகாப்பு உடன்பாடு ஒன்றிற்கு டகஸ்தான் அதிகாரிகளோடு வந்தனர். தாம் விமான நிலையம் ஒன்றையே தாக்க வந்ததாகவும் அது சரிவராத நிலையிலேயே இத்தகைய பணய விவகாரத்தில் ஈடுபட நேர்ந்ததாகவும் சல்மான் குறிப்பிட்டார். 11 பேரூந்துகளில் போராளிகளும், சில காவல்துறையினரும் குறிப்பிட்ட தொகை மக்களும் பணயப் பாதுகாப்பாக உடன்வர டகஸ்தான் எல்லையை நோக்கி நகர்ந்தபோது திடீரென யெல்ட்சின் போர்க்கோலம் கொண்டார். இம்முறை கடும் நடவடிக்கை எடுக்க யெல்ட்சின் உத்தரவிட்டார்.

யெல்ட்சினும் அவரது பாதுகாப்பு அமைச்சரான பாவெல் கிறெச்சேவும் ஒரு செச்சென்யப் போராளியையாவது தப்பிப்போக விடப்போவதில்லை என்றும் இவர்களின் கதையையே விரைவில் செச்சென்யாவிலும் முடிக்கப் போவதாகக் கூறி 4000க்கு மேற்பட்ட படையினரை டகஸ்தான் எல்லைக்கு அனுப்பி டகஸ்தான் – செச்சென்ய எல்லையிலிருந்த ஆற்றுப்பாலம் ஒன்றைத் தகர்த்தனர். போராளிகள் செச்சென்யா போகாது தடுப்பதற்காக அவர்கள் சென்ற பாதையிலிருந்த கிராமமான பேர்வோமய்ஸ் கிராமத்தைச் சுற்றிவளைத்தனர். ரசியா விசேட படையணியான அல்பா அணி தமது லேசர் இலக்கு நோக்கிப் பொருத்தப்பட்ட சுடுகலன்களுடன் வந்திறங்கினர். பாரிய தாக்குதல் உலங்குவானூர்திகள் வானில் வட்டமிட, கனகரகப்பீரங்கிகள், கவசவாகனங்கள், தாங்கிகள் சகிதம் ரசியத் துருப்புக்கள் கிராமத்தைச் சுற்றி நிலையெடுத்தனர். ஜெட் போர் விமானங்கள் இரவைப் பகலாக்கும் ஒளியைச் செலுத்தின.

இம்முறையும் போராளிகள் தப்பிச்சென்றால் தனது அரசியல் எதிர்காலமே அத்தமித்துவிடும் என அச்சம் கொண்டே யெல்ட்சின் 200 போராளிகளை மடக்குவதற்காக பல்லாயிரக்கணக்கான படை வீரரைக்கொண்ட பெரும் படையெடுப்பினை 700 மக்களே வாழ்ந்த ஒரு சிறு கிராமத்திற் போர் நிகழ்த்த உத்தரவிட்டார். ஆனால் இறுதியில் நடந்ததோ வேறு கதை. கிராமம் மீதான தாக்குதலைக் கண்காணிக்க ரசிய சமஸ்டிப் பாதுகாப்புத் துறை மேலாளர் ஜெனரல் மிகைல் பசுருக்கோவ், உட்துறை அமைச்சர் ஜெனரல் அனற்றோலி குலிக்கோவ் எல்லோருமே பேர்வோமய்ஸ்க்கி வந்து சேர்ந்தனர். பெரும் எடுப்பில் இராணுவ ஏற்பாடுகளைச் செய்தபின் சரணடையுமாறு செச்சென்ய போராளிகட்கு உத்தரவிடப்பட்டது. இது

> இப்போது எமது மனக்கண்ணிலே யெல்ட்சின்களும், கிரெச்சேவ்களும், சந்திரிகாக்களும், தளுவத்தைகளும், ரத்வத்தைகளும் மாறி மாறித் தோன்றக்கூடும். ஏனென்றால் எவையெல்லாம் எவ்விதம் செச்சென்யாவில் நிகழ்ந்ததோ அவ்விதமே அவையெல்லாம் இங்கும் நிகழ வாய்ப்புக்கள் உண்டு.

சரிவராது போகவே தாக்குதலுக்கு உத்தரவிடப்பட்டது. கிராமம் நாலாபக்கமும் சூழப்பட்டு எவரும் வெளியில் போகாது மூடப்பட்டது. போராளிகள் சகல பணயக்கைதிகளையும் கொல்லத் தொடங்கி விட்டதாலே, தாக்குதல் எனப் பொய்யான புளுகுக் கதைகளை மேற்குலகத் தொடர்புச் சாதனங்களுக்கு அவிழ்த்த பின்னே தாக்குதல் தொடங்கப்பட்டது. போராளிகளோ சற்றும் பதற்றமின்றிப்

**வே.பாலகுமாரன்**

பணயக்கைதிகளைப் பல்வேறு பகுதிகட்கும் சிதற வைத்தனர். பதுங்கு குழிகள் வெட்டித் தற்காப்பு நிலைகளை ஏற்படுத்தினர். உட்புகுந்துவரும் ரசியப் படை வீரரைச் சுட்டுவீழ்த்தினர். பெரும் இழப்புக்களைச் சந்தித்த நிலையில் பொறுமை இழந்த ரசியத் தளபதிகள் கிராமத்தைத் தரைமட்டமாக்கினர். கதை முடிந்தது எனக் கூறிப் பின்வாங்கிச் சென்றனர். வெற்றிகரமான இராணுவ நடவடிக்கை, செச்சென்யர் மண் கவ்வினர் என யெல்ட்சின் தொடக்கத்தில் கூறித்திரிந்;நார். ஆனால் ஒரு சில தினங்களுக்குள்ளே யெல்ட்சின் உலகின் முன் தலை காட்ட முடியாத அந்த அவமானம் நடந்தது. ஒரு சில போராளிகளை இழந்த பின் எவ்வாறோ செச்சென்யா சென்றுவிட்ட போராளிகளும் அவர்களின் தளபதி சல்மானும் தொலைக்காட்சியில் முகம் காட்டினர். பணயக்கைதிகள் பலரை உலகம் அறிய விடுவித்தனர். இவ்வாறு யெல்ட்சினின் சவப்பேழைக்கு ஆணியடித்தனர்.

இத்தகைய பேரவமானத்தின் பின் யெல்ட்சினும் பாவெல் கிரச்சேவ்வும் வாயே திறப்பதில்லை. இப்போது கதையே முற்றாக மாறுகின்றது.

இன்று செச்சென்யாவிலும் அதன் தலைநகரான குறோஸ்னியிலும் நடப்பது விரைவில் எமது மண்ணில் யாழ்ப்பாணத்திலும் நடக்கப்போவதால் சற்று திரும்பிப் பார்க்கலாம். முன்னைய சோவியத்திலிருந்து குடியரசுகள் பிரிந்ததையடுத்து 1991ம் ஆண்டளவில் செச்சென்யத் தலைவர் சோகார் துதயேவ் விடுதலைப் பிரகடனம் செய்ததும் 1994ம் ஆண்டு மார்கழித் திங்கள் அளவில் தலைநகர் குறோஸ்னியைக் கைப்பற்ற 40,000 துருப்புக்களை யெல்ட்சின் அனுப்பியதும் குறோஸ்னியைத் தரைமட்டமாக்கியதும் 35,000 மக்களைக் கொன்றதும், அங்கிருந்த 4 இலட்சம் மக்கள் வெறியேறியதும், அதிபர் மாளிகை முன்னரான கடும் சமரில் போராளிகள் பின்வாங்க 1995 தைத் திங்களில் ரசியக் கொடி பறக்க விடப்பட்டதும் முன்னைய கதை.

இப்போது குறோஸ்னி ரசியப்படைவீரரின் புதைகுழியாகிவிட்டது. மூலை முடுக்கெங்கும் தாக்குதல்கள், கண்ணிவெடிகள், வாகனக் குண்டு வெடிப்புக்கள் என செச்சென்யப் போராளிகள் நடத்தும் போரால் பெருமளவு ரசியப் படைவீரர்கள் கொல்லப்பட்டுவிட்டனர். ரசியப் படைகளின் மனநிலை பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டதாகவும் அவர்கள் வெறிகொண்டு அலைவதாகவும் செய்திகள் வெளிவந்தன.

தொடர்ச்சி 15 ம் பக்கம்...

# யேர்மனியில் அன்னைபூபதி நினைவுநாள்



தமிழீழ விடுதலைப் புலிகள் யேர்மன் கிளை அன்னைபூபதியை நினைவுகூர்ந்து கலைநிகழ்ச்சிகளை நடாத்தியது. 20-04-96 அன்று எசன் நகரில் கென்றிமுனான்ட் தெருவில் அமைந்த பல்கலைக் கழக மண்டபத்தில் அன்னை பூபதி அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

காலை பேச்சுப்போட்டி நடாத்த ப்பட்டு, மாலை நடந்த கலை விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன. மிக உருக்கமாகப் பேசித் தங்கள் திறமையை வெளிப்படுத்திய குழந்தைகளுள் ஐந்து வயதுக்கும் குறைந்த இருவர் பலத்த கரகோசங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. எலியாஸ்பிள்ளை, தா. சிவநாதன் ஆகியோரின் கவியரங்கம் சிறப்பாக அமைந்தது.

பொய்க்கால் குதிரை ஆட்டம் இனஉணர்வை வெளிப்படுத்தியது. "கனவு நனவாகிறது" என்ற நடனத் தொகுப்பு, மிகச் சிறந்த முறையில் அமைந்த விடுதலை நடனக் கோத்து என விமர்சிக்கப்பட்டது.

திரு. கண்ணன் அவர்களின் தமிழிசை விடுதலைக் கீதங்கள் மக்கள் மனதைக் கவர்ந்து நிலைத்தது.

பேச்சுப் போட்டிக்கான பரிசுகளை உலகத் தமிழர் இயக்கப் பொறுப்பாளர் காங்கேயமூர்த்தி அவர்களும், கல்விச் சேவைப் பொறுப்பாளர் நாகலிங்கம் அவர்களும், புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் ஆனந்தராஜா அவர்களும் வழங்கினர். ✷

# யேர்மனியில் மே நாள் ஊர்வலம்

விடுதலைப் புலிகளின் யேர்ம னிக்கிளையினர் டுசுல்டோர்ப் நகரில் ஊர்வலம் ஒன்றை நடாத்தினர். தமிழ் மாணவர் கழகம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம், உலகத் தமிழர் இயக்கம் ஆகிய உப அமைப்புக்களும் கலந்து கொண்ட இந்த ஊர்வலத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் உணர்வுடன் கலந்து கொண்டனர்.

தமிழீழத்தில் சிங்கள இனவாத அரசு நடாத்தும் மிலேச்சத்தனமான கொடு மைகளை வரைந்து அவற்றைத் தாங்கியபடி இளம் மாணவர்கள் இனவாதக் கொடுமையை வெளிப்படுத்தினர். தமிழீழத் தேசியக் கொடி இலட்சினை பொறிக்கப்பட்ட கொடிகளை ஏந்தியபடி எம்மை ப்பாதுகாக்கும் தமிழீழ மக்களின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே எனக் கோசமிட்டு நடந்த ஊர்வலத்தில் பொய்க்கால் குதிரை யோட்டம் விடுதலையை மையப்படு த்தி ஆடப்பட்டது.

யேர்மனிய மொழியில் சிங்கள இனவாத அரசின் இனவெறிக் கொடுமை ஒலிபரப்பப்பட்டு உலகத்தின் மத்தியஸ்தமும் சிங்கள இராணுவ வெளியேற்றமும் வலியுறு த்தப்பட்டது.

"மக்களைக் கொன்று புலிகளை ப்பலவீனப்படுத்தலாம் என எண்ணும் சந்திரிகா அரசுக்கு, புலிகள் சரியான பதில் கொடுப்பார்கள்" என கலை பண்பாட்டுக் கழக யேர்மனிக் கிளைப் பொறுப்பாளர் ஊர்வல முடிவில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார். ❊

## யேர்மனியரின் மேதின எழுச்சிவிழாவில் தமிழீழ விடுதலை நடனம்

யேர்மனியரால், டோட்முண்ட் நகரில் நடாத்திய மேதின எழுச்சி விழாவில் தமிழரது மண்மீட்புப் போராட்டம் பற்றிய விடுதலை நடனங்களை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக நடனமணிகள் ஆடினர்.

சிங்கள அரச அடக்குமுறையை யேர்மனிய மொழியில் விளக்கிய புனர்வாழ்வுக் கழக பேச்சாளர் சிவகணேசன் அவர்களது விளக்க ங்களுடன், ஆடப்பட்ட நடன ங்களை ஆர்வத்துடன் வெளிநாட்ட வர் பார்வையிட்டனர். ✷

# தமிழீழ தேசிய ஆன்மா விழித்தெழ சுடர் தாங்கிய நாள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் வரலாற்றுப் பிறப்பின் 20ம் ஆண்டு நிறைவு நாள் விழாவும் தமிழீழ விடுதலைப் போரில் முதற்களப் பலியான பெண்வேங்கை 2ம் லெப் மாலதியின் நினைவாக, பலெர்மோ வில் செயற்படும் கலைப்பள்ளியின் இரண்டாம் ஆண்டு நிறைவுநாள் விழாவும் இணைந்திருந்த தமிழர் எழுச்சிநாள்.

சுதந்திரத்தின் சிகரத்தை நோக்கிய தமிழீழ மக்களின் நெடும்பயணம். அந்த நெடுவழிப்பாதை— எத்தனை சவால்கள்—எத்தனை இன்னல்கள்— எத்தனை அழுத்தங்கள்...... எத்தனை குழிபறிப்புக்கள்... எல்லாவற்றையும் எகிறிக் கடந்து—

இரத்தத்தையும், சாம்பல் மேடுகளையும் சவப்பெட்டிகளையும் தமிழனுக்குத் தந்தவர்களின் தலைவாசல்களுக்கு கண்ணீரையும் கதறலையும் துன்பப்படுவதென்றால் எப்படி இருக்கும் என்பதையும் தமிழன் திரும்பவும் பரிசளித்து நிற்கும் மாற்றப்பட்ட காலம்.. இந்தப் புதுயுகத்தின் மூலம், வீழ்ந்து கிடந்த தமிழனின் வரலாறு எங்களுக்குத் தந்த தலைவன்.. எழுச்சியாய் நிமிரும் புதியதோர் வரலாற்றைத் தமிழுக்குத் தந்துநிற்கும் புரட்சியும் எழுச்சியும் கலந்த இந்த நாள், இத்தாலி சிசிலித்தீவில் பலெர்மோ மாநகரில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

வைகாசித் திங்கள் 5ம் நாள் பிற்பகல் 5.45 மணியளவில் தமிழரின் வீரமிகு அறப்போரைப் பறைசாற்றி எழுந்து நிற்கும் தமிழீழத் தேசியக் கொடியேற்ற லுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மேடையில் 1976ம் ஆண்டிலிருந்து 1996ம் ஆண்டுவரையான போராட்ட வளர்ச்சிப்பாதையை தெளிவு படுத்திக்காட்டும் பிரமாண்டமான ஓவியம் அழகுற எழுந்துநின்றது. சிறுகுழுவாகப் பிறந்து தமிழரின் தேசியப் படையாக வளர்ந்து நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அத்திவாரக்கற்கள் அங்கே பதிந்திருந்தன. இதை ஒரு தமிழ் இளம் ஓவியர் வரைந்திருந்தர். இரு தசாப்தங்களாக செங்குருதி நிலத்திலே சிந்தி சவால்கள் வென்றுநிமிரும் போராட்ட வாழ்விலே தமது இனிய உயிர்களை அர்ப்பணித்து எமது மண்ணுக்கு வளம் சேர்த்த மாவீரர்களுக்காவும் தேசமீட்புப் போரில் தமது ஆற்றல்களுக்கு மீறித் தம் உயிர்களைக் கொடுத்த எம் தேசமக்களுக்காகவும் இரு நிமிட அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து தமிழரின் பாரம்பரிய கலைபண்பாட்டு விழுமியங்களைச் சித்தரித்துக் காட்டும், எம் மண் மணம்கமழும் கலாநிகழ்வு களைக்காண அங்கு வருகை தந்திருந்த இத்தாலிய மக்களை வரவேற்று நல்வரவு உரைக்க ப்பட்டது.



தாயகவுணர்வு நெஞ்சினில் எரிய அங்கு வருகை தந்திருந்த எம்மினமக்கள், சிறார்களின் கலைத்திறன் காண ஆவலுடன் எதிர்பார்த்திருக்க அஞ்சலி வணக்க நடனம் நடந்து முடிந்தது. பரதாஞ்சலி அரங்குவிட்டுச்செல்ல, தமிழர் கலைபண்பாட்டுக் கழகக் கலைஞர்களின் ஒருங்கிணைந்த முயற்சியின் பயனாக வழங்கப்பட்ட எழுச்சிகானங்கள் இசைநிகழ்வு, அனைவரது பாராட்டுக்களையும்


தொடர்ச்சி 15 ம் பக்கம்

# நோர்வேயில் அடையாள அமைதி ஒன்றுகூடல்

சிறிலங்கா அரசின் தமிழ் மக்களுக்கெதிரான இனப்படு கொலையைக் கண்டித்து, நோர்வே பிரதம மந்திரி அலுவலகத்தின் முன்பாக அடையாள அமைதி ஒன்று கூடல் நிகழ்த்தப்பட்டது.

சிறிலங்கா அரசு நடாத்தும் கோர இனவெறித் தாண்டவத்தினை அனைத்துலக சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும் முகமாகவும், சிறிலங்கா அரசின் இராணுவ அட்டூழியத்தினை நிறுத்தி தமிழ் மக்களின் உயிர், உடமை இழப்புக்களைத் தவிர்ப்பத ற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு நோர்வே அரசினைக் கோரும் முகமாகவும் இவ் அடையாள அமைதி ஒன்றுகூடல் நிகழ்த்தப்பட்டது. இதில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

நோர்வேயில் நடைபெற்ற மேதின ஊர்வலத்தில் சிறிலங்கா அரசு நடாத்திக் கொண்டிருக்கும் தமிழ் இனப்படுகொலையை அம்பல ப்படுத்தும் வகையில் காயக்கட்டு ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. அவ் ஊர்வலத்தின் ஒருபகுதியைக் கீழே காணலாம். ✷




# நெதர்லாந்தில் டென்காக் பாராளுமன்ற முன்றலில் உண்ணாவிரதம்

நெதர்லாந்தின் டென்காக் நகரத்தில் அமைந்துள்ள பாராளுமன்ற முன்றலில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்தக் கோரி கடந்த மே திங்கள் 3ஆம் நாள் தொடக்கம் சுழற்சி முறை உண்ணாவிரதம் ஒரு வாரமாக நடைபெற்றது. இவ் உண்ணாவிரதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த நெதர்லாந்தில் உள்ள பெரிய செய்தி நிலையமான ஏ.என்.பி. மற்றும் பல செய்தி நிறுவனங்கள் சமூகமளித்து உண்ணாவிரதிகளிடமும், தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ப்பொறுப்பாளருடனும் செவ்வி எடுத்தார்கள். டென்காக் மாநில வானொலி நிலையத்தினரும் இவ்வுண்ணாவிரதத்திற்குச் சமூக மளித்து செவ்வி கண்டுள்ளார்கள். காலநிலை கடும் குளிராக இருந்தபோதிலும் தொடர்ச்சியாக சுழற்சிமுறை உண்ணாத விரதம் நடைபெற்றது.

தமிழ் மக்கள் மீதான தாக்குதலை உடன் நிறுத்தக்கோரியும், தமிழ் மக்களின் தேசிய சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கக் கோரியும் நெதர்லாந்து தமிழ் மக்கள் சார்பில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் ஒரு மகஜர் ஒன்று வெளிநாட்டு அமைச்சுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. இவ்வு ண்ணாவிரத நிகழ்வுகளை நெதர்லாந்து வானொலி நிலைய த்தினரும், செய்தியாளர்களும் முக்கிய த்துவம் கொடுத்து வெளியிட்டி ருந்தனர். இவ்வுண்ணாவிரத இறுதி நாளான 08.05.96 அன்று ஓர் ஒன்றுகூடலும் நடைபெற்றது. ✷

# தியாகி பொன் சிவகுமாரன் அவர்களின் 22ம் ஆண்டு நினைவு

**1974** ஆனித் திங்கள் 5ம் நாள்.... தமிழீழம் ஒரு புறம் பெரும் சோகத்தில் மூழ்க, மறுபுறம் தமிழ்மக்கள் விடுதலைக்காய் எழுச்சி கொண்டெழுந்த மறக்கமுடியாத பொன்னாள். சிறிலங்காவின் கூலிப்படைகள் தமிழீழமெங்கும் தமிழ் இளைஞர்களை வேட்டையாடித் திரிந்த காலம் அது. தமது சொந்தப் பிழைப்பிற்காகத் தம்மினத்தையே சிங்களக் கூலிப் படைகளுக்குக் காட்டிக் கொடுத்து, மிகக்கீழ்த்தரமான அரசியல் நடாத்திய எட்டப்பர் கூட்டம் மலிந்த காலம். தமிழர்களை அடிமைப்படுத்தி இனஅழிப்புச் செய்துவந்த சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய தியாகி சிவகுமாரன் அவர்கள் களப்பலியான நாள். இன்று இந்நாள் 22 ஆண்டுகளைச் சந்தித்து விட்டாலும் இந்நாளின் சிறப்புக்குரிய மாவீரனை, தியாகி சிவகுமாரனை விடுதலையை வேண்டி நிற்கும் தமிழினம் என்றும் மறக்காது நினைவுகூர்ந்து நிற்கின்றது.




# சுவிசில் கலைமாலை நிகழ்ச்சியும் மேதின ஊர்வலமும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினரால் கடந்த சித்திரைத் திங்கள் 28ஆம் நாள் சூரிச் நகரில் நிவாரண உதவிக்கான கலைமாலை நிகழ்வு நடாத்தப்பட்டது. தேசியக் கொடியேற்றல், அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து, மங்கள விளக்கினைச் சுவீடனிலிருந்து வருகை தந்திருந்த பேராசிரியர் திரு. பீற்றர் சால்க் அவர்கள் ஏற்றிவைத்தார். சுவிசில் முதல் தடவையாக 'வீணாகானம்' நிகழ்ச்சி மேடையேற்றப்பட்டது. அது காதிற்கு இனிமையையும் உணர்விற்குப் புரட்சியையும் ஊட்டியது. கவிதை, பேச்சு, நடனம், கரகாட்டம், வில்லுப்பாட்டு, நாடகம் என நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பாக அமைந்திருந்தன. சிறப்புரையாற்றிய முன்னாள் 'ரூபவாகினி' தலைவர் திரு. வசந்தராஜா அவர்கள் ப்பட்டன.முதலிரு இசைத்தட்டுக்களையும் திரு. வசந்தராஜாவும் திரு. பீற்றர் சால்க் இருவரும் மகளிர் அணியினரிடம் இருந்து பெற்றுக் கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. ந. முரளிதரன் அவர்கள் தடுப்புக் காவலில் இருந்து தனது குடும்பத்தாரிற்கும், நண்பர்களிற்குமாக எழுதிய கடிதம் வாசிக்கப்பட்டது. அதில் அவர், தனது நிலைகண்டு சோர்ந்து விடாது, வேலைத்திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வீர்கள் என்ற நம்பிக்கை தனக்குண்டு என்றும், "வரலாறு தன்னை விடுதலை செய்யும்" என்ற தனது நம்பிக்கையையும், மன உறுதியையும் அதில் தெரிவித்துக்கடிதத்தை முடித்திருந்தார்.

விடுதலைப் புலிகள் கலை



பண்பாட்டுக் கழக சுவிஸ் கிளையினரின் 'தாயுமானவர் நாயுமானவர்' என்ற நாடகம், பெண் ஒடுக்குமுறையைக் கருவாகக் கொண்டு சிறந்த முறையில் நெறியாள்கை செய்யப்பட்டிருந்தது. இடைவேளையைத் தொடர்ந்து வந்த புரட்சிப்பாட்டுப் போட்டி நிகழ்வில் 13பேர் கலந்துகொண்டு சிறப்பாகப் பாடினர். அதில் மிகத்திறமையாகப் பாடிய மூவர் நடுவர்களால் தெரிவு செய்யப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியின் மூலம் வன்னிப் பெருநிலப்பரப்பில் உதவியை நாடி நிற்கும் மக்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுத்திட வகை செய்ய 37,000 சுவிஸ் பிராங் நிதி சேகரிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. ✷

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

## யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராசா



சிங்களப் பேரினவாதத்தின் தமிழின அழிப்பின் மத்தியிலும், கல்வி வசதிகள் மறுக்கப்பட்ட நிலையிலும் யாழ் பல்கலைக்கழகத்தினைத் தொடர்ந்து திறம்பட இயங்கச்செய்து, ஆறு ஆண்டுகள் துணை வேந்தராகப் பதவி வகித்து தமிழ் மாணவச் சமுதாயத்திற்கும், தமிழீழ மண்ணிற்கும் பேராசிரியர் அ.துரைராசா அவர்கள் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. தனக்குக் கிடைத்த வாய்ப்புக்களை எல்லாம் தன் உயர்வுக்காகப் பயன்படுத்தாது, தன்னின விடிவிற்காகவும், தமிழீழ தேசநிர்மாணத்திற்காகவும் பயன்படுத்தி, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தன் சேவைகளைப் பதித்துக்கொண்ட எமது பேராசானைத் தமிழினமும், தமிழீழமும் என்றுமே மறக்க முடியாது. சுகவீன நிலையிலும் தன் வரலாற்றுக் கடமையைச் சிறப்பாகச் செய்து, தமிழ் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் பேராசான் கால் பதித்துச் சென்ற யாழ் பல்கலைக்கழகத்தில் இன்று சிங்களப் பேரினவாதப் பூதங்கள் குடிகொண்டுள்ளன. அப் பேரினவாதப் பூதங்களை அம் மண்ணிலிருந்து விரட்டி, பேராசான் விட்டுச்சென்ற யாழ் பல்கலைக்கழகத்தின் கல்விப் பாரம்பரியத்தைத் தொடர்வதே அவருக்குத் தமிழினம் செய்யும் உண்மையான அஞ்சலியாகும். அவ்வழி நாமும் அப்பணியைத் தொடரத் தொடர்ந்து போராடுவோம்.

# சுவிசில் தமிழர்களுடன் சேர்ந்து பல்தேசிய இனங்களுடன் மேதினம்

சுவிஸ் நாட்டின் சூரிச், ஜெனீவா நகரங்களில் தொழிலாளர் தின பேரணிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினரால் நடாத்தப்பட்டன. பல்லாயிரக்கணக்கான பல்வேறு நாட்டு மக்கள் கலந்து கொண்ட இப்பேரணிகளில், சூரிச்சில் நடந்த பேரணியில் தமிழீழ மக்களின் எண்ணிக்கையே அதிகமாகக் காணப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினரின் அழைப்பை ஏற்று சுமார் சுமார் மூவாயிரத்திற்கும் அதிகமான தமிழீழ மக்கள் கலந்து கொண்டனர். சுவிசில் கடந்த பத்தாண்டுகளாக விடுதலைப் புலிகள் அமைப்பு, தொழிலாளர் தின பேரணிகளில் கலந்து கொண்டாலும் இம்முறை முன்னுரிமைகள் வழங்கப்பட்டு பல்வேறு நாட்டுமக்கள் கலந்து கொண்ட பேரணியின் முற்பகுதியில் செல்வதற்கும், பேரணி முடிவில் நடந்த பொதுக்கூட்ட மேடையில் பேசுவதற்கும் மே தின குழுவினர் தெரிவு செய்திருந்தனர்.

பேரணியில் சென்ற மக்கள் தேசியத் தலைவரின் படங்களையும், புலிக் கொடிகளையும், சுலோகங்களையும் தாங்கிச் சென்றனர். பேரணியில் இடையில் எமது பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றான 'கரகாட்டம்' இடம்பெற்றவாறு பேரணி நகர, மக்கள் "எங்கள் தலைவர் பிரபாகரன்" "விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பு இல்லை, அது மக்கள் அமைப்பு", "சர்வதேசமே விடுதலைப் புலிகளை அங்கீகரி", "நடராஜா முரளிதரனை உடனே விடுதலை செய்" போன்ற கோசங்களை இட்டனர். வெகுசனத் தொடர்பு சாதன படப்பிடிப்பாளர்களும் இம்முறை தமிழர்களின் பேரணியை முற்றுகை இட்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

பேரணி முடிவில் நடந்த கூட்டத்தில் அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து அனைத்துலக செயலகத்தினால் விடப்பட்ட அறிக்கை திரு. அல்பேட் அவர்களால் வாசிக்கப்பட்டதுடன் சுவிசின் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றியும், சுவிசில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த 27.04.96 இல் பேர்ணில் நடந்த மக்கள் பேரணி விடுதலைப் புலிகளுக்கு உள்ள மக்கள் ஆதரவை சுவிஸ் மக்களிற்கும் அரசிற்கும் வெளிப்படுத்தி இருக்கும் என்றும், இதேபோல் விடுதலைப் புலிகளிற்கு தமிழ் மக்கள் மீது எவ்வளவு ஆதரவு உண்டு என்பதை நிரூபிக்க இவ் அமைப்புக்களினால் விடப்பட்ட கோரிக்கை சுவிஸ் அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கான வாக்கெடுப்பு ஒன்றும் விரைவில் சுவிசில் நடைபெற இருப்பதாகவும் கூறிய அவர், கனடா வாழ் தமிழீழ மக்கள் அங்கு நடைபெற்ற வாக்கெடுப்பில் 76 வீதமாக ஆதரவை விடுதலைப் புலிகளிற்கு பெற்றுத்தந்தனர் என்றும் ஆனால் சுவிஸ் வாழ் தமிழீழ தேசபக்த மக்கள் 99 வீதமான ஆதரவை பெற்றுத்தருவார்கள் என்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு ஓர் மக்கள் அமைப்பு என்பதை சுவிஸ் அரசிற்கும் உலகத்திற்கும் ஓங்கி ஒலிப்போம் என்றும் அறைகூவல் விடுத்தார். ✷

தனதுரையில், "தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தத் தூண்டியவர்கள் சிங்கள அரசியல்வாதிகள். இன்று இலங்கையில் இன அழிப்பிற்கும் பொருண்மிய அழிவிற்கும் அவர்களே பொறுப்பாளிகள். சந்திரிகாவோ, கதிர்காமரோ நினைப்பதுபோல் வெளிநாடுகளில் செயற்படும் விடுதலைப் புலிகளின் முக்கிய பொறுப்பாளர்களைக் கைது செய்து சிறையில் வைப்பதால் போராட்டத்தை முடிவிற்குக் கொண்டுவர முடியாது, மாறாக மக்கள் எழுச்சியும், விடுதலை உணர்வுமே ஓங்கி நிற்கும் என்பதை நேற்று பேர்ணில் நடந்த மாபெரும் பேரணி, சிங்கள அரசிற்கும், உலகத்திற்கும் உணர்த்தியிருக்கும் என்றும் கூறினார். இந்நிகழ்ச்சியில் புதிய இசைத்தட்டுக்கள் வெளியிட




## வல்லரசுகள்

வல்லரசுகளே
நீங்கள்,
வாழ்வதற்காக
வாழ்பவர்களை
வதைப்பவர்கள்.

உங்கள் வல்லமைகள்
ஆய்வு செய்யப்படுகையில்
வளர்முக நாடுகளே
வாழா வெட்டியாகின்றன.
நீங்கள்
நிலவில்
வரலாறு படைக்க
மண்ணை
மானபங்கம் செய்பவர்கள்.

வறுமையும் பிணியும்
உங்கள்
வருகையால்
வளர்க்கப்படுபவை.

உங்கள்
தேசத்து
செஞ்சிலுவைச் சங்கங்களும்
சேதங்களைச் சேகரிப்பதில்லை.
இருப்புக்களையே
எண்ணிப் பார்க்கின்றன.

உங்கள் நாட்டுக்
கணக்காய்வாளர்கள்
இறப்புக் கணக்குகளை
இருப்புப் பக்கத்தில்
பதிந்து காட்டும்
பட்டதாரிகள்.

உங்களோடு
சம்பந்தம் செய்து கொண்ட
சமாதான நாடுகள்
இங்கு
பிரசவித்துக் கொண்டது
பிரச்சினைகளைத்தான்.

உங்கள்
விமான நிலையங்கள்
விஸ்தரிக்கப்படுகையில்,
எங்கள்
குடிசைகள் அல்லவா
கொளுத்தப்படுகின்றன!

சமாதான நாடுகளில்
சாமர்த்தியமாய்
நுழைந்து
ஆணி வேரை
அறுத்துவிட்டு
வாடாது நிற்க
நீர் ஊற்றுபவர்கள்.

உங்கள்
தலையீடுகளால்
தரைமட்டமாகிப் போன
தேசங்களே
அதிகம்.

நீங்கள் பரவிய
எயிட்ஸ் இங்கே
இயற்கையானதல்ல
என்ற பின்பு,
காற்றும் மழையும் கூட
சந்தேகப் படுகின்றன.

நாளைய செயற்கைப் புயலுக்கு
சொந்தம் கொண்டாடப் போகும்
சர்வதேசப்
பயங்கரவாதிகள் நீங்கள்.

கப்டன் கஸ்தூரி

## நிச்சயம் வெல்வோம்

இது என்ன கொடுமை
தலைவிரி கோலமதாய்
கண்களில் நீர் திரையிட
கைகால்களில் விலங்கோடு
செந்தமிழ்த்தாய் தெருவிறங்கி
வந்து புழுதியிலே புரண்டு
இரத்தக் களரியிலே நனைந்து
புலம்பி அழும் அவலம்
எந்த ஒரு அன்னை தான்
ஈன்றெடுத்த பிள்ளை
மண்டியிடப் பொறுப்பாள்
நின்றடிக்கும் கடலும்
நீண்ட எங்கள் நிலமும்
பண்டு தொட்டு எங்கள்
பரம்பரைச் செல்வமும்
இன்றிழந்து போகவோ?
இன அழிப்புத் தொடரவோ?
சட்டமென்ற சங்கிலியால்
கட்டி வைத்து முதுகினிலே
குத்தி நின்ற ஒற்றையாட்சி
குட்டக் குட்ட குனிந்து நடந்தோம்
அதட்ட அதட்ட அடங்கிப் போனோம்
வெட்ட வெட்ட நாம்
விழுந்து மடிந்தோம்
பட்டுப் பட்டு இன்று
தெளிந்து விட்டோம்
பதிலடி தர நிமிர்ந்து கொண்டோம்
பாறாங்கல்லாய் உறுதி கொண்டோம்
பயணிக்கத் தொடங்கிவிட்டோம்
தறிக்கத் தறிக்கத் தளிர்த்தெழுவோம்
விழுத்த விழுத்த விரைந்தெழுவோம்
புதைக்கப் புதைக்க துளிர்த்திடுவோம்
எரிக்க எரிக்க உயிர் பெறுவோம்
உருக்க உருக்க உலையிட்ட
பொன்னாவோம்
மறுக்க மறுக்க மடையுடைக்கும் ஆறாவோம்
மறைக்க மறைக்க ஒளி கொடுக்கும்
கதிராவோம்
சிவக்கச் சிவக்க செந்தழல் பிழம்பாவோம்
ஒறுக்க ஒறுக்க நிலம் பிளக்கும் கடலாவோம்
முட்ட முட்ட மோதி எதிர்ப்போம்
தட்டத் தட்ட தலைகள் உடைப்போம்
எட்ட எட்ட எங்கள் எல்லைகள் தொடுவோம்
எங்களின் இலட்சியம்
நிச்சயம் வெல்வோம்.

சித்திரா மணிவண்ணன்

## நாங்கள் அடிமைகளல்ல!!

இன்று நாங்கள் குடிசையில்
வாழ்கின்றோம்.
ஆனாலும் எங்களூர்ப்
பாலை மரத்தினால்தானே
கொட்டில் போட்டு வாழ்கின்றோம்.

சின்னச் சின்னப் பாதங்கள்
ஓடி ஓடி விளையாடி
மகிழ்கின்றன!
உருண்டு புரண்டு.......
புழுதியில் புதையும் பாதங்களை
மிடுக்கோடு தூக்கி

மீண்டும்......
ஆம்!
இது சொந்த மண்-அந்த
உரிமை அவர்களுக்கு உண்டு.

வாழையும் கத்தரியும்
வரிசையாய் நிற்கின்றன-அவை
ஆழவேரோடி உறுதியாய்
நிற்கின்றன!
தளராத பாதங்கள்
பட்ட மண் ஆகையால்.
ஓலைக் குடிசையிலே
உறங்கினாலும்
கூழைக் காய்ச்சி நாம்
குடித்திட்டாலும்,
ஏழை என்ற பெயர் மட்டுமே
கேட்கின்றோம்!
வானக் கழுகுகள் வட்டமிட்டு
எங்கள் உயிரை
வாங்கிச் சென்றாலும்,
உணர்வே கலந்த உடலங்கள்
எம் மண்ணில்
புதைக்கப்படும்!
மீண்டும் மீண்டும் நாங்கள்
எருவாகி, கருவாகி,
தன்மானம் உயிராகி.......
தலை நிமிர்வோம்.

கோடி இன்னல் எம்மை
நாடி வந்தாலும்,
குந்தி இருப்பது
சொந்த நிலம்!
அந்த உரிமையுடன்
வாழும் வரை -நாங்கள்
அகதிகள் மட்டுமே!
அடிமைகளல்ல!!

தமிழீழத்திலிருந்து
செல்வி.சி. இரத்தினேஸ்வரி

# திருமலை பிரதேச இராணுவ முகாம்கள் மீது விடுதலைப்புலிகளின் தொடர் தாக்குதல்கள்

திருமலை மாவட்டத்தில் பிக்காரோ எனும் இராணுவ முகாம், 27-05-96 அதிகாலை விடுதலைப் புலிகளின் அதிவேக அதிரடித் தாக்குதலில் முற்றாக அழிக்கப்பட்டது. இத் தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலின்போது பல நவீன ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

கடந்த ஆண்டு மே மாதம் 27ம் திகதி தரவை இராணுவ முகாம் தாக்குதலின் போது வீரச்சாவடைந்த லெப். கேணல் விநோதன் உள்ளிட்ட 18 வீரவேங்கைகளின் நினைவாக இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. பிக்காரோ இராணுவ முகாம் தாக்குதலுக்குள்ளானபோது உதவிக்கு வந்த கல்லாறு, கிற்றாறு இராணுவ முகாம்களைச் சேர்ந்த இராணுவப் படையணி மீதும் விடுதலைப் புலிகளின் பிற அணிகள் தாக்குதல் நடாத்தின. இத்தாக்குதலில் ஒரு இராணுவத்தினன் கொல்லப்பட, பலர் படுகாயமடைந்தனர்.

இவ் வெற்றிகரமான முகாம் தாக்குதலின்போது,

இரண்டாம் லெப். அலெக்சாண்டர்

வீரவேங்கை தம்பித்துரை

வீரவேங்கை ரமேஸ்ராஜ்

வீரவேங்கை சின்னகுமரன் ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

### கென்றி பண்ணை முற்றாக அழிப்பு

18-05-96 அன்று இரவு மணலாற்றுப் பிரதேசத்தில் கென்றி பண்ணையில் அமைந்திருந்த இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது. இதன்போது பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட சேத விபரம் அறியப்படவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில்,

கப்டன் போர்முரசு அல்லது சுபங்கை(தேவசகாயம் திவ்ய லோஜினி உருத்திரபுரம், கிளிநொச்சி).கப்டன் அன்பழகன் (தியாகராசாகாந்தன், கொக்குவில்)ஆகிய இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

### திகிலக் கடவை முகாம் தாக்கியழிப்பு

19-05-96அன்றிரவு திகிலக்கடவை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் 16 படையினர் பலியானதுடன் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. பன்குளம், திரியாய் தமிழ்க் கிராமங்களை கூறுபோட அமைக்கப்பட்ட திகிலக்கடவை என்ற சிங்களக் கிராமத்தைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட இராணுவ முகாமே தாக்கப்பட்டது. பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இவ் வெற்றிகரமான தாக்குதலில் 7 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

மேஜர் புலித்தேவன் (மாணிக்கம் செல்வமாணிக்கம், மட்டக்களப்பு)

கப்டன் விஸ்ணு (சிவநாதன் முகிலேஸ், திருகோணமலை)

கப்டன் புரட்சி (அந்தோனிப்பிள்ளை ஜெயசீலன், மன்னார்)

லெப். மதிவாணன் (இராசேந்திரன் ரூபதரன், புங்குடுதீவு, யாழ்)

லெப். திருவாளன் (இராசையா யோகராசா, பளை, யாழ்)

லெப். சந்திரகுமாரன் (இராஜேந்திரன் செல்வகுமார், ஓமந்தை, வவுனியா)

வீரவேங்கை அகிலேசன் (மாணிக்கராசா சரத்குமார், இணுவில் கிழக்கு, யாழ்.)

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் துறைமுகத்திற்கு அருகே அமைந்திருந்த, இராணுவ பொலிஸ் காவல் நிலையொன்று 23.05.96 அன்று விடுதலைப் புலிகளால் முற்றாக தாக்கியழிக்கப்பட்டுள்ளது. ஒரு பொலிசார் கொல்லப்பட்டார்.

சில ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இவ் வெற்றிகரமான தாக்குதலின்போது 2ஆம் லெப். அல்வார் (கோணலிங்கம் ஆனந்தராசா, திருகோணமலை) வீரச்சாவடைந்தார்.

தாய் மண்ணை மீட்கும் புனிதப்போரில் வீர விதைகளாகி விழுந்த மறவர்களுக்கு எமது வீரவணக்கங்கள். ✷

உள்ளடக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள '900 நாட்கள் முற்றுகை' என்ற விடயம் தவிர்க்க முடியாத காரணத்தினால் இச் செய்தித் தாளில் இடம் பெறவில்லை என்பதை வாசகர் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

## தமிழீழ தேசிய ஆன்மா...

பெற்றது. இசைக் கோர்வைகள் எவ்வித உடைவுமின்றி தெளிவாக வந்து அனைவரது இதயத்திற்கும் ஒற்றடம் தந்தன.

இசையால் நனைந்திருந்தோரைத் தட்டி, அங்கு வந்த மாலதி கலைப்பள்ளி மாணவி, அரங்கேறிய அனைத்துக் கலைப்படைப்புக்களையும் விளக்கி, அவை தாங்கிநிற்கும் கருத்துகளையும் இத்தாலிய மொழியில் வழங்கினார். தொடர்ந்து தமிழீழமக்களின், தமிழீழம் நோக்கிய தியாக வேள்வியில் அவர்களது உறுதிப்பாட்டிற்கு, போராட்டப்பற்றுணர்வுக்கு மீண்டும் சவாலாகவும், சோதனையாகவும் எழுந்த சூரியக்கதிர், எழுந்த காரணத்தையும் அது ஆற்றாமற் போனகாரியம் பற்றியும், இனி! தமிழ்மக்களாகிய நாம் செய்ய வேண்டிய பணி என்ன? என்பது பற்றியும், தமிழீழ விடுதலைப் புலிகள் வரலாற்றுத் தோற்றத்தையும், உலகில் எந்த விடுதலை இயக்கமும் ஒரு குறுகிய காலத்துள் படைத்திராத சாதனைகள் பற்றியும், அவற்றுக்கு அடித்தளமாக மாவீரர்களதும் மக்களதும் உயிர்க்கொடைகள் பற்றியதுமான விளக்கவுரை, சிறப்புரையாக அமைந்தது. அடுத்து இன்னும் இங்கு எமது தாயகம் நோக்கிய பணியில் தமது கரங்களை இணைக்காமல் போலி மாயைகளில் அமிழ்ந்திருக்கும், எமது மக்களை, குறிப்பாக இத்தாலிவாழ் தமிழீழப் பெண்களை நோக்கி, அவர்களைத் தமிழீழத்திற்கு இங்கிருந்து செய்யவேண்டிய கடமைகள் பற்றியும், சர்வதேச அங்கீகாரத்திற்கான பணிகளுக்குச் செயற்பட வரும்படி, இத்தாலி தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவுடன் இணைந்து செயற்பட்டு வரும் இத்தாலிய சகோதரி செல்வி பிரென்செங்கா வென்சா அவர்கள் அழைப்புவிடுத்தார். அவரது உரை தமிழில் மொழிபெயர்த்துக் கூறப்பட்டது.

அடுத்து இத்தாலிய மக்கள், தமிழீழ மக்கள் என அனைவரையும் ஒரு சேரக்கவர்ந்து தமக்கென தனிச்சிறப்பைப் பெற்றுவிட்ட 2ம் லெப். மாலதி கலைப்பள்ளி மாணவிகளின் கலாநிகழ்வு அரங்கை அலங்கரித்து அழகுபடுத்தி அதிரவைத்தன. கடந்த 1994ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பல இடையூறுகள், தடைகளுக்கிடையில் அவற்றைச் எதிர்த்துச் செயற்பட்டு வரும் மாலதி கலைப்பள்ளியின் 2வது ஆண்டு நிறைவும், அந்த இரு ஆண்டின் செயற்பாட்டின் பெரும்பயன், அம்முயற்சியின் வெளிப்பாடு எழுச்சியின் நிகழ்வுக்கு மெருகு கூட்டிற்று.

ஆடிய சிறார்களின் நடனங்கள் அனைத்தும் அங்கு வந்திருந்து அனைவரது மனங்களிலும் ஆழமான உணர்வலைகளைத் தோற்றுவித்தன. பிஞ்சுகளின் ஆர்வமான ஈடுபாடும் திறமையும், இவற்றை வெளிக் கொணர்ந்த நெறியாளரும், மாலதி கலைப்பள்ளியின் ஆசிரியருமான திருமதி பாலசிறி அவர்களது அயராத பணியும் சேர்த்து கலைப்பள்ளியின் திறமைக்கும், வளர்ச்சிக்கும் ஆதாரமாக அமைந்தன. "அலாரிப்பு" என்னும் பரதநாட்டிய முதல் நடனத்தை வெகுதிறமையாக வெளிப்படுத்திச் சென்ற சிறுமிகள் "ஆடிப்பாடுவோம் கூடிப்பாடுவோம்", "ஓ தமிழா.....", "நிலவிற் புதிய கவிதை....", "பச்சை மலைகள்" ஆகிய பாடல்கள் மாணவிகளின் பரதநாட்டிய அபிநயத்தில் உயிர்ப்புற்றன. "ஒரு நாள் விடியும்" என்ற பாடலுக்கும் திலீபன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் இசை அசைவு வழங்கிச் சிறப்பித்தனர்.

இறுதிக் கலை நிகழ்ச்சியாக, தமிழர் கலை பண்பாட்டுக் கழகக் கலைஞர்கள் வழங்கிய "சுமைகள்" நாடகம் மேடையேற்றப்பட்டது. தமிழீழப் போரின் ஆரம்பநாட்கள் போராட்டம் பற்றி மக்கள் விழிப்புற்றிருக்காத வேளை, வெறும் மேடைப்பேச்சுக்களில் மயங்கியிருந்த மக்களின் மாயைத்திரை கிழித்து, போராட்டத்தில் அணியாகத் தம்மைக் கொடுத்து வலு சேர்த்த தியாகி சிவகுமாரன் தொடக்கம் தனது மரணத்தைத் தானே முடிவுசெய்து இலக்கை இம்மியும் பிசகாது முட்டுகின்ற கரும்புலிகள் வரை, காட்சிகள் சித்தரிக்கப்பட்டிருந்தன. அங்கு வந்திருந்த இத்தாலிய மக்கள், எமது போராட்டத்தின் நியாயத்தைப் புரிந்துகொள்ள இந்நாடகம் பெரிதும் உதவியமை சிறப்பாகும். அதில் பங்குகொண்ட கலைஞர்களின் பாத்திர ஒற்றுமை இவ்வெற்றிக்கு மூலகாரணமாக அமைந்ததும் நெறியாளரின் முயற்சிக்கு வெற்றியாகும். இறுதியாக இரவு 11.20 மணியளவில் தமிழீழ தேசியக்கொடி இறக்கலுடன் எழுச்சிவிழா முடிந்தது. அது தோற்றுவித்த எழுச்சியைத் தாங்கி மக்கள் சென்றமை குறிப்பிடத்தக்கது. ✷

## துப்பாக்கி முனையில் ...

### ஆக்கிரமிப்புப் பகுதியில் மக்களின் அவலம்

இதேபோல யாழ். குடாநாட்டிலும் இராணுவத் தடைகளினால் சிவந்த பச்சை அரிசி - புழுங்கல் அரிசி என்பன ஒரு கிலோ 80, 90 ரூபாக்களாகவும் வெள்ளை அரிசி 55 ரூபாவாகவும் உயர்ந்துள்ளதுடன் இவ் விலைகளுக்குக்கூட எடுக்க முடியாமல் இருப்பதாகவும், தொழில்களுக்கு செல்ல முடியாத மக்கள் அன்றாடச் சீவியத்திற்கே அல்லற்படுவதாகவும், பாடப்புத்தகங்கள், எழுதுகருவிகள் அற்றநிலையில் மாணவர்களின் கல்வி மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. உண்மை நிலமை இப்படி இருக்க, யாழ். குடாநாட்டில் மக்களின் வாழ்க்கை சாதாரண நிலைக்குத் திரும்புவதாக சிறிலங்கா அரசு தெரிவித்துள்ளது.

### வன்னியில்மக்கள் மீளக்குடியமர்த்தலுக்கு சிறிலங்கா அரசு முட்டுக்கட்டை

சிறிலங்கா அரசிடம் 5000 பீப்பாய் மண்ணெண்ணையை அனுப்பிவைக்கும்படி கிளிநொச்சி அரச அதிபர் கேட்டமைக்கு, சிறிலங்கா பாதுகாப்பமைச்சு 2550 பீப்பாய்களை மட்டுமே அனுமதித்துள்ளது. தமிழர் பிரதேசங்களுக்கு உணவு, மருந்து, எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பப்படுவது கூட சிறிலங்காவின் பாதுகாப்பமைச்சாலேயே தீர்மானிக்கப்படுகிறது. அஃதாக ப்பட்டது தமிழர் பிரதேசங்களை இராணுவ ஆட்சிக்குள் கொண்டு வரவே சிறிலங்கா அரசு முயற்சிக்கின்றது என்பதற்கு இது சிறந்த உதாரணமாக அமைகிறது.

இது இவ்வாறு இருக்க, பிரான்சிய வெளிநாட்டு அமைச்சிடமும் சுவிஸ் பாராளுமன்ற அதிகாரிகள் குழுவிடமும் சிறிலங்கா அரசு, தான் வடக்கு-கிழக்கில் சகஜ நிலையைத் தோற்றுவித்துள்ளதாகக் கூறி அகதிகளை திருப்பி அனுப்பி வைக்கும்படி கேட்டு வருகிறது.

### தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ உலகத் தமிழ் மக்களின் குரல்

அன்று முதல் இன்றுவரை தமிழ் மக்களை அவர்களது தாயகத்திலேயே இரண்டாந்தர அல்லது நாடற்ற மக்களாக்கும் நோக்கிலோ அல்லது இராணுவத் தீர்வை தமிழ் மக்கள் மீது திணிக்கும் நோக்கிலோ சிறிலங்கா அரசின் போக்கில் எதுவித மாற்றமும் இல்லை என்பதை நடைமுறைச்சம்பவங்கள் தொடர்ந்து தெளிவாக்குகின்றன. அதனால் போர் தம்மேல் திணிக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் வாழ்வுக்காகப் போராடுகிறார்கள். இதனைத் சர்வதேச நாடுகளுக்கு உணர்த்தி தமிழீழ மக்களின் உயிரையும், உடலையும் பாதுகாக்கும்படியும் நீதியான அமைதி, பாதுகாப்புடன் வாழக்கூடிய நிலை ஏற்பட உதவும்படியும் உலகத் தமிழ் மக்கள் குரல் எழுப்பி வருவது தற்பொழுது வேகமாக பலமடைந்து வருகிறது. ✷

## திருப்பு ...

இப்போது பேர்வோமய்ஸ்க் கிராமத்தில் நடைபெற்ற படையெடுப்பின் படுதோல்வி எல்லாவற்றிலுமே ஒரு திருப்புமுனையாகிவிட்டது. திடீரென எல்லா நிலைமைகளும் தலைகீழாக மாறிவிட்டன. இப்போது செச்சென்யாவில் உள்ள ரசியப் படைத்தளபதி தாம் ரசியா திரும்பும் காலம் நெருங்குவதாகக் கூறுகிறார். செச்சென்ய மக்களோ குறோஸ்னிக்குள் புகுந்து தரைமட்டமாக்கப்பட்டு ரசியக் கொடியேற்றப்பட்ட அதிபர் மாளிகையின் முன்னால் தொடர்ந்து ஐந்து நாளாக "ரசியப் படையே திரும்பிப்போ" என ஆர்ப்பாட்டப் பேரணிகளை இடைவிடாது நடத்தி யுள்ளனர். மக்களோடு மக்களாக பெருமளவில் போராளிகளும் குரோஸ்னியின் மையப்பகுதிக்கு வந்துவிட்டதாகத் தெரிகின்றது.

இப்போது செச்சென்யச் சிக்கலுக்கு அமைதிவழியிலே தீர்வு என யெல்ட்சின் கூறத்தொடங்கிவிட்டார். கடும் போக்காளராகக் காட்சியளித்த பாதுகாப்பு அமைச்சர் பாவெல் கிரெச்சேவ் கூறுவதைக் கேளுங்கள், கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட நிலையில் எல்லாப் பழியும் தன்மேற் போடப்படும் என்றுணர்ந்த ஜெனரல் "இப்போது படையெடுப்பு நடந்து ஒருவருடம் முடிந்த பின்னர் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் செச்சென்யா மீதான இராணுவ நடவடிக்கையை ஆதரித்தவனல்ல. அதுவும் அவசரம் அவசரமாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு நான் பணிந்தேன்" என்கிறார் பாவெல் கிரெச்சேவ். இப்போது எமது மனக்கண்ணிலே யெல்ட்சின்களும், கிரெச்சேவ்களும், சந்திரிகாக்களும், தளுவத்தைகளும், ரத்வத்தைகளும் மாறி மாறித் தோன்றக்கூடும். ஏனென்றால் எவையெல்லாம் எவ்விதம் செச்சென்யாவில் நிகழ்ந்ததோ அவ்விதமே அவையெல்லாம் இங்கும் நிகழ வாய்ப்புக்கள் உண்டு. ✳

# கொழும்புக்கு கடற்புலி சென்றது - பகை கோட்டையின் வாசலை வென்றது!



கடற்கரும்புலி
லெப்டினன்ட் கேணல் ரதீஸ்



கடற்கரும்புலி
மேஜர் ரதன்



கடற்கரும்புலி
மேஜர் பொய்யாமொழி

**எதிரியவன் இதயத்தில் விழுந்த அடி - இவர் இடித்த இடி எழமுடியாப் பெரிய இடி!**



கடற்கரும்புலி
மேஜர் ஜனார்த்தனன்



கடற்கரும்புலி
மேஜர் ரவாஸ்



கடற்கரும்புலி
மேஜர் பரன்

**துணிந்து கடற்கரும்புலிகள் வெடி சுமந்தார் - கொழும்புத் துறைமுகத்துள் இவர்களெல்லாம் உயிர்துறந்தார்!**



கடற்கரும்புலி
கப்டன் மதனி



கடற்கரும்புலி
கப்டன் சுபாஸ்



கடற்கரும்புலி
கப்டன் விக்கி


T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-9463
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-348 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 580 8224